


புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 ஆகஸ்டு 07, 2008 புரட்சி 7 முழக்கம் 32 விலை : ரூ.2.50


சென்னை மாநாட்டில் கோரிக்கை

## பேரறிஞர் அண்ணா நூற்றாண்டில்

# தூக்குதண்டனை விடைபெறட்டும்!

அய்.நா.வின் சர்வதேச கோரிக்கையை ஏற்று, இந்தியாவில் தூக்கு தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று சென்னையில் நடைபெற்ற மரண தண்டனை ஒழிப்பு கோரிக்கை மாநாடு, மக்களின் கரவொலிக்கிடையே ஒருமித்து தீர்மானம் நிறைவேற்றியது. ராஜீவ் கொலையில் குற்றம்சாட்டப்பட்டுள்ள பேரறிவாளன், சாந்தன், முருகன் மீதான தூக்கு தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்றும் மாநாட்டில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2.8.2008 சனிக்கிழமை மாலை தியாகராயர் நகர் சர்.பிட்டி.தியாகராயர் அரங்கில் மரணதண்டனை ஒழிப்பு மாநாடும், ராஜீவ் கொலை வழக்கில் சிறையில் இருக்கும் பேரறிவாளன் எழுதிய ‘சிறை கொட்டடியிலிருந்து ஒரு முறையீட்டு மடல்’ (ஆங்கில பதிப்பு) நூல் வெளியீட்டு விழாவும், எழுச்சியுடனும் உணர்ச்சியுடனும் நடந்தது. திராவிட இயக்கத் தமிழர் பேரவை, இந்த மாநாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தது. பிற்பகல் நான்கு மணியிலிருந்தே அரங்கம் நிரம்பி வழியத் தொடங்கி விட்டது. ‘தமிழ் முழக்கம்’ சாகுல் அமீது தலைமை தாங்கினார். ஜெயலலிதா பார்ப்பன ஆட்சியில் ‘பொடா’வில் சிறைப்படுத்தப்பட்டு, ஒன்றரை ஆண்டுகாலம் சிறையிலிருந்தவர் சாகுல் அமீது, தனது வரவேற்புரையில் சிறையில் வாடும் பேரறிவாளன் பற்றியும், அவரது பெற்றோர்களும், தமிழின உறவுகளும், சந்திக்கும் துயரங்கள் பற்றியும் குறிப்பிடுகையில் நெகிழ்ச்சியுற்று, கண்ணீர் மல்கி உரையைத் தொடர முடியாமல் நிறுத்திக் கொண்டார். அன்புத் தென்னரசன் மரண தண்டனையை ஒழிக்க வேண்டும் என்பதற்கான வாதங்களை முன் வைத்து, தனது வரவேற்புரையை நிகழ்த்தியதோடு நிகழ்ச்சிகளையும், தொகுத்து வழங்கினார். பேரவையின் பொறுப்பாளர்கள் கயல் தினகரன், எழில். இளங்கோவன், அ.இல. சிந்தா ஆகியோர் உரையைத் தொடர்ந்து தோழர் தியாகு உரையாற்றினார். தூக்கு தண்டனைக்கு எதிராக கவிஞர் தாமரை எழுதிய சிறப்பான கவிதையைப் படித்து, தனது உரையைத் தொடங்கிய தியாகு, ராஜீவ் கொலை வழக்கில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளில் உள்ள முரண்பாடுகளை சுட்டிக்காட்டியதோடு, ‘அரிதிலும் அரிதான வழக்கு’ என்ற வரையறைக்குள், இந்த வழக்கு எப்படி வர முடியும் என்ற வினாவை எழுப்பினார். தமிழக முதல்வர் கலைஞர், அண்ணா பிறந்த நாளில் ஒவ்வொரு முறையும் 10 ஆண்டுகாலம் சிறையில் கழித்த ஆயுள் தண்டனை கைதிகளை அரசியல் சட்டத்தின் 161வது பிரிவு வங்கியுள்ள உரிமையின் கீழ், விடுதலை செய்து வந்ததை சுட்டிக்காட்டினார். கைதிகளின் மனித உரிமையிலும், தூக்குத் தண்டனை ஒழிப்பிலும் கொள்கை பூர்வமாக ஏற்புடைய முதல்வர் கலைஞர், அண்ணாவின் நூற்றாண்டில் தூக்கு தண்டனையை ஒழிக்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இயக்குனர் சீமான் தனது உரையில், இந்தியாவில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர்களில் எவராவது பார்ப்பனர் இருந்திருந்தால் தூக்குத் தண்டனையை ரத்து செய்திருப்பார்கள். தூக்கு தண்டனையயானாலும் ஆயுள் தண்டனையயானாலும், சிறையை நிரப்பிக் கொண்டிருப்பவர்களானாலும் அதில் தொடர்புடையவர்கள் எல்லோரும் பார்ப்பனரல்லாத ஒடுக்கப்பட்ட மக்கள் என்பதால் இங்கே மனித உரிமைச் சட்டங்கள் திரும்பிப் பார்க்க மறுக்கின்றன என்று குறிப்பிட்டார்.

“மரணம் என்பது ஒரு முடிவு; அது எப்படித் தண்டனையாகும்? உண்மையில், தூக்கு தண்டனை யில் தண்டிக்கப்படுபவர், தூக்கிலிடப்படுபவர் அல்ல; அவரது வாழ்க்கை முடிந்து விடுகிறது. ஆனால், அதில் தண்டிக்கப்படுவோர், தூக்கிலிடப்பட்டோரின் குடும்பத்தார் தான். இங்கே பேசிய தோழர் தியாகு - தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர் தான்; அவர் தூக்கிலிடப்பட்டிருப்பாரேயானால், மார்ஸ் எழுதிய ‘மூலதனம்’ என்ற பெரும் தொகுதி நமக்கு தமிழில் கிடைத்திருக்குமா?” - என்று கேட்டார்.

தூக்கு தண்டனை என்பதே - கடவுள் நம்பிக்கைக்கு எதிரானது என்று சுட்டிக்காட்டிய சீமான், “ஒருவன் கொலை செய்யப்படுவான் என்று ஆண்டவன், அவன் தலைவிதியை நிர்ணயித்து விட்டால், பிறகு கொலை செய்தவனை ஏன் தண்டிக்க வேண்டும். எல்லாம் ஆண்டவன் விதிப்படி நடக்கும் என்று நம்புகிறவன், குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்று கூறுவதே, ஆண்டவனுக்கு எதிரானது அல்லவா? நல்லவன் சொர்க்கம் போவான்; கெட்டவன் நரகம் போவான் என்று நம்பிவிட்டால், பிறகு, கடவுள் தண்டனையை மீறி இங்கே சிறைத் தண்டனை கொடு என்று உண்மையான பக்தர்கள் ஏன் கேட்கிறார்கள்! ‘ஒருவன் கொலை செய்யப்பட்டு சாவான்’ என்று தலையில் எழுதி வைத்த ஆண்டவனைத் தண்டிக்காமல், ஆண்டவன் விதித்த விதிப்படி செயல்பட்டவனை ஏன் தண்டிக்க வேண்டும்?” என்று பகுத்தறிவு அடிப்படையில் வினாக்களைத் தொடுத்தார். “தமிழனுக்கு ஒரு நாடு வேண்டும் என்ற போராட்டத்துக்காக தமிழ்நாட்டில் படையை உருவாக்கியவர் புலவர் கலியபெருமாள். அவருக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை ரத்து செய்தவர், நமது முதல்வர் கலைஞர். நக்சல்பாரி இயக்கத்தில் சேர்ந்து, சாதி வெறி நிலப்பிரபுவை அழித்தொழிப்பு செய்த குற்றத்தின் கீழ் தூக்கு தண்டனைக்குள்ளானவர் தோழர் தியாகு. அவரது தூக்கு தண்டனையை ரத்து செய்தவரும், நமது தமிழக முதல்வர் கலைஞர் தான். இந்த நிலையில் தமிழ்நாட்டில் பேரறிவாளன் உட்பட தூக்கு தண்டனைக்கு உள்ளான எனது தமிழின சொந்தங்களை விடுதலை செய்யுமாறு,

4 ஆம் பக்கம்

# தமிழ் ஈழத்துக்கு தமிழக மக்கள் பேராதரவு

விடுதலைப் புலிகள், ராஜீவ் படுகொலை வழக்கு, கச்சத் தீவு, இலங்கை பிரச்சினையில் இந்திய அரசின் அணுகுமுறை ஆகிய அனைத்து கோணங்களிலும் 12 கேள்விகளுடன் விரிவானதொரு சர்வே நடத்தியது ‘ஆனந்த விகடன்’ குழு. இணைய தளத்தில் 2,130 பேர், சர்வே டீம் நேரடி விசிட்டில் தமிழகம் முழுவதும் பதில் அளித்தவர்கள் 2065 பேர். ஆக, மொத்தம் 4195 பேர். ஆண்கள், பெண்கள், நகர்ப்புறம்– கிராமப்புறம் என்று பலதரப்பட்டவர்கள் கலந்துகெண்ட இந்த சர்வேயின் பிரமிப்பூட்டும் முடிவுகளை இங்கே தருகிறோம். “ஈழத் தமிழர் விவகாரத்தில் இங்கே நிலவும் மனநிலை இதுதான்!” அடித்துச் சொல்லும் சர்வே முடிவுகள் என்ற முன்னுரையுடன் சர்வே முடிவுகளை கீழ்க்கண்டவாறு வெளியிட்டுள்ளது ‘ஆனந்த விகடன்’.

- விடுதலைப்புலிகள் இயக்கத்தை எப்போதும் ஆதரிக்கிறேன் என 54.24 சதவீதமும், எப்போதும் எதிர்க்கிறேன் என 17.40 சதவீதமும், ராஜீவ்காந்தி படுகொலைக்கு முன்பு ஆதரித்தேன் என 28.34 சதவீதமும் –
- இலங்கைத் தமிழர்களுக்கான தமிழீழம் அமைப்பது என்ற கேள்விக்கு சரியான தீர்வு என 55.44 சதவீதமும், தேவை இல்லை என 9.91 சதவீதமும், சுயாட்சி அதிகாரம் கொடுத்தால் போதும் என 34.63 சதவீதமும் –
- இந்தியாவில் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு விதிக்கப்பட்ட தடை என்ற கேள்விக்கு தடையை நீக்க வேண்டும் என 47.65 சதவீதமும், தொடர வேண்டும் என 27.43 சதவீதமும் பொறுத்திருந்து பார்க்கலாம் என 24.91 சதவீதமும் –
- விடுதலைப் புலிகள் இயக்கத்தை வைகோ, ராமதாஸ், திருமாவளவன், நெடுமாறன் போன்றவர்கள் ஆதரிப்பது பற்றிய கேள்விக்கு ஆதரிப்பது சரியான நிலைப்பாடுதான் என 49.36 சதவீதமும், ஆபத்தான கொள்கை என 13.61 சதவீதமும், வேறு லாப நோக்கத்துக்காக என 37.02 சதவீதமும் –
- தரைப்படை, கடற்படை, வான் படை என்று விடுதலைப்புலிகள் வளர்ச்சி அடைவது பற்றிய கேள்விக்கு பெருமைக்குரிய விசயம் என 46.24 சதவீதமும், இந்தியாவுக்கு ஆபத்து என 18.59 சதவீதமும், இரண்டுமே இல்லை என 35.16 சதவீதமும் –
- விடுதலைப் புலிகளை தி.மு.க. ...... என்ற கேள்விக்கு ஆட்சியைப் பற்றி கவலைப்படாமல் ஆதரிக்க வேண்டும் என 47.48 சதவீதமும், இன்னும் கடுமையாக எதிர்க்க வேண்டும் என 22.71 சதவீதமும், இப்போது போலவே பட்டும் படாமலேயே இருக்கலாம் என 29.79 சதவீதமும் –
- தண்டனைக் காலத்துக்குப் பிறகும் சிறையில் இருக்கும் நளினியை.... என்ற கேள்விக்கு விடுதலை செய்ய வேண்டும் என 41.64 சதவீதமும், விடுவித்துக் கண்காணிப்பில் வைத்திருக்கலாம் என 37.64 சதவீதமும், சிறை தண்டனை தொடரட்டும் என 20.71 சதவீதமும் –
- கச்சத்தீவை இந்தியா ... என்ற கேள்விக்கு திரும்பப் பெற வேண்டும் என 66.76 சதவீதமும், விட்டுவிடலாம் என 6.26 சதவீதமும், குறைந்த பட்சம் அந்தப் பகுதிக்குப் போகும் உரிமையையாவது பெற வேண்டும் என 27.96 சதவீதமும் –

என பதிலளித்துள்ளனர். மேலும் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளித்தவர் விவரம்:

இலங்கைக் கடற்படையால் நமது மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படும் பிரச்சினைக்கு... என்ற கேள்விக்கு

- ஆயுத ரீதியாக பதிலடி கொடுக்கலாம் என 29.65 சதவீதமும், பேச்சு வார்த்தை மூலம் தீர்க்கலாம் என 34.89 சதவீதமும், சர்வதேச அரங்கில் இலங்கையைக் கடுமையாகக் கண்டிக்கலாம் என 35.44 சதவீதமும் –

ராஜீவ் காந்தி படுகொலையில் குற்றம் சாட்டப்பட்ட பிரபாகரன்... என்ற கேள்விக்கு,

- கைது செய்யப்பட வேண்டும் என 43.02 சதவீதமும், குற்றமற்றவர் என 16.90 சதவீதமும், குற்றத்தை மன்னித்து விட்டுவிடலாம் என 40.07 சதவீதமும் –

இலங்கை பிரச்னையில் இந்தியா என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விக்கு –

- தலையிட்டு தீர்வு காணலாம் என 62.59 சதவீதமும், தலையிடவே கூடாது என 12.58 சதவீதமும், நிலைமை கை மீறினால் மட்டுமே தலையிட வேண்டும் என 24.81 சதவீதமும் –

**– கருத்துகளை தெரிவித்ததாக ‘ஆனந்த விகடன்’ 6.8.08 இதழில் வெளியிட்டுள்ளது.**

# சர். சி.பி.ராமசாமி அய்யர் ரத்து செய்த தூக்கு தண்டனை

உலகில் 135 நாடுகள் மரணதண்டனையை ஒழித்து விட்டன. 62 நாடுகள் சட்டத்தில் மரண தண்டனைக்கு வழி இருந்தாலும், அமுல்படுத்தாது நிறுத்தி வைத்துள்ளன. அய்.நா.வின் பொதுச் சபை 2007 டிசம்பர் 18 இல் உலக நாடுகள் அனைத்தும் மரணதண்டனைக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று பிரகடனம் செய்துவிட்டது. ஆனாலும், இந்தியாவில் தூக்கு தண்டனையை ஒழிக்க முன்வரவில்லை. தூக்கு தண்டனை அமுலிலுள்ள நாடு அமெரிக்கா, அங்கே தூக்கு தண்டனை தரப்பட்டவர்களில் 126 பேர் குற்ற மற்றவர்கள் என்று கண்டறியப்பட்டு, பிறகு, அவர்களுக்கு தூக்கு தண்டனை நிறுத்தப்பட்டது. அப்பாவிகளும் தூக்கு தண்டனைக்கு உள்ளாகிறார்கள் என்பதைத்தானே இது காட்டுகிறது? தூக்குத் தண்டனை இருந்தால் தான் குற்றங்கள் குறையும் என்ற வாதத்துக்கு எந்த அடிப்படையான காரணமும் இல்லை. 1976 இல் கனடாவில் தூக்கு தண்டனை ரத்தானது. அதன் பிறகு தான் அங்கு 40 சதவீத கொலைக் குற்றங்கள் குறைந்துள்ளன என்று அரசு புள்ளி விவரம் தருகிறது.

நாட்டின் விடுதலைக்குப் போராடியவர்கள் எல்லாம் ஒரு காலத்தில் பயங்கரவாதிகள் என்றே முத்திரை குத்தப்பட்டனர். அந்த பயங்கரவாதிகள் தான் பிறகு வரலாற்றில் தேச பக்தர்களாக போற்றப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இப்போதுகூட செண்பகராமன் என்ற 'சுதந்திர'ப் போராட்ட தியாகிக்கு முதல்வர் கலைஞர் சிலை திறந்து, அவரது தியாகத்தைப் பாராட்டியுள்ளார். இந்த செண்பராமன் யார்? உலகையே மனிதப் பிணங்களின் குவியல் களாக்கிய இட்லரின் படையில் இடம் பெற்றவர். இட்லரின் கப்பல் படையில் பணியாற்றியவர். எம்டன் கப்பலில் சென்னை துறைமுகம் வந்து, சென்னை மாநகரத்தை குறிவைத்து, குண்டுகள் வீசப்பட்ட போது அந்த 'எம்டன் கப்பலை' கடலில் ஓட்டி வந்தவர் செண்பகராமன். ஆனாலும், அவர் தமிழ்நாட்டுக்காரர் என்பதால், சிலை வைத்து தியாகி என்று புகழாரம் சூட்டும் நிலை திரும்பியிருக்கிறது.

இந்தியாவில்கூட பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில், தூக்கு தண்டனை ரத்து செய்யப்பட்ட ஒரு பிரதேசம் உண்டு. அதுதான் கேரளாவில் உள்ள திருவாங்கூர் சமஸ்தானம், அங்கு மன்னராட்சி நடந்தது. அங்கே திவானாக இருந்தவர் சர்.சி.பி. இராமசாமி அய்யர். பிரிட்டிஷ் ஆட்சி அனைவருக்கும் பொதுவான மனுநீதிக்கு எதிரான கிரிமினல் சட்டத்தைக் கொண்டு வந்தபோது, அதை அமுல்படுத்த முடியாது என்று திருவாங்கூர் சமஸ்தானம் மறுத்தது. காரணம் என்ன? பார்ப்பானுக்கும் மரண தண்டனை வழங்கவேண்டியிருக்கும் என்பதால் தான், 'மனு நீதி', 'பிராமணனுக்கு' மரண தண்டனையை தடைசெய்துள்ளபோது, பிரிட்டிஷாரின் கிரிமினல் சட்டம் அந்த விதிவிலக்கை எதிர்த்தது.

திருவாங்கூர் அரண்மனையில் அந்தக் காலங்களில் அரசர் பதவியைக் கைப்பற்றுவதற்கான போராட்டங்கள் நடந்தன. பதவியில் இருப்பவரை கொலை செய்துவிட்டு, மற்றொருவர் பதவிக்கு வருவார். இப்படி அரசர்களைக் கொலை செய்வதற்கு எப்போதுமே - பார்ப்பனர்கள்தான் பயன்படுத்தப்பட்டனர். என்ன காரணம்? 'பிராமணன்' கொலை செய்தால் அவனுக்கு தூக்கு தண்டனை வழங்க முடியாது என்பதால் தான். கொலைகார பார்ப்பான் பிடிபட மாட்டான். அப்படியே பிடிபட்டாலும் தூக்கு தண்டனை நிச்சயம் கிடையாது. புதிதாக ஆட்சிக்கு வரக்கூடிய அரசர்கள், இவர்களை விடுதலை செய்து விடுவார்கள். இந்த வரலாற்று உண்மைகளை பழம்பெரும் சுதந்திர போராட்ட வீரர் கோவை அய்யாமுத்து எழுதிய 'மேயோ கூற்று மெய்யா? பொய்யா?' என்ற நூலில் பதிவு செய்துள்ளார். அதன் காரணமாகத்தான் பார்ப்பனர் குற்றம் செய்தாலும் தூக்கு தண்டனை உண்டு என்ற சட்டத்தை அமுல்படுத்த திருவாங்கூர் தேவஸ்தானம் மறுத்தது. இதை அப்போதே டாக்டர் அம்பேத்கர் கண்டித்து எழுதினார். பிரிட்டிஷ் அரசும், அம்பேத்கர் கருத்தை வழிமொழிந்து 'பிராமணர்களுக்கு' மட்டும் தூக்கு தண்டனையிலிருந்து விதிவிலக்கு தரக்கூடாது என்று திருவாங்கூர் சமஸ்தானத்தை வலியுறுத்தியது. அப்போதுதான் திவான் சர். சி.பி. இராமசாமி அய்யர் புதிய உத்தரவு ஒன்றை தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி வெளியிட்டார். திருவாங்கூர் சமஸ்தானத்தில் இனி எவருக்குமே தூக்கு தண்டனை வழங்கப்படமாட்டாது. தூக்கு தண்டனை ரத்து செய்யப்படுகிறது என்பதே அந்த உத்தரவு. பார்ப்பன ஏடுகள் சர்.சி.பி. ராமசாமி அய்யரின் மனிதாபிமானத்தைப் பாராட்டி புகழ்ந்து எழுதினர். பார்ப்பனர்களை தூக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவே, எல்லோருக்கும் தூக்கு தண்டனையை ரத்து செய்தது தான். அந்த மனிதாபிமானத்தின் பின்னணி ரகசியம். அன்று சர்.சி.பி. ராமசாமி அய்யருக்கு புகழாரம் சூட்டிய பார்ப்பன சக்திகளின் வாரிசுகள் தான் இன்று, தூக்கு தண்டனையை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்கிறார்கள். மனித உரிமையிலும், இவர்களின் மனுதர்மப் பார்வை தான் கோலோச்சுகிறது.

பாகிஸ்தானுக்கு இந்தியாவிலிருந்து உளவு நிறுவனத்தால் அனுப்பி வைக்கப்பட்ட சுரப்ஜித் சிங் என்பவருக்கு 1991 இல் பாகிஸ்தானில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. பாகிஸ்தானில் நடந்த குண்டு வெடிப்பு ஒன்றில் 14 பாகிஸ்தானியர் இறந்தனர். அந்தக் குண்டு வெடிப்பு சதிக் குற்றம் சுரப்ஜித் சிங் மீது சுமத்தப்பட்டது. இந்தியாவின் உளவு நிறுவனத்தைச் சார்ந்தவர் - பாகிஸ்தானில் குண்டுகளை வெடிக்கச் செய்த குற்றத்தில் தூக்கு தண்டனை விதித்தபோது, தூக்கு தண்டனையை நிறைவேற்றக் கூடாது என்ற மனிதாபிமானக் குரல் எழுந்தது. 17 ஆண்டு சிறைவாசத்துக்குப் பிறகு, தூக்கு தண்டனையை நிறைவேற்ற பாகிஸ்தான் அதிபர் உத்தரவிட்ட நிலையில் பா.ஜ.க.வினர், பாகிஸ்தான் அரசைக் கண்டித்தனர். தூக்கு தண்டனையை நிறைவேற்ற எதிர்ப்பு தெரிவித்தனர். மனித உரிமையாளர்கள் அனைவருமே தூக்கு தண்டனையை நிறுத்தக் கோரினர். அதே பா.ஜ.க.வினர் தான் இந்தியாவில் நாடாளுமன்றத்தைத் தகர்த்ததாக குற்றம்சாட்டப்பட்டு, தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட அப்சல் குருவை உடனே தூக்கில் போட வேண்டும் என்கிறார்கள். சுரப்ஜித் சிங்குக்கு தூக்கு தண்டனை தரக் கூடாது என்று அவர் சீக்கியர் என்ற காரணத்தால், பஞ்சாப் சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது.

பாகிஸ்தான் அதிபர் முஷாரப் தூக்கு விதிக்கப்பட்ட 17 ஆண்டுகளுக்குப் பிறகு, சுரப்ஜித் மீதான தூக்கு தண்டனையை நிறைவேற்ற உத்தரவிட்டதற்கு என்ன காரணம்? அவரை ஆத்திரப்படுத்தியது யார்? இந்தியாவின் பார்ப்பன சக்திகள் தான்; என்ன நடந்தது?

இந்தியாவின் 'ரா' உளவு நிறுவனத்தைச் சேர்ந்த காஷ்மீர்சிங் என்பவர் பாகிஸ்தானில் ஊடுருவிய போது பிடிபட்டு, 35 ஆண்டுகாலம் சிறையில் அடைபட்டுக் கிடந்தார். பாகிஸ்தான் மனித உரிமைத் துறை அமைச்சரான அன்சார்புருனே, சிறைச்சாலைக்கு நேரடியாக சென்றபோது, இதை அறிந்து அதிர்ச்சியடைந்து, அவரை விடுதலை செய்யும் முயற்சிகளை மேற்கொண்டார். காஷ்மீர் சிங்கை இந்தியாவின் எல்லை வரை அழைத்து வந்து, இந்திய ராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைத்தார், அந்த அமைச்சர். அந்தப் பிரியாவிடை கண்ணீருடன் நடந்தது. இந்த சம்பவம் நடந்த அடுத்த ஒரு வாரத்தில், மற்றொரு சம்பவம் நடந்தது. இந்தியாவுக்குள் கிரிக்கெட் பார்ப்பதற்காக சட்ட விரோதமாக ஊடுருவிய காலிப் முகம்மது என்ற பாகிஸ்தானியரை, கைது செய்து, பம்பாய் சிறையில் அடைத்து வைத்தனர். இந்திய உளவுத் துறையின் சித்திரவதையால் சிறையில் பிணமானார். அவரது சடலத்தை எந்த எல்லைப் பகுதியில் காஷ்மீர் சிங் ஒப்படைக்கப்பட்டாரோ, அதே பகுதியில் அடுத்த 10 நாளில் இந்திய அதிகாரிகள் பாகிஸ்தான் அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். இந்த சம்பவத்தால் ஆத்திரமடைந்த நிலையில் தான் முஷாரப், சுரப்ஷித் சிங் தூக்கிற்கு உத்தரவிட்டார். இந்தப் பின்னணியை பார்ப்பன ஊடகங்கள் திட்டமிட்டு இருட்டடித்தன.

இப்போது தமிழ்நாட்டில் அண்ணாவின் நூற்றாண்டை நாம் எடுக்கப் போகிறோம். அண்ணாவின் நூற்றாண்டுக்கு மிகப் பொருத்தமான செயல்பாடு தூக்கு தண்டனை ஒழிப்பு என்பதாகவே இருக்க முடியும். ஒவ்வொரு அண்ணாவின் பிறந்த நாளிலும் கைதிகளின் மனித உரிமைகளைக் காப்பாற்றும் செயல்பாடுகளிலேயே கலைஞர் ஈடுபட்டு வந்துள்ளார். இந்த நிலையில் தமிழ்நாட்டில் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்படும் கைதிகள், 20 ஆண்டுகாலம் சிறையில் இருந்திருக்க வேண்டும் என்று தண்டனையின் வரம்புக் காலத்தை ஜெயலலிதா தனது பார்ப்பன ஆட்சியில் உயர்த்தியதால், ஆயுள் தண்டனைக்குள்ளான கைதிகள் பலர், விடுதலை பெற முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். கலைஞர் ஆட்சி, ஜெயலலிதா ஆட்சியின் ஆணையை மறுபரிசீலனை செய்ய வேண்டும்; அதே போல் பிரிட்டிஷ்காரர்கள் ஆட்சியில் உருவாக்கப்பட்ட சிறைச்சாலை விதிகள் - மனித உரிமைக் கண்ணோட்டத்தில் மாற்றியமைக்கப்பட வேண்டும். அண்ணாவின் நூற்றாண்டில் முதல்வர் கலைஞர், இந்த சாதனைகளை செய்தால் வரலாற்றில் அவரது புகழும் பெருமையும் மேலும் உயரும்.

தூக்கு தண்டனை எதிர்ப்புக்காக 1949 ஆம் ஆண்டிலேயே குரல் கொடுத்தவர் கலைஞர். தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த தமிழன் கணபதியை அன்றைய மலேசிய அரசாங்கம் தூக்கிலிட்டது. மலேயா தொழிற்சங்கத்தின் தலைவராக இருந்த மலேயா கணபதி மீது சுமத்தப்பட்ட குற்றம், ஒரு கைத்துப்பாக்கியும், 6 ரவுண்டு வெடி மருந்துகளையும் வைத்திருந்தார் என்பதுதான்; எவரையும் கொலை செய்யவில்லை. அப்போது கலைஞர் கொதித்தெழுந்து 'கயிற்றில் தொங்கிய கணபதி' என்ற கண்ணீர் காவியத்தைப் படைத்து நூலாக வெளியிட்டார். அந்நூல் இப்படித் தொடங்குகிறது.

*"பகவத்சிங்கைத் தூக்குமேடையிலே ஊஞ்சலாட்டி உவகை கொண்ட ஏகாதிபத்தியம் - திருப்பூர்க் குமரனைத் தடி கொண்டு தாக்கித் தெருவெலாம் குருதியோடச் செய்து, அதை நக்கிக் குடித்து எக்காளமிட்ட ஏகாதிபத்தியம் - இதோ, இன்று மலேயா சர்க்கார் என்ற உருவிலே தன் சொர சொரப்பான ரத்த நாக்குகளால் கணபதியையும் ருசித்துப் பார்த்துவிட்டது. தூக்கு மேடை எத்தனையோ மனிதர்களைத் தனக்கு உணவாக்கிக் கொண்டு உல்லாசம் பாடியபடி தான் இருக்கிறது. அதன் கோரப் பற்களுக்கிடையே சிக்கிச் சீரழிந்த மனித உருவங்கள் கணக்கிலடங்கா. குற்றவாளிகளின் குரல்வளையை நெரிப்பது மட்டுமல்ல, நிரபராதிகளின் வாழ்வை அரைநொடியில் தீர்த்துக் கட்டி, தன் வயிற்றைப் புடைக்க வைத்துக் கொண்டிருக்கிறது தூக்கு மேடை! தூக்கு மேடையிலே உறைந்திருக்கும் ரத்தத்திலே, எத்தனை உத்தமர்களின் வரலாறு எழுதப்பட்டிருக்கிறது தெரியுமா? அங்கே அறுத்தெறியப்பட்ட நரம்புகள் ஒவ்வொன்றும் - ஒடித்தெறியப்பட்ட எலும்புகள் ஒவ்வொன்றும் பேச ஆரம்பித்தால், எத்தனை நீதிபதிகளின் நேர்மை அம்பலத்திற்கு வரும்!*

இப்படி தூக்கு தண்டனைக்கு எதிராக அன்று குரல் கொடுத்த கலைஞர், இன்று, மவுனத்தைக் கலைத்து, மனித உரிமைக்குக் குரல்கொடுக்க வேண்டும் என்பதே தமிழின உணர்வாளர்களின் எதிர்பார்ப்பு.

**– சென்னை தூக்கு தண்டனை எதிர்ப்பு மாநாட்டில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசியது – 2.8.2008**

## 'நாத்திகம்' 50 ஆம் ஆண்டு வெற்றி விழா!

'நாத்திகம்' வார ஏட்டின் அரை நூற்றாண்டு வெற்றி விழா சென்னை தியாகராயர் அரங்கில் 3.8.2008 ஞாயிறு காலை எழுச்சியுடன் நடந்தது. பாசறைப் பாணர் தேனிசை செல்லப்பா, எழுச்சிப் பாடல்களுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. நாத்திகம் ஆசிரியர் இராமசாமி தமிழர் சமுதாயத்தில் சூழ்ந்து நிற்கும் இனப்பகையை எதிர்த்து பெரியார் - காமராசர் வழியில் போராடக் கூடிய தலைமை வரவேண்டும் என்று வலியுறுத்திப் பேசினார். சுயமரியாதை வீரரும் குத்தூசி குருசாமி வரலாற்று ஆசிரியருமான குருவிக்கரம்பை வேலு தலைமை தாங்கினார்.

பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், தமிழருவி மணியன், ஆர். நல்லக்கண்ணு, பழ. நெடுமாறன், டாக்டர் இராமதாசு, தொல். திருமாவளவன் ஆகியோர் நாத்திகத்தின் உறுதியான கொள்கை பரப்பலைப் பாராட்டிப் பேசினர். அனைவருக்கும் 'நாத்திகம்' ஆசிரியர் சார்பில் மதிய உணவு வழங்கப்பட்டது. பெரியார் - காமராசர் ஆற்றிய இனமானத் தொண்டுகளை நினைவு கூறும் நிகழ்ச்சியாக விழா அமைந்திருந்தது. பெரியார் - காமராசரின் பழம் பெரும் தொண்டர்கள் ஏராளமாகத் திரண்டிருந்தனர்.

# இதோ 'இந்து' விரோதி

'இந்துக்கள் பாதிக்கப்படும்போது அதற்காக குரல் கொடுக்க எவருமில்லை' என்று ராமகோபாலன்களும், இல.கணேசன்களும், ஜெயலலிதாக்களும், அவ்வப்போது கவலைப்படுகிறார்கள். ஆத்திரம் பொங்க ஆவேசமாக அறிக்கைகளை விடுகிறார்கள்.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட 'இந்துக்கள்' மூடநம்பிக்கைகளில் மூழ்கி, வாழ்க்கையை வீணாக்கிடக் கூடாது என்று, பெரியார் தொண்டர்கள் அவர்களை பகுத்தறிவுப் பாதைக்கு திருப்ப முயன்றால், "இவர்கள், இந்துக்களின் விரோதிகள்" என்று குற்றம் சாட்டுகிறார்கள்! "தீ மிதிப்பதும், அலகு குத்துவதும் கடவுள் சக்தியல்ல; அதை நம்பி ஏமாற வேண்டாம்" என்றால், எச். ராஜா, "டேய், பெரியார் யாருன்னு எனக்கு தெரியாதாடா?" என்று பேட்டை ரவுடியாக மாறி, பூணூலை உருவுகிறான்!

'தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இந்துக்களின் கல்வி உரிமைக்கு யார் எதிரி? வேலை வாய்ப்புகளை வழங்கும் இடஒதுக்கீட்டு உரிமைக்கு யார் எதிரி?" என்று நியாயமான கேள்விகளைக் கேட்டால்கூட, "இந்துக்களைப் பற்றி நீ பேசாதே; நீ இந்து விரோதி; பெரியாரின் சீடன்" என்று பாய்ந்து குதறுகிறார்கள்.

"ஏனப்பா, இவ்வளவு ஆத்திரம்? 'இந்து' மதத்துக்கு நீதான், அங்கிகாரம் பெற்றவனா? அந்த அதிகாரத்தை உனக்கு யாரப்பா தந்தது?" என்று கேட்டால், "அது பகவான் தந்ததாக்கும்; நாங்கள் பகவானால், 'பிராமணனாக' படைக்கப்பட்டு, பூமியில் பிறந்தவர்கள்; சாஸ்திர சம்பிரதாயங்களைக் காப்பாற்றும் உரிமைகளையும், கடமைகளையும் பகவான் எங்களுக்கே அருளியிருக்கிறார். நாங்கள் பிரம்மத்தை உணர்ந்தவர்கள்; அதனாலே நாங்கள் பிராமணர்கள்; பகவானாலேயே எங்களுக்கு தரப்பட்ட அதிகாரத்தை எவரும் கேள்விக் கேட்கப்படாது; இந்துக்களைக் காப்பாற்றும் பகவானின் தூதுவர்களாக, நாங்கள் பூமியில் பிறந்து காயத்ரி ஓதி, பூணூல் தரித்து நிற்கிறோம்" என்று நெத்தியடியாக பதில் தருகிறார்கள்.

பார்ப்பனர்கள் இப்படிக் கூறினால், "சூத்திரர்"களின் இந்து முன்னணியும், இந்து மக்கள் கட்சியும், "இந்துக்களுக்கு ஒரு ஆபத்து என்றால், எங்களால் தாங்க முடியாது. இந்துக்களின் விரோதிகளை நடமாடவிட மாட்டோம்; இந்துக்களின் விரோதி பெரியார் சிலைகளை இடித்து தரைமட்டமாக்குவோம்; எங்கே இந்துக்களின் எதிரி? இதோ, ஆயுதங்களோடு கிளம்புகிறோம்?" என்று தொடை தட்டி தோள் தட்டி நிற்கிறார்கள்.

இந்துக்களைக் காப்பாற்ற படை திரட்டி நிற்கும் (சொறி, சிரங்கு படை அல்ல) இந்து முன்னணிகள் ஆகட்டும், 'பகவானால்' பூலோகத்துக்கு அனுப்பப்பட்ட 'பிராமண உத்தமர்கள்' (சங்கரராமன் கொலை வழக்கு புகழ் காஞ்சி சங்கரன் உட்பட) ஆகட்டும்! இவர்கள் 'இந்து'க்கள் மீது கொண்டுள்ள 'அடங்காத பாசம்' நம்மைப் புல்லரிக்கச் செய்து விடுவதால், நாமும், அவ்வப்போது உணர்ச்சி வயப்பட்டு வாயடைத்துப் போய் நிற்கிறோம். இந்துக்களின் விரோதிகளாக நாம் ஏன் குற்றக் கூண்டில் நிற்க வேண்டும்? இந்துக்களின் உண்மையான பகைவர்களை அவர்களிடமே எடுத்துக் கூறிவிட்டால் என்ன? நாமும் "இந்துக்களின் ஆதரவாளர்கள்" என்ற நற்சான்றிதழைப் பெற்று விடலாமே என்று நமக்குத் தோன்றவே (பகவான் கனவில் வந்து கூறாவிட்டாலும்கூட) – இதை எழுத முன் வந்தோம்!

ஆமாம்! இந்துக்களின் "பகைவர்களை" நாமும் கண்டிக்கத் தயாராகி விட்டோம். எம்மோடு, இந்துக்களின் 'புனித' காவலர்களும் 'அடியாள்' காவலர்களும் சேர்ந்து குரல் கொடுக்க முன்வர வேண்டும் என்பதே நமது பேரவா. எதற்காக நமக்குள் வீண் பிரச்சினை; நாம் ஒன்றுபட்டு இந்துப் பகைவர்களுக்கு எதிராக போர் தொடுப்போம்; சரி, பகைவர் எங்கே என்று தானே கேட்கிறீர்கள்? இதோ பத்திரிகைகளிலே வந்திருக்கிறது, பாருங்கள்!

"இமாசலப் பிரதேச மாநிலம் பிலாஸ்பூர் மாவட்டத்தில் பிரசித்திப் பெற்ற நைனாதேவி துர்கா கோயில் உள்ளது. துர்காதேவியை தரிசிக்க, 25,000 இந்துக்கள், மலை உச்சிக்குப் போனார்கள். மலைப் பகுதியில் நிலச் சரிவு ஏற்பட்டு விட்டது என்றும், பாறாங்கற்கள் உருண்டு விழுவதாகவும், திடீரென வதந்தி பரவிவிட்டது. பக்தர்கள் முண்டியடித்து ஓடி, மலையிலிருந்து உருண்டு 150 பேர் பலியாகிவிட்டனர். 100 பேர் படுகாயமடைந்து விட்டனர்" – இதுதான் செய்தி. (4.8.08)

தன்னை நம்பி வந்த இந்துக்களை இப்படி அக்கிரமமாக உயிர் பலி வாங்கிய துர்காதேவியை சும்மா விடலாமா? எத்தனை இந்து குடும்பங்கள் கண்ணீர் விடுகின்றன. எத்தனை இந்து உயிர்கள் பிணங்களாகிவிட்டன. அய்யோ, இது என்னக் கொடுமை! இந்து முன்னணிகளே! சங்பரிவாரங்களே! சுப்ரமணி, ஜெயலலிதா, இல.கணேசன், துக்ளக் சோ வகையறாக்களே! நீங்கள் பூணூலை உருவிக் கொண்டு கடப்பாறையைத் தூக்குங்கள்; நாங்கள் வெறும் முதுகோடு கடப்பாறையைத் தூக்குகிறோம். வாருங்கள் சேர்ந்து போய் இப்படி இந்துக்களை நம்ப வைத்து பிணமாக்கும் எல்லா இந்து விரோத கடவுளுக்கும் இதுதான் பாடம் என்பதை புரிய வைப்போம்! நம்பி வந்த இந்து மக்களை பிணமாக்கிய மலைஉச்சிக் கடவுளை இடித்து நொறுக்குவோம்! இந்துக்களின் நண்பன் என்பதைக் காட்டிக் கொள்ள அரிய வாய்ப்பு; நல் வாய்ப்பு; இந்துக்களின் நம்பிக்கை வாக்குகளைக் குவிக்கும் நல்ல தருணம்; இந்து விரோதியை ஒழித்துக்கட்ட இதோ, அருமையான சந்தர்ப்பம்; நழுவவிடாதீர்!

**– கோடங்குடி மாரிமுத்து**

# காசிபாளையத்தில் மந்திரமா தந்திரமா

கோபியை அடுத்த காசிபாளையத்தில் பொதுமக்களின் பேராதரவுடன் குடந்தை சிற்பி இராசனின் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சி 13.7.2008 அன்று எழுச்சியுடன் நடைபெற்றது.

பெரியாரின் 129வது பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டமாக நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு மாவட்டத் துணைத் தலைவர் கா.சு.வேலுச்சாமி தலைமை வகித்தார். பேருராட்சி முன்னாள் தலை வரும், என்றும் பகுத்தறிவு இயக்கத்தின் பற்றாளருமான கா.அ. செல்வம், தரணி பஞ்சாலை இயக்குநர் வெ. சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.




நிகழ்ச்சிக்காக சாலையின் இருபுறங்களிலும் கழகக் கொடிக் கம்பங்கள் நடப்பட்டு, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சத்திய மங்கலம் கோபி முதன்மைச் சாலையில் மேடை அமைக்கப்பட்டு, சிறப்பான பிரச்சாரம் செய்யப்பட்டிருந்ததால் ஏராளமான பொதுமக்கள் மாலையிலேயே திரளத் தொடங்கினர்.

தனது வழக்கமான நகைச்சுவை ததும்பும் பகுத்தறிவு வெடிப் பேச்சால், சொந்த ஊர் மக்களைக் கட்டிப் போட்டு, பலத்த கைதட்டலைப் பெற்றார் கழகப் பேச்சாளர் கா.சு.வேலச்சாமி. இந்துத்துவா சக்திகளின் புளுகுப் பிரச்சாரங்களைத் தோலுரித்து, ஒடுக்கப்பட்ட இளைஞர்களின் சிந்தனையைத் தூண்டும் விதத்தில் மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன் உணர்ச்சி மிக்க உரையை நிகழ்த்தினார்.

மாவட்ட இணைச் செயலாளர் கா. கருப்பணன், பேரூராட்சி முன்னாள் தலைவர் கா.அ.செல்வம் உள்ளிட்டோரின் உரைகளுக்குப் பின் குடந்தை சிற்பி இராசன் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சி நூற்றுக்கணக்கான பொது மக்களின் மகத்தான வரவேற்புக்கிடையே இரவு 11 மணி வரை நடைபெற்றது.

பகுத்தறிவாளர் கழகத் தோழர் மருந்தாளுநர் கி. பழனிச்சாமி நன்றி கூறினார். இரவு 11 மணி வரை 250க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இறுதி வரை நிகழ்ச்சியைக் கண்டு தெளிவுற்றது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சியின் பயனாக காசிபாளையம் கிளைக்கு புதிய வரவாக இளைஞர்கள் வர தொடங்கியிருப்பது தோழர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

**செய்தி : 'நேதா'**

## கண்ணீர் சிந்தும் 'குடிஅரசு'

"குடிஅரசு குறிப்பிட்ட கருத்தைப் பிரசுரம் செய்யும் பத்திரிகையே அல்லாமல் வெறும் வர்த்தமானப் பத்திரிகை அல்லவாதலின்... பிரதிவாரமும் 'குடிஅரசு' தனது தத்துவத்தை விளக்கும் போது கண்ணீர் கொட்டாமலிருக்க முடியவில்லை!".

"உண்மையில் 'குடிஅரசு'க்கு எந்தப் பிராமணனிடத்தும் குரோதமோ வெறுப்போ கிடையாது; ஆனால் பிராமணன் உயர்ந்தவன், மற்றவர்கள் தீண்டாதவர்கள், தெருவில் நடக்கக் கூடாதவர்கள் என்பன போன்ற இழிவாக மிருக உரிமைக்கும் பாத்திரமில்லாதவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் எண்ணத்தினிடத்திலும், தங்கள் வகுப்பார் தான் முன்னணியில் இருக்க வேண்டும், மேன்மையுடன் பிழைக்க வேண்டும், மற்றவர்கள் என்றென்றைக்கும் தங்களுக்கு அடிமைகளாக இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டு அதற்காகச் செய்யும் சூழ்ச்சிகளிடத்திலும் தான் 'குடிஅரசு'க்குக் குரோதமும் வெறுப்பும் இருப்பதுடன், அவற்றை அடியோடு களைந்தெறிய வேண்டும் என்ற ஆவல் கொண்டு உழைத்து வருகிறது."

**பெரியார் – 15.11.1925**

# கோவையில் 'குடிஅரசு' முன்பதிவுத் தொடங்கியது

கோவை மாநகரம் (வெங்கிட்டாபுரம்) குத்தூசி குருசாமி படிப்பகத்தில் 3.3.08 அன்று மாலை 5 மணியளவில் கோவை மாநகர கலந்துரையாடல் கூட்டம், கழகப் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டினன் தலைமையில், தலைமை நிலைய செயலாளர் ஆறுசாமி முன்னிலையில் நடைபெற்றது. மாநகர தலைவர் ராஜ்குமார், மாநகர செயலாளர் கோபால், மாநகர பொருளாளர் மணிமாறன் மற்றும் கழகத் தோழர்கள், பகுதி கழக பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் வெற்றி வேந்தன் கருத்துரை வழங்கினார். பெரியார் பிறந்த நாள் விழா, குடிஅரசு முன் பதிவு நடைபெற்றது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'குடிஅரசு' முன்பதிவு, கழகத்தின் தலைமை நிலைய செயற்குழு உறுப்பினர் ஆறுச்சாமி ரூ.3500 கொடுத்து முதல் பதிவை தொடங்கி வைத்தார்.

'குடிஅரசு' முன் பதிவு குறித்தும், கோவை மாநகரத்தில் மட்டும் 150 தொகுப்புகள் முன்பதிவு தொகை திரட்ட முடிவு செய்யப்பட்டது.

சமீபத்தில் எம்.ஆர்.ராதா நூற்றாண்டு விழா மற்றும் நாத்திகர் விழா நிகழ்ச்சிக்கு தோழர்கள் திரட்டிய நிதியில் விழா செலவு போக மீதம் உள்ள தொகை ரூ.20000/-. கணபதி பொது கூட்டத்திற்கு திரட்டிய நிதியில் கூட்ட செலவு போக மாதம் ரூ.7000 சேர்த்து இயக்கத்திற்கு சொந்தமாக மேடை மற்றும் ஒலி பெருக்கி வாங்கிக் கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

மாநகர பொறுப்பாளர்கள் வாரம் ஒரு முறை கூடி ஆலோசனை கூட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

சாஜித், மாநகர அமைப்பாளராக நியமிக்க தீர்மானம் எடுக்கப்பட்டது.

## மீனவர் படுகொலையைக் கண்டித்து சென்னையில் ஆர்ப்பாட்டம்

தமிழக மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, அனைத்துக் கட்சிகள் மற்றும் தமிழ் தேசிய அமைப்புகளின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் 3.8.2008 மாலை 5 மணியளவில் சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை எதிரில் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் தலைமையில் நடந்தது. தொல். திருமாவளவன், விஜய டி.ராஜேந்தர், தியாகு, மணியரசன், பசிர் அகமது, வீரசந்தானம், வெள்ளையன் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

# திருப்பூரில் ‘குடிஅரசு’ முன்பதிவுத் தொடங்கியது

திருப்பூரில் கழகத் தோழர் அகிலன் இல்லத் திறப்பு விழாவில் ‘குடி அரசு வெளியீட்டுக்கான முன்பதிவுகள் தொடங்கின. திறந்த வெளி மாநாடு போல் தோழர் அகிலன் இல்லத் திறப்பு விழா நிகழ்ச்சி நடந்தது.



27.7.2008 ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணியளவில் திருப்பூர் கல்லூரி சாலை கண்ணகி நகரில் புதிதாக கட்டப்பட்ட கழகப் பொறுப்பாளர் தோழர் அகிலனின் இல்லத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தொழிற் கூடத்தை பொதுச்செயலாளர் கு.இராம கிருட்டிணன் திறந்து வைத்து சிறப்புரை நிகழ்த்தினர். சிற்பிராசன், ‘மந்திர மில்லை தந்திரமே’ நிகழ்ச்சியை நடத்தினார்.

நிகழ்ச்சிக்கு மாவட்டத் தலைவர் துரைசாமி தலைமை தாங்கினார். ஆசிரியை சிவகாமி, சாவித்திரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தி.மு.க. தொழிற்சங்க பொதுச்செயலாளர் ராம கிருஷ்ணன், தென்மொழி துரையரசனார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மன்னை தங்கம், திருப்பூர் தியாகு ஆகியோர் கொள்கை பாடல்களை பாடினர். நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களை அகிலனின் சகோதரர் செல்வராஜ் வரவேற்றார். இறுதியாக இலாவண்யா நன்றி கூறினார். நிகழ்ச்சியில் அங்கமுமார், சண்முகம், முகில்ராசு, கோவை கதிரவன், சாஜித், ராசக்குமார் மற்றும் கழகத் தோழர்கள், அகிலனின் உறவினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இல்லத் திறப்பு விழாவை முன்னிட்டு இயக்க வளர்ச்சி நிதியாக ரூ.10,000 நன்கொடையை கழகத் தலைவரிடம் அகிலன் வழங்கினார். நிகழ்ச்சியில் குடி அரசு தொகுப்பு முன் பதிவுத் தொகையாக ரூ.14000 வழங்கி முன்பதிவு நிகழ்ச்சி தொடங்கி வைக்கப்பட்டது.



முதல் பக்கத் தொடர்ச்சி

நாங்கள் கலைஞரிடம், கோரிக்கை வைக்காமல் வேறு யாரிடம் கோரிக்கை வைக்க முடியும்?” என்று சீமான் கேட்டபோது, அரங்கமே கைதட்டி வரவேற்றது.

தொடர்ந்து பேசிய தோழர் தமிழச்சி மரணதண்டனைக்கு எதிரான ஏராளமான வரலாற்று செய்திகளை முன் வைத்து விரிவான உரை நிகழ்த்தினார். மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி தனது உரையில் ஜனநாயகத்திலும், பகுத்தறிவிலும் நம்பிக்கைக் கொண்டவர்கள், மரணதண்டனையை ஏற்க முடியாது என்றார். “தீவிரவாதம் உருவாவதைத் தடுக்க மரண தண்டனை தீர்வாகாது. அதற்கு சமூகப் பிரச்சினைகளில் தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டும். சாட்சிகளை வைத்து, குற்றங்களை தீர்மானிக்கின்றன நீதிமன்றங்கள், சாட்சிகள், நூறு சதவீதம் சரியானவை என்பதை எப்படி உறுதி செய்ய முடியும். மரண தண்டனை தந்த பிறகு, அவர் நிரபராதி என்று தெரிய வந்தால், மீண்டும் உயிரைத் திருப்பித் தர முடியுமா? காந்தியார் கடவுள் தந்த உயிரை எடுப்பதற்கு, மனிதனுக்கு உரிமை இல்லை என்றார். புத்தரும், மனிதரைக் கொல்லும் தண்டனைகளை ஏற்க மறுத்தார். அந்த காந்தியும், புத்தரும் பிறந்த இந்த தேசத்தில், மரண தண்டனையை ஒழிக்க ஏன் தயங்க வேண்டும்? ஏன் சிலருக்கு, அந்தத் துணிவு வரவில்லை? என்று கேள்வி எழுப்பிய கனிமொழி, சிலப்பதிகார இலக்கியமே தூக்கு தண்டனைக்கு எதிரானதுதான் என்று சுட்டிக்காட்டினார்.

விடுதலை சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் பேசுகையில் - நாம் தூக்குத் தண்டனையை எதிர்ப்பது அது ஒரு அரச பயங்கரவாதம் என்ற அடிப்படையில்தான். அதே நேரத்தில் நாம் வெளிப்படையாகவே ஒரு கோரிக்கையை முன் வைக்க வேண்டும். ராஜீவ் கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன் மீதான தூக்கு தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று வெளிப்படையாகவே இந்த மாநாடு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்” - என்று வலியுறுத்தினார்.

நிகழ்ச்சியில் பேரறிவாளன் சிறையிலிருந்து எழுதிய ‘சிறை கொட்டடியிலிருந்து ஒரு முறையீட்டு மடல்’ நூலின் ஆங்கில பதிப்பை தொல். திருமாவளவன் வெளியிட, பொள்ளாச்சி உமாபதி பெற்றுக் கொண்டார். உமாபதி தனது உரையில், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 28 பேரில் 17 பேர் நிரபராதிகள் என்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இத்தனை ஆண்டுகளில் இவர்கள் மீது எந்தக் குற்றச்சாட்டாவது வந்திருக்கிறதா? குற்றம் சாட்டப்பட்டவர் எல்லோருமே நேர்மையானவர்கள் என்பதற்கு, இது சான்று அல்லவா?” என்று கேட்டார்.

இறுதியில் சுப. வீரபாண்டியன் நிறைவுரையாற்றினார். தீர்மானத்தை வழிமொழிந்து பேசிய அவர், தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட வழக்கில் பொய் சாட்சி கூறியவருக்கு தூக்கு தண்டனை உண்டு என்று சட்டம் கூறுகிறது. பொய்யான சாட்சியம் என்று தெரிந்த பிறகு, அவரை தூக்கில் போட்டுவிட்டால், ஏற்கனவே குற்றச்சாட்டில் தூக்கில் போட்டவர் உயிரை மீண்டும் கொண்டு வர முடியுமா? ஆக, பொய்யான சாட்சியங்கள்கூட ஒருவருக்கு தூக்கு தண்டனைக்கு வழி வகுக்கிறது என்பதை, இந்த சட்டப் பிரிவுகளே ஒப்புக் கொள்வதாகத் தானே பொருள்? என்ற கேள்வியை எழுப்பினார்.

நூலில் பேரறியாளன் சுட்டிக் காட்டிய ஒரு கருத்தையும், பேராசிரியர் சுப. வீரபாண்டியன் குறிப்பிட்டார். “வழக்கில் புலன் விசாரணை நடத்திய சி.பி.அய். அதிகாரி ரகோத்தம்பன் ‘ஜூனியர் விகடன்’ ஏட்டுக்கு அளித்த பேட்டியில், இந்த வழக்கில் இறுதி வரை விடுபடாத புதிர் தணுவின் இடுப்பில் கட்டியிருந்த பெல்டை தயாரித்தவர் யார் என்பதுதான் என்று குறிப்பிட்டிருந்தார். பெல்டை தயாரித்தது யார் என்பதை கண்டுபிடிக்கவே முடியாத நிலையில், அதற்கு பேட்டரி வாங்கித் தந்ததாக குற்றம் சாட்டி எனக்கு தூக்குத் தண்டனை விதித்தது நியாயம் தானா, என்ற கேள்வியை பேரறிவாளர் முன் வைத்துள்ளதை சுட்டிக் காட்டினார்.

மாநாட்டில் - கவிஞர்கள் தணிகைச் செல்வன், ஜெயபாஸ்கரன், கவிஞர் பச்சியப்பன் உணர்ச்சியான கவிதைகளை முழங்கினர். மு. மாறன் நன்றி கூறி இரவு 9.45 மணியளவில் நிகழ்ச்சி முடிவடைகிறது. **– நமது செய்தியாளர்**

## குடிஅரசு பெரியாரின் எழுத்தும் – பேச்சும் 1925 – 1938

## முன் வெளியீட்டுத் திட்டம்

*தமிழ் மக்களுக்குத் தேவையான சில கருத்துகளைச் சொல்லிப் பதிந்தாக வேண்டும். இன்று ஏற்றுக் கொள்ளா விட்டாலும் நாளை ஒரு நாள் ஏற்றுக் கொள்ளும் நிலை வரும். இக் கருத்துகளை சொல்லும் நிலையில் நான் தான் இருக்கிறேன். சொல்ல வேண்டிய கருத்துகளை நானே எழுதி, நானே அச்சுக்கோத்து, நானே அச்சிட்டு, நானே படித்துக் கொள்ளும் நிலைக்குப் போனாலும் குடிஅரசை வெளியிட்டு, என் கருத்துக்களை வரும் தலைமுறைக்கு விட்டுச் செல்ல வேண்டியது எனது கடமை (குடிஅரசு 10.06.1929)*

**– தந்தை பெரியார்**

தமிழர்களின் நீண்டகால விருப்பம் இப்போது செயல் வடிவத்தில்

வரலாறு படைத்திட்ட – தமிழர் வரலாற்றில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்திய புரட்சிகர பச்சை அட்டை ‘குடிஅரசு’ ஏட்டில் பெரியார் எழுதிய கட்டுரைகள் – தலையங்கங்கள் – அறிக்கைகள் – பேச்சுக்களை முழுமையாகத் திரட்டி, கால வரிசைப்படி தொகுத்து தமிழ் கூறும் நல்லுலகத்தின் முன் பெரியார் திராவிடர் கழகம் பெருமையுடன் ஒப்பளிக்கிறது!

1925 முதல் 1938 முடிய சுயமரியாதை இயக்கக் காலம் முழுவதும் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகிறது.

ஏற்கனவே கழகத்தால் வெளியிடப்பட்ட மூன்று தொகுதிகளும், பல புதிய சேர்க்கைகளோடு, இத்தொகுதிகளோடு இணைத்து பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 ஆம் தேதி வெளியிடப்படுகிறது.

- மொத்தம் 27 தொகுதிகள்!
- ஒவ்வொரு தொகுதியும் சுமார் 400 பக்கங்கள்!
- உயர்தர நேச்சுரல் ஷேட் புக் பிரிண்ட் தான்!
- நூலின் அடக்கவிலைக்கே பெற்றிட அரிய வாய்ப்பு!
- ரூ.5400 விலையுள்ள இத்தொகுதிகள் முன்பதிவுத் திட்டத்தின் கீழ்
- ரூ.3500-க்கே உங்களுக்குக் கிடைக்கும்.
- ரூ.3500 முன் பதிவு செய்து கொள்ள வேண்டிய கடைசி நாள் ஆகஸ்ட் 31 (31.08.2008)

### மற்றொரு மகிழ்ச்சியான அறிவிப்பு!

1928 முதல் 1930 வரை பெரியார் நடத்திய ‘ரிவோல்ட்’ ஆங்கில வார ஏட்டின் முக்கிய கட்டுரைத் தொகுப்பு நூலும் (சுமார் 800 பக்கங்கள் - தோழர்கள் எஸ்.வி. இராஜதுரை - வ.கீதா தொகுத்தது), செப்.17 இல் வெளிவருகிறது. ரூ.400 விலையுள்ள இந்த நூலுக்கு முன் பதிவுக் கட்டணம் ரூ.250 மட்டுமே.

**குடிஅரசு முன் பதிவு செய்வோருக்கு கட்டணமின்றி
‘ரிவோல்ட்’ ஆங்கில கட்டுரைத் தொகுப்பு இலவச பரிசாக வழங்கப்படும்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**தா.செ.மணி**, பெரியார் படிப்பகம், மேட்டூர் அணை-1, சேலம் மாவட்டம்-636 401.
வரைவோலையாகவோ (D.D.), பணவிடையாகவோ (எம்.ஓ.) அனுப்பலாம்.
**‘T.S. MANI’** என்ற பெயரில் வரைவோலை எடுக்க வேண்டும்.
மேட்டூர் அணையில் மாற்றத்தக்க வங்கி வரைவோலைகளாக இருத்தல் வேண்டும்.
காசோலை (Cheque) ஏற்க இயலாது.

**– பெரியார் திராவிடர் கழகம்**


**விடுதலை இராசேந்திரன்
இணையதள முகவரி
viduthalaikr@gmail.com**

**இயக்குநர் சீமான் உரை
தொடர்ச்சி அடுத்த இதழில்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 7th August 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 ஆகஸ்டு 14, 2008 புரட்சி 7 முழக்கம் 33 விலை : ரூ.2.50


## தடைகளைத் தகர்த்து தடம் தோள் உயர்த்துவோம்!

# ‘குடிஅரசு’ திட்டமிட்டபடி வெளிவரும்!

பெரியார் திராவிடர் கழகம் 27 குடிஅரசு தொகுப்புகளையும் - 800 பக்கங்களுக்கும் அதிகமான ‘ரிவோல்ட்’ ஆங்கில பத்திரிகையின் கட்டுரைத் தொகுப்பு நூலையும் வெளிக் கொணர இருக்கிறது.

‘ரிவோல்ட்’ பெரியார் தொடங்கி நடத்திய ஆங்கில வார ஏடு. அப்பத்திரிகையை வெளியிட பெரியார் தேர்வு செய்த நாள் - ரஷ்யப் புரட்சி தினமான நவம்பர் 7 இல் 1928 ஆண்டு ‘ரிவோல்ட்’டின் முதல் இதழ் வெளியானது. முதலில் ஈரோட்டிலிருந்தும், இடையே சென்னையிலிருந்தும், பிறகு மீண்டும் ஈரோட்டி லிருந்தும் வெளிவந்தது. 1930 ஆம் ஆண்டோடு இதழ் நிறுத்தப்பட்டுவிட்டது என்றாலும், இந்த இரண்டாண்டு காலத்தில் அதன் சாதனை மகத்தானது.

இப்போது ‘குடிஅரசு’, ‘ரிவோல்ட்’ இதழ்களை மீண்டும் வெளிக் கொணருவதற்கு கி.வீரமணிகள் - எப்படி நீதிமன்றத்துக்குப் போவோம் என்று மிரட்டு கிறார்களோ, அதே போன்ற எதிர்ப்புகள் அன்றும் இருந்தன. இன்று வீரமணி, அன்று பிரிட்டிஷ் ஆட்சியின் உளவுத்துறை. அவ்வளவுதான் வேறுபாடு.

பெரியார் ‘ரிவோல்ட்’ ஆங்கில இதழைத் தொடங்குவதாக அறிவித்த பிறகும், 7 மாதம் வரை இதழைத் தொடங்க முடியவில்லை. காரணம், அன்றைய நீதிமன்றத்தில் நீதிபதி ‘ரிவோல்ட்டை’ பதிவு செய்ய மறுத்தார். ரிவோல்ட் பத்திரிகையின் வெளியீட்டாளரான அன்னை நாகம்மையார், நீதிபதியிடம் நேரில் சென்று விசாரித்தபோது, ரகசிய போலீசார் விசாரணைக்குப் பிறகுதான் பதிவு செய்யப்படும் என்று நிறுத்தி அறிவித்துவிட்டார். தொடர்ந்து அன்றைய ரகசிய போலீசார் ‘ரிவோல்ட்’ பத்திரிகை பற்றிய ரகசிய விசாரணைகளில் இறங்கினர். பின்னர் ரகசிய போலீஸ்துறை அதிகாரி, கேட்டுக் கொண்டதற்கு இணங்க, வெளியீட்டாளரான அன்னை நாகம்மையார் விளக்க அறிக்கை ஒன்றை எழுதிக் கொடுத்தார். அதில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

“ரிவோல்ட் என்ற வார்த்தைக்கு நான் எடுத்துக் கொண்ட அர்த்தம் **கட்டுப்பாட்டை உடைத்தல் என்பது**. அதாவது மனித தர்மத்துக்கும், மனித இயற்கைக்கும் விரோதமாக, அரசியல் ஆனாலும் சரி, மத இயலில் ஆனாலும் சரி, **அதிகார இயலில் ஆனாலும் சரி**, முதலாளி இயலில் ஆனாலும் சரி, ஆண் இயலில் ஆனாலும் சரி, மற்ற எவைகளினாலும் சரி, அவைகளினால் ஏற்படும் இயற்கைக்கும் அறிவுக்கும் மாறுபட்ட கட்டுப்பாடுகளை உடைத்து, உலகமும், அதன் இன்பமும், எல்லோருக்கும் பொது என்பதும், மக்கள் யாவரும் சமம் என்பதுமான கொள்கையை மனசாட்சிப்படி சாத்தியமான வழிகளில் பிரச்சாரம் செய்வதே அதன் நோக்கம்.”

இப்படி **அதிகார இயல் கட்டுப்பாடுகளை** தகர்க்க வந்ததுதான் ‘ரிவோல்ட்’. இன்று மீண்டும் அதை மக்களிடம் கொண்டு செல்லும் போதும், வீரமணியார்களின் ‘அதிகாரத்துவம்’ மிரட்டுகிறது. ‘கட்டுப் பாடுகள்’ என்ற ஆயுதத்தை கையில் எடுக்கிறது. நீதி மன்றம் போய் பெரியார் கொள்கைப் பரப்பலை தடுப்போம் என்று வீரம் பேசுகிறது. ‘ரிவோல்ட்’டும் ‘குடிஅரசு’ம் அன்று சந்தித்த தடைகளை 2008லும் சந்திக்கிறது. ஆனாலும், மிரட்டல்களை, உருட்டல்களை தூள் தூளாக்கி ‘ரிவோல்ட்’ மக்களிடம் வரு வதை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திட முடியாது.

‘ரிவோல்ட்’ பத்திரிகையின் முதல் இதழை ஊ.பு.அ.சவுந்தரபாண்டியனார் வெளியிட்டார். விழாவில் வரவேற்புரையாற்றிய தந்தை பெரியார் இவ்வாறு குறிப்பிட்டார்:

“முக்கியமாக நமக்கு எதிரிகள் பார்ப்பனர்கள் என்று எண்ணியிருந்தோம். ஆனால் அவர்கள் கூடுமானவரை எதிர்த்துப் பார்த்தார்கள். பின்னர் தங்கள் பித்தலாட்டக் காரியம் இங்கே செல்லாது என்று கண்டு அவர்களே இவ்வியக்கம் அவசியம் வேண்டியதுதான் என்று வெளியளவிலாவது சொல்லிக் கொள்கிறார்கள்.

**ஆனால், நமக்கு எதிரிகள் நமக்குள்ளாகவே இருக்கிறார்கள்.**

- ‘குடிஅரசு’ (11.11.28) இந்த செய்திகளைப் பதிவு செய்திருக்கிறது. ‘நமக்கு எதிரிகள் நமக்குள்ளாகவே இருக்கிறார்கள்’ என்று பெரியார் அன்று சொன்னது, இன்றும் உண்மையாகவே இருக்கிறது.

வரலாறு படைத்த ‘ரிவோல்ட்’டில் பெரியார், குத்தூசி குருசாமி, இராமநாதன், நாகர்கோயில் வழக்கறிஞர் பி.சிதம்பரம்பிள்ளை, செல்வி ஞானம், வழக்குரைஞர் இலட்சுமிநாதன், ஜி.சுமதிபாய், மருத்துவர் முத்துலட்சுமி ரெட்டி, செல்வி இந்திராணி, ஆர்.கே.சண்முகம், வழக்குரைஞர் கே.எம்பாலசுப்பிர மணியம் என்று ஒரு எழுத்தாளர் பட்டாளமே கருத்துகளை எழுதிக் குவித்தது. குத்தூசி குருசாமி இதிகாசங்களைப் பற்றி எழுதிய கட்டுரைத் தொடர் இந்தியா முழுவதையுமே கலக்கியது. அதைப் படித்த பிறகுதான், “காந்தியாரே, நான் சொல்லும் ராமன் வேறு; ராமாயண ராமன் வேறு” என்று தன்னிலை விளக்கம் தந்து, ராமாயண ராமனின் பக்தியிலிருந்து தன்னை துண்டித்துக் கொண்டார். இன்னும் ஒரு படி மேலே சென்று பார்ப்பனர்களைக்கூட, பெரியார் அன்று ‘ரிவோல்ட்’டில் எழுத அனுமதித்தார்.

‘பால்ய விவாகம்’ என்ற குழந்தைகள் திருமணக் கொடுமைச் சட்டத்தை அப்போது அரசு தடை செய்தது. தடைச் சட்டம் வந்த பிறகும்கூட, அதை செயல்படுத்த விடாமல் தடுக்கும் முயற்சிகளில் பார்ப்பனர்கள் இறங்கினர். பார்ப்பனர்களின் சூழ்ச்சி களை ‘ரிவோல்ட்’ தொடர்ந்து அம்பலப்படுத்தியது. எம்.கே. ஆச்சாரியார் என்ற தமிழ்நாட்டுப் பார்ப்பனர் சிம்லாவில் இருந்து கொண்டு, இது தொடர்பாக தமிழகப் பார்ப்பனர்களுக்கு எழுதிய கடிதத்தை ‘ரிவோல்ட்’ அம்பலப்படுத்தியது. ‘ரிவோல்ட்’ ஆங்கில பத்திரிகை இந்தியா முழுதும் பொய்யுரைப்பதற்கு தடையாக இருப்பதை உணர்ந்த பார்ப்பனர்கள், திருச்சியில் கூடி, தங்களுக்கும் ஒரு ஆங்கில நாளிதழ் தொடங்க திட்டமிட்டனர். ‘ரிவோல்ட்’ - இப்படி எல்லாம் பார்ப்பனர்களை கதிகலங்க வைத்தது என்பதுதான் வரலாறு. அந்த வரலாறுகளையும், அதன், கருத்தாழமிக்க கட்டுரைகளையும், ‘குடிஅரசு’ - வெளியிட்ட பெரியாரின் புரட்சிகர எழுத்துகளையும், தமிழ்நாட்டின் இளைய தலைமுறையினரிடம் கொண்டு போய் சேர்க்கும் கடமையில் தான் பெரியார் திராவிடர் கழகம், இப்போது தன்னை ஒப்படைத்துக் கொண்டு, களமிறங்கியுள்ளது.

பெரியாரின் சொத்துகளை தம்வசமாக்கிக் கொண்டு, பெரியாரை தங்களுக்கான ‘காப்புரிமை யாக’ பறைசாற்றிக் கொள்ளும் வீரமணியார்கள், இந்த அரிய கருத்துக் கருவூலங்களை எப்போதோ வெளிக் கொண்டு வந்திருக்க வேண்டும். அந்த வரலாற்றுக் கடமைகளை ஆற்றாமல், “கி.வீரமணியின் வாழ்வியல் சிந்தனைகளை” ஆயிரம் ஆயிரமாய் அச்சடித்துக் கொண்டு, கூவிக் கூவி விற்றார்களே தவிர, ‘குடிஅரசு’ தொகுப்புகளை வெளிக்கொணரவில்லை. இப்போது தாமும் செய்யாமல், பிறரையும் செய்ய விடாது தடுக்கும் நோக்கத்தில் பெரியார் திராவிடர் கழகத்தின் முயற்சிகளை தடுக்கலாம் என்று துடிக்கிறார்கள்.

‘பூனைக் குட்டி வெளியே வந்துவிட்டது’ என்று அடிக்கடி கூறுவார், கி.வீரமணி. இப்போது, அதே சொற்றொடருக்கு அவரே சான்றாக நிற்கிறார். இப்போதுதான் அந்த சொற்றொடர் உயிர் துடிப்பு மிக்க அர்த்தம் பெற்றிருக்கிறது.

இன உணர்வுள்ள தமிழர்களின் சிந்தனைக்கு - பெரியார் திராவிடர் கழகம் இந்த நியாயங்களை முன் வைக்கிறது.

**பெரியாரின் ‘குடிஅரசு’ தொகுப்புகளை கழகத்தின் கொள்கையாளர்கள் பல மாதங்கள் உழைத்து, தொகுத்து திரட்டி அதன் கையெழுத்துப் பிரதிகளை 1983 ஆம் ஆண்டிலேயே திரு.கி.வீரமணி அவர்களிடம் நேரில் வழங்கிய பிறகும், 2008 ஆம் ஆண்டு வரை அந்தத் தொகுப்புகள் அச்சு ஏறாமல் போனது ஏன்?**

**“வாழ்வியல் சிந்தனை”களுக்கு தரப்பட்ட முக்கியத்துவம், பெரியார் சிந்தனைகளுக்கு மறுக்கப்பட்டது ஏன்?**

“பெரியார் திராவிடர் கழகம்” தொடங்கிய பிறகு தான், 2003 ஆம் ஆண்டு ‘குடிஅரசு’ முதல் தொகுப்பை வெளியே கொண்டு வந்தது. அதன் பிறகு 2005 ஆம் ஆண்டு இரண்டாம் தொகுப்பை இரு தொகுதிகளாக வெளியிட்டது. இப்போது 1925 முதல் 1938 வரை ‘குடிஅரசு’ பத்திரிகையில் வெளிவந்த பெரியாரின் பேச்சுகளையும், எழுத்துகளையும் ‘ரிவோல்ட்’ ஏட்டின் கட்டுரைத் தொகுப்புகளையும் வெளிக் கொணர பெரும் முயற்சிகளில் இறங்கியுள்ளது. **எந்த பொருளாதார பின்புலமும் இல்லாமல், தொண்டர்களின் கொள்கை வலிமையில் மட்டுமே இயங்கி வரும் அமைப்பு. கொள்கைப் பற்றுக் காரணமாகவே இந்தக் கடமையில் இறங்கியிருக்கிறது.**

இத்தனை ஆண்டுகாலமாக, பெரியாரின் ‘குடிஅரசு’ தொகுப்பை வெளியிடாமல், பெரியாரியலுக்கு துரோகமிழைத்தவர்கள், இப்போது ‘பெரியார் திராவிடர் கழக’த்தை மிரட்டி, இந்தக் கடமையை செய்யவிடாது துடிப்பதும், நீதிமன்றம் போவோம் என்று மிரட்டுவதும் நியாயம் தானா என்ற கேள்வியை இனமானத் தமிழர்களின் மனசாட்சிக்கு சமர்ப்பிக் கிறோம்.

4 ஆம் பக்கம்

## அய்யாவின் சிந்தனைகள் - ஆயுள் செயலாளர் நிறுவனங்களின் ஆதிக்க உடைமையல்ல; அது, அடித்தள மக்களுக்கான உரிமை!

**தலையங்கம்**

# கடுமையான பணிதான்; வென்று காட்டுவோம்!

*பெரியார் பணி முடிக்க வீறு கொண்டு எழுவோம் என்ற முழக்கத்தோடு நாம் தொடங்கிய பயணம் தொய்வின்றி நடந்து வருவதை நீங்கள் அறிவீர்கள்.*

*அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகர் உரிமை; வேத சோதிடக் கல்வி எதிர்ப்பு; அறநிலையத் துறையின் கீழுள்ள இந்துக் கோயில்களில் பெண்களுக்கு பணி வாய்ப்பு; தனியார் துறையில் இடஒதுக்கீடு கோரி பிரச்சாரப் பயணம்; 27 சதவீத இட ஒதுக்கீட்டை வலியுறுத்தி பரப்புரை இயக்கம்; சேலம் இரயில்வே கோட்டம் அமைய தொடர் போராட்டம்; ஈழத் தமிழர் போராட்டத்துக்கு தொடர்ந்து ஆதரவு; டெல்லியில் ஆர்ப்பாட்டம்; கிராமங்களில் நிலவும் தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக பிரச்சாரப் பயணம்; இரட்டை டம்ளர் உடைப்புப் போராட்டம்; பெரியார் சிலை சிறீரங்கத்தில் உடைக்கப்பட்டவுடன் பார்ப்பனர்களுக்குப் பதிலடி; அதற்காக தேசிய பாதுகாப்பு சட்டத்தில் சிறை; மூடநம்பிக்கை ஒழிப்பு பகுத்தறிவுப் பிரச்சாரங்கள்; நாத்திகர் விழாக்கள் என்று ஓய்வின்றி நமது பெரியாரிய பயணம் தொடருகிறது. உண்மையான பெரியாரியலாளர்களும், தமிழின உணர்வாளர்களும் பெரியார் திராவிடர் கழகத்தின் இந்தப் பணிகளை மனம் திறந்து பாராட்டுகிறார்கள்.*

*இப்பணிகளுக்கு சிகரம் வைத்தாற் போல், நாம் புதைந்து கிடந்த பெரியார் எழுத்துக்களையும், பேச்சுகளையும் முழுமையாக வெளிக்கொணரும் பணியில் இறங்கியுள்ளோம். மிகக் கடுமையான பணி என்ற போதிலும் பெரியாரியலுக்கு நாம் செய்ய வேண்டிய கடமையாகும்.*

*1927 இல் தொடங்கி 1938 வரை 27 "குடிஅரசு" தொகுதிகளை வெளிக் கொணரும் இந்த முயற்சி பெரியார் திராவிடர் கழகத்துக்கு மகத்தான பெருமை சேர்க்கும் என்பதில் அய்ய மில்லை. எதிர்கால வரலாறு, பெரியார் திராவிடர் கழகத்தின் இந்தப் பணியை பதிவு செய்யும். இந்த லட்சியக் கடமை யில் தோழர்கள் ஒவ்வொருவரும் களமிறங்கிச் செயல்பட வேண்டியது அவசியமாகும்.*

*முதலில் கழகத்தினர் ஒவ்வொரு வரும் தொகுதிகளை வாங்குவதை கடமையாகக் கொள்ள வேண்டும்.*

*பகுதியிலுள்ள திராவிடர் இயக்கங்களின் தோழர்கள், முக்கிய பிரமுகர்கள், கல்வி நிறுவனங்கள், ஆய்வு மய்யங்கள், தொண்டு நிறுவனங்களை அணுகி விளக்கிக் கூறுங்கள்.*

*கல்வி நிறுவனங்களுக்கு, நூலகங்களுக்கு நினைவுப் பரிசாக வழங்கலாம் என்ற யோசனையை முன் வையுங்கள்.*

*ஒன்றுக்கு மேற்பட்டவர்கள்கூட செலவைப் பகிர்ந்து தொகுதிகளை வாங்கலாம். வாங்கி, அன்பளிப்பாகவும் வழங்கலாம் என்ற ஆலோசனையை முன் வையுங்கள்.*

*இயக்கத்துக்கு பெருமை சேர்க்கும் இந்தப் பெரியாரியப் பணியில் தோழர்களே! அர்ப்பணிப்புடன் கடமையை விரைந்து தொடங்குங்கள்.*

**கொளத்தூர் தா.செ.மணி**
**தலைவர்**

# பார்ப்பன ராஜாவுக்கு பதிலடி

*பா.ஜ.க. துணைத் தலைவர் பார்ப்பான் எம். ராஜாவின் நரகல் நடைப் பேச்சு தமிழகம் முழுதும் தோழர்களைக் கொதிப்படையச் செய்துள்ளது. ஒரு தோழர் எழுதியனுப்பிய மறுப்பு இது.*

- *தந்தை பெரியார் 'பேசிக்' அறிவே இல்லாதவராம்! மானங்கெட்டவராம். வெள்ளைக்காரனின் கைக்கூலியாம்.*

*அட, மானங்கெட்ட ராஜாவே வெள்ளைக்காரனுக்கு இந்த நாட்டைக் காட்டிக் கொடுத்ததே ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த ஏழு பார்ப்பான்கள் தான். வெள்ளையனை வீட்டினுள் சாப்பிட விட்டான். ஆனால் மகாத்மா என்று சொல்லப்பட்ட காந்தியையே திண்ணையில் உட்கார வைத்து சாப்பாடு போட்டான், மயிலைப் பார்ப்பான் சீனிவாசாச்சாரி. யார் கைக் கூலி?*

- *தி.க., தி.மு.க. காரனுங்களை தெருவிலே நடமாட விட்டால் பெண்களின் மானத்திற்கு ஆபத்தாம்.*

*இதோ பார், உன்னைப் போன்ற ஒரு பார்ப்பான் தஞ்சை ஊத்துக்கோட்டைச் சேர்ந்த சுப்பிரமணி என்ற பார்ப்பான் 1847 இல் எழுதுகிறான்...*

> *"தாயே யசோதா உந்தன், ஆயர் குலத்துதித்த*
> *மாயன் கோபால கிருஷ்ணன் செய்யும்*
> *ஜாலத்தைக் கேளடி தாயே!"*
>
> *"பாலனென்று தாவியணைத்தேன்*
> *மாலையிட்டவன் போல் வாயில் முத்தமிட்டான்*
> *பாலனல்லடி உன் மகன் ஜாலமாக செய்ததெல்லாம்*
> *நாலுபேர்கள் கேட்கச் சொன்னால் நாணமிக ஆகுதடி.... தாயே"*

*இதோ சுப்பிரமணி பாரதி எழுதுகிறான்...*

> *"தீராத விளையாட்டுப் பிள்ளை... கண்ணனால்*
> *தெருவிலே பெண்களுக்கு ஓயாத தொல்லை!"*

*ஏன் உங்கள் கண்ணன் ஆண்பிள்ளைகளோடு விளையாட மாட்டானா?*

*ஒரு ஆண்டாள் என்கிற பார்ப்பனத்தி திருப்பாவையில் எழுதுகிறாள்...*

> *"கற்று கறவை கணங்கள் பல கறந்து....*
> *புற்றரவு அல்குல் புனமயிலே! போதாராய்...."*

*இதற்கு என்ன பொருள்? புற்றில் இருக்கும் பாம்பின் படத்தைப் போன்று பெண் குறியை உடையவளே... ஒரு பெண்ணைப் புகழ வேறு எதுவும் கிடைக்கவில்லையா?*

- *ஆயுதத்தையெல்லாம் கடவுள்கிட்ட கொடுத்திட்டு நாசமாப் போயிட்டாங்களாம்! ராஜா கண்ணீர் வடிக்கிறான்! ஏன் உங்க சாமிகிட்ட திரும்பக் கேட்டால் தந்து உதவாதா?*

*ஆயுதங்களுடன் வீரமாக உலாவரும் சாமிகள் திருடப்படாமல் எத்தனை இருக்கு? பூட்டை உடைத்து திருடப்பட்டு வெளிநாட்டில் மாட்டுக்கறி திங்கறவனிடம் எத்தனை இருக்கு? கணக்குத் தெரியுமா உனக்கு? இங்கு பஞ்சாமிர்தம் சாப்பிடும் கடவுளர்கள் வெளிநாட்டில் மாட்டுக்கறி திங்குமா? இல்லை வராகக் கறி (பன்றிக் கறி) திங்குமா?*

*காணாமல் போன சக்தியுள்ள கடவுளைக் கண்டு பிடிக்கிறதே மலம் தின்னும் நாய்கள் தான். உங்க சாமியோட யோக்யதை இந்த நிலைமையிலே இருக்கு இந்த நிலையிலே ஆயுதம் ஒரு கேடா?*

- *இந்த நாட்டிலே எந்த மதத்தையும் புண்படுத்தக் கூடாதுன்னு சட்டத்திலே இருக்காம்! காவல்துறை எப்படி அனுமதி கொடுத்ததுன்னு ஆவேசப்படுறியே? 1992 டிசம்பர் 6 ஆம் தேதி பாபர் மசூதியை இடித்தீர்களே! முஸ்லீம்களை மகிழ்விக்கவா? அல்லது புண்படுத்தவா?*

*மதம் என்பது மக்களுக்காகத்தானே - உனது இந்து மதம் எங்களை சூத்திரன் (தேவடியாள் மகன்) என்று சொல்லும் போது 'சூத்திர' இந்துக்களான எங்கள் மனம் புண்படாதா?*


*கலைஞரின் கருவிலே குற்றம் என்கிறாயே? வருணாசிரம தர்மப்படி நீ பிரம்மாவின் நெற்றியில் பிறந்தவன். நீ ஜட்டியை நெற்றியில் போட்டிருக்கியா? அல்லது வைசியன் போடும் தொடையில் போட்டிருக்கியா?*

*நீ வைசியனா? இல்லை பார்ப்பானா? யார் கருவிலே குற்றம்?*

**– சிற்பி ராஜன்**

# மீனவர் தாக்குதலைக் கண்டித்து – தூத்துக்குடியில் கழகம் ஆர்ப்பாட்டம்

*தூத்துக்குடி பெரியார் திராவிடர் கழகம், தூத்துக்குடி நகர கழகம் சார்பாக பூபால்ராயர்புரம் முதன்மை சாலையில் (தூத்துக்குடி) தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தும் சிங்கள அரசைக் கண்டித்தும், பாதுகாக்கத் தவறிய இந்திய அரசைக் கண்டித்தும், கண்டன ஆர்ப்பாட்டம் 9.8.2008 சனிக்கிழமை மாலை 6 மணி அளவில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு நகர கழகத் தலைவர் கோ. அ. குமார் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு, ஆழ்வை ஒன்றியச் செயலாளர் நாத்திகன் சேது. ராமசாமி முன்னிலை வகித்தனர். ஆதித் தமிழர் பேரவையின் மாநில துணைப் பொதுச் செயலாளர் க.கண்ணன் தொடங்கி வைத்து உரையாற்றினார். தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் சா.க.பால சுப்பிரமணியன், நெல்லை மாவட்டத் தலைவர் ப.அரியமுத்து உரையை தொடர்ந்து, கண்டன உரையாக புரட்சிகர இளைஞர் முன்னணி இரா. தமிழரசன், உலக திருக்குறள் பேரவையின் மோ. அன்பழகன், தூத்துக்குடி மாவட்டத் துணைத்தலைவர் வே.பால்ராசு, மாவட்டத் தலைவர் சி. அம்புரோசு ஆகியோர் உரை நிகழ்த்தினர். இறுதியாக பெரியார் தி.க. தலைமை செயற்குழு உறுப்பினர் பால். பிரபாகரன் கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்து வைத்து, கிறித்துவர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் பனி. சுந்தரி மைந்தன் முடித்து வைத்தார். இறுதியாக நகர கழகத் துணைத் தலைவர் சா.த.பிரபாகரன் நன்றி கூறினார்.*




*ஆர்ப்பாட்டம் மாலை 6 மணிக்கு ஆரம்பித்து, இரவு 8.30 மணி வரை நடைபெற்றது. கண்டன ஆர்ப்பாட்டத்தில் நெல்லை சீ.அ.காசிராஜன் (தலைமை செயற்குழு உறுப்பினர்), நெல்லை ராசா மற்றும் தூத்துக்குடி நகர கழக செயலாளர் பால். அறிவழகன், மாவட்ட துணைச் செயலாளர் க.மதன், தோழர்கள் வ. அகரன், சு.மகராசன், சந்திரசேகர், சி.அமிர்தராசு உட்பட ஆதித் தமிழர் பேரவை மனோகர் சேகுவேரா, செந்தில்குமார், காளிமுத்து மற்றும் பலர் கலந்து கொண்டனர்.*

# கடவுளை மறுக்கும் எங்களை எந்தக் கடவுளும் தண்டிக்காதது ஏன்?

## இயக்குநர் சீமான் கேள்வி!

*ஜூன் 15 அன்று சென்னை எம்.ஜி.ஆர். நகரில் பெரியார் திராவிடர் கழகம் நடத்திய காமராசர் பிறந்த நாள் விழா கூட்டத்தில் பங்கேற்று இயக்குனர் சீமான் ஆற்றிய உரை, சென்ற இதழின் தொடர்ச்சி:*

ராசா சொல்கிறார், 10 ஆண்டுகளில் திராவிட இயக்கத்தையே ஒழிக்கிறாராம். பெரியாருக்கு ஒரு இடத்திலேயும் சிலை இருக்காதாம். ஒரு சிலை மீது கை வைச்சதுக்கே என்ன நடந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். (கைதட்டல்) அப்போவெல்லாம் அவரு தலை எடுக்கலையாம். இப்போது நீங்கள் தலையெடுத்தீங்கன்னா நாங்கள் உங்கள் தலையை எடுப்போம். (கைதட்டல்) அதையும் தெரிந்து கொள். எங்கள் மண்ணில் நெல் விளைகிறதோ இல்லையோ வீரம் விளையும். மானம், சூடு, சொரணை உள்ளவர்கள் நாங்கள். சூடு, சொரணை உள்ள பார்ப்பானாக இருந்தால் எவனும் சோறு திங்கக் கூடாது. ஏனா அது நாங்கள் விவசாயம் செய்து விளைய வைச்சது. நீங்க விவசாயம் செய்து விளைய வைச்சி சாப்பிடுங்கடா.

நீங்கள் எங்களைப் பார்த்து வெட்டுவோம்; குத்துவோம் என்கிறாயே, புழல் மத்திய சிறையிலே போய் பார். அத்தனை பேரும் எங்கள் ஆட்கள் தான் இருக்கிறான். ஒரு பார்ப்பான் இருக்கிறானாடா? ஜெயில் கட்டினதே எங்களுக்காகத் தான் ஒன்று இரண்டு படித்ததே நாங்கள் ஜெயில் கம்பியை எண்ணுவதற்காக தான். இந்த மிரட்டல் எல்லாம் எங்களிடம் வேண்டாம். (கைதட்டல்)

பெரியார் என்ற பெருந்தலைவன் பெயர் இருக்கும் இந்த மண்ணில் (பி.ஜே.பி.யே) தனியா நின்னு ஒரு இடத்தில் வென்று காட்டு பார்க்கலாம். இந்து என்று சொல்லி ஆள் சேர்க்க எண்ணாதே. எம் சொந்த மக்களே! உன்னை தாழ்த்தப்பட்டவன் என்றும் ஒடுக்கப்பட்டவன் என்றும் அடக்கி, ஒடுக்கியவன் அவன் பின்னாடி எப்படி வெட்கம், மானம் இல்லாம போகிறாய். நான் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லச் சொல். ஒரு தாழ்த்தப்பட்ட தோழன் வீட்டிலே எச்.ராசாவை ஒரு வேளை சாப்பிட்டு விட்டு போகச் சொல். தாழ்த்தப்பட்ட அருந்ததியர் வீட்டிலே ஒரு வேளை சாப்பிட்டுவிட்டு போகச் சொல் பார்க்கலாம்.

நாங்கள் நாத்திகம் பேசுறோம்னா எங்க மக்களுக்கு மான உணர்வு, சொரணை வரவேண்டும், சிந்திக்கனும், அறிவார்ந்த இனமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். ராசாவே இந்த தேசத்தில் உள்ள கோயில்களில் ஒரு கோயிலாவது உன் பாட்டன், முப்பாட்டன், உன் அப்பன் கட்டியிருக்கான் என்று சொல் பார்ப்போம். கட்டியவனெல்லாம் எம் இனத்தை சார்ந்தவர்கள்தானே. ஒரே ஒரு சொம்பில் தண்ணீர் கொண்டு வந்து யாருக்கும் புரியாத சமஸ்கிருத பாஷையிலே மந்திரம் என்று சொல்லி தண்ணீர் தெளித்தான். கல்லு கடவுளாகி விட்டது என்று சொல்லி அனைவரையும் வெளியேற்றிவிட்டு, அவன் உள்ளே போய்விட்டான். நாம் உள்ளே போனா தீட்டு என்றான். அன்றைக்கு நாங்கள் செருப்பை கழட்டி அடிச்சிருந்தோம்னா இன்னைக்கு நீ பேசுவாயாடா? (கைதட்டல்) விட்டதுடைய விளைவு தானே? அய்யா கேட்டாரே ஒரு சொம்பு தண்ணியிலே கல்லு கடவுளாகிப் போச்சா. அந்த தண்ணீரைக் கொண்டு வந்து தமிழக தெருக்களிலே தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்கள் தீண்டத்தகாதவன் என்ற இழிவோடு திரிகின்றான். அவன் தலையில் கொஞ்சம் தண்ணியை தெளித்து விடுங்கள். அவன் கடவுளாக வேண்டாம் குறைந்தபட்சம் மனிதனாகவாவது ஆகட்டும் என்றார். (கைதட்டல்)

கடவுள் இல்லை என்றால் உனக்கேன் வலிக்குது. இராமன் ஒருத்தன் இருந்தானா? அவன் என்கிட்டே வந்து கேட்கட்டும். இராமகோபாலனை அய்யா என்று தான் சொல்றேன். உங்களை வைதால் நீங்கள் எங்கே மேலே வழக்கு போடுங்க. கடவுள் உன்னை படைச்சார் என்று நீ நம்பினினா, உலகத்தை படைச்சார்னு நம்பினினா, எங்களையும் படைச்சார்னு



நம்பினினா, அவன் தானே எல்லார் தலையிலும் எழுதி வைக்கிறான். அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்று நீ நம்பினினா என்னையும் அவன் தான்டா கடவுள் இல்லை, இல்லை என்று ஊர் ஊரா போய் பேசச் சொல்லி, என் தலையில் எழுதியிருக்கான். தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் சொல்லிவிட்டு எந்த மசுருக்கடா பாபர் மசூதியை இடிச்சிட்டு, ராமர் கோயில் கட்டுறது. சுட்டுத் தள்ளும் துப்பாக்கி குண்டிலேயும் இருப்பானா, உன் கடவுள் சொல். என்ன கேவல மான சிந்தனை போக்கு. இத்தனை ஆண்டுகளாக கடவுளைப் பற்றி பேசுகிறோம், ஒரு கடவுள்கூட இது வரை வந்து எங்களை கேட்கவில்லையே. எல்லா காலங்களி லும் அவதாரம் எடுத்து வந்த இந்த கடவுளில் ஒன்றாவது அமெரிக்காவில், ஆஸ்திரேலியாவில், இஸ்ரேலிலிலோ, ஈராக்கிலோ ஏன் எடுக்கவில்லை. உலகத்தையே படைத்த கடவுள், ஏன் இந்த தேசத்திலேயே அவதாரங்களை எடுத்துக் கொண்டது.

சேது சமுத்திரத் திட்டத்தை எதைச் சொல்லி தடுத்து வைத்திருக்கான். இராமர் பாலத்தை உடைக்கலாமா என்கிறான். அறிவார்ந்த சமூகம் 21 ஆம் நூற்றாண்டில் நிற்கக் கூடிய ஒரு சமூகம், இந்த தேசம். மக்கள் நம்ப முடிகிறதா? உண்மையிலேயே நீங்கள் கல்வியாளர்கள் தானா? உண்மையிலேயே அறிவு இருக்கிறதா? கடல் மட்டத்திற்கு மேலே தெரியக் கூடிய மண் என்பது ஒரு தீவு. தனுஷ்கோடி, கச்சத்தீவு, இலங்கை போன்ற பல தீவுகள் இருக்கின்றது. கடலுக்கு உள்ளே இருக்கிற ஒரு மணல் மேட்டைத் தான் இவர்கள் இராமர் பாலம் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். பிரிட்டிஷ் காரன் இந்த மண்ணை ஆள்கின்ற போதே இந்த மணல் திட்டை ஆதம் பாலம் என்று எழுதி வைத்து இருந்தானே, அப்போ இராமர் பாலம் என்று சொல்லும் சுப்ரமணியசாமி, இந்து முன்னணி, பாரதிய ஜனதா இவர்கள் எல்லாம் அன்றைக்கு ஏன் இது ஆதம் பாலம் அல்ல, இராமன் பாலம் தான் என்று சொல்லவில்லை. சொல்லியிருந்தால் எல்லாப் பயல்களையும் கொக்கு, குருவி சுடுவதைப் போல சுட்டுத் தள்ளியிருப்பான். எங்களுக்கு வேலை மிச்சமாயிருக்கும். (கைதட்டல்)

ஒரு நல்ல இந்து இருந்தா சிவலிங்கம் என்றால் என்ன என்று பொது மேடையில் நீங்க பேசுங்கடா. (கைதட்டல்) இவ்வளவு அவதாரங்கள், கடவுள்கள் இருந்து இந்த பூமியில் விளைந்தது என்ன? நான் தமிழ் படிக்க போனேன். சிவன் தலையில் இருந்தது கங்கை என்கிற தமிழ்ப் பாடம். புவியியல் படிக்கப் போனேன், அதிலே இமயமலையில் இருக்கின்றது கங்கை என்கிருக்கிறது. எனக்குக் குழப்பம். சிவன் தலையில் இருக்கிறதா? இமயமலையில் இருக்கிறதா கங்கை? முடிவு பண்ணிட்டு பாடம் நடத்துங்க என்கிறேன். இதிலே என்ன தப்பு இருக்கின்றது? இந்த உலகம் உருவானதே சூரியனிலிருந்து வெடித்துச் சிதறிய துகள்கள் தான் இந்த பூமியும். சந்திரனும் என்பது உண்மை. நாளடைவில் இந்த பூமியில் மட்டும் தான் உயிரினங்கள் தோன்றுவதற்கு ஏதுவான சூழ்நிலை உருவானது. காரணம் இங்கு நீர் உருவாகும் சூழ்நிலை உருவானது. ஒரு செல் உயிரி உண்டாகி படிப்படியாக பரிணாம வளர்ச்சிப் பெற்று 6, 7 லட்சம் ஆண்டுகளுக்கு முன் தான் மனித இனம் உருவாகிறது. மொழி தோன்றி ஏறக்குறைய 2 லட்சம் ஆண்டுகள்தான் ஆகின்றது. இது வரலாறு, இதிலேகடவுள் எங்கே வந்தான், என்ன செய்தான்.

மாற்றம் என்பதே மானிடத் தத்துவம். மாறாது என்ற சொல்லைத் தவிர மற்றவை அனைத்தும் மாறிவிடும் என்ற மார்க்சின் தத்துவத்தைக் கூறி நல்ல உறவுகளே. சத்தியராஜ் தான் சொன்னாங்க, கடவுள்னு ஒருத்தன் இருந்தா ஒன்னும் சாதிச்சி காட்ட வேணாம், என் மண்டையிலிருந்து உதிர்ந்த மயிரை முளைக்க வைச்சிக் காட்டுங்க. நான் மறுபடியும் சாமி கும்பிடுறேன் என்றார். உண்மையிலேயே சாமிக்கு சக்தி இருந்தா, நீங்கள் தேர் இழுக்கிறேங்களடா. நான் என்ன சொல்றேன், சாமியை தேரில் ஏத்தி வைப்போம். அது சக்தியாலே அந்த தேர் நகர்ந்துச்சினா நாங்கள் எல்லாம் சாமி கும்பிடுகிறோம்டா. இடுப்பில் துண்டைக் கட்டிக்கிட்டு நாங்க தான்டா இழுக்கவேண்டியிருக்குது. அந்தத் தேரை ஒரு பார்ப்பனனாவது இழுக்குறானாடா பாருங்கள்? மலை மீது நின்று ஒரு லட்சம் பிரசங்கங்களை செய்கிறார், தேவனின் மகன் பரமப்பிதா. முன்னால் இருப்பவனுக்குத் தான் கேட்கும் பின்னால் இருப் பவனுக்கு கேட்காது. அந்தக் கடவுளுக்கு தெரியல, இந்த ஒலி வாங்கியை படைக்கனும் என்று, தீப்பந் தத்தை ஏற்றி வைச்சி அவர் பிரசங்கம் செய்கிறார். அந்த தேவகுமாரனுக்கு தெரியல இந்த மின் விளக்கை படைக்கனும்னு. கட்டு மரத்தில பயணம் செய்த கடவுளுக்கு, கப்பல் கண்டுபிடிக்க தெரியல?

என்ன கொண்டு வந்தாய், கொண்டுச் செல்வதற்கு என்று கிருஷ்ணன் கூறுகிறானாம். இதை சொல்வதற்கு ஒரு கடவுளா? கடமையை செய்; பலனை எதிர்பார்க்காதே, என்றால் வேலை செய்துவிட்டு கூலி வாங்காமல் சென்று விட வேண்டுமா? என்னடா தத்துவம் இது. எந்த ஒன்றை இந்தக் கடவுள் படைத்தது சொல்லுங்கள்? ஒரு ரப்பரை, ஒரு பென்சிலைக் கூட படைக்காத இந்தக் கடவுள் உன்னையும், என்னையும் படைத்தது என்று எப்படி நீங்கள் நம்புகிறீர்கள்? அதுதான் என் கேள்வி. தண்ணீர் வரவில்லையா? மீனவர் சுட்டுக் கொலையா? பெட்ரோல் விலை ஏறிவிட்டதா? பள்ளிக்கூட கட்டணம் கூடி விட்டதா? மின்சாரம் ரத்தா? போராட்டம் என்று எதையொன்றையும் இந்த மன்றத்தில் போராடித் தான் பெற வேண்டும் என்ற நிர்ப்பந்தம், சூழ்நிலை இருக்கும்போது, என் அன்புச் சொந்தங்களே, இத்தனைக் கோடி கடவுள்களும், கோயில்களும், புனஸ்காரங்களும் எதற்காக? விலைவாசி ஏறிவிட்டது என்று கோயில்களில் போய் பூசை செய்து விலையை குறை என்று கடவுளிடம் கேட்பீர்களா? அரசாங்கத்திற்கு எதிராகத் தானே போராட்டம் நடத்துகிறீர்கள். எல்லாத் தலை எழுத்து, விதி என நம்பிக் கிடக்கிறீர்கள். தலை எழுத்து என்றால் எந்த மொழியில் இருக்கின்றது. இன்னார் இன்னாரை கத்தி எடுத்துக் கொண்டு போய் கொலை செய்வான் என்று எழுதிவிட்டு, இன்னாரால் இன்னார் கொல்லப்படுவார் என இவன் தலையில் எழுதிவிட்டு, கொலை நடந்த பின்பு கொலை செய்த வனை ஏன் பிடிக்க வேண்டும்? தலையில் எழுதின வனை அல்லவா காவல்துறை கைது செய்ய வேண் டும். அவரவர் செய்த பாவ புண்ணியங்களுக்கேற்ப கடவுள் இறுதி நாளில் தண்டிப்பாராம். அவனவன் பாவ புண்ணிய காரியங்களுக்கேற்ப தண்டனை தருகின்றது என்று சொல்லுகிறாய், எல்லா மதமும் நம்புதில்லையா? அப்புறம் இடையில் தண்டிக்க நீங்கள் யார்? இந்த நம்பிக்கை இருக்கிற இந்த மத வாதிகள் எதற்காக நீங்கள் கோர்ட் கட்டியிருக் கிறீர்கள்? காவல் நிலையம் எதற்காக? சிறைச்சாலை எதற்காக? நான் பாவம் செய்தால் கடவுள் என்னை சொர்க்கத்திற்கோ, நரகத்திற்கோ அனுப்பட்டும். எதற்காக என்னை கைது செய், நடவடிக்கை எடு என்கிறாய். அப்படியானால் உனக்கு நம்பிக்கை இல்லை. கடவுள் என்னை தண்டிப்பார் என்று. அது தானே உண்மை.

காலங்காலமாக ஒரு சமுதாயத்தை அறிவார்ந்த சமுதாயமாக ஆகவிடாமல், அவர்களை அப்படியே மூளைச் சலவை செய்து, மூடநம்பிக்கைக்குள்ளேயே அவனை வைத்திருப்பது. மந்திரக் கல் என்றும், எண் ராசி என்றும், இன்னும் சொல்லப் போனால் யானையின் வாலிலுள்ள முடியை எடுத்து மோதிரம் செய்து போட்டு இருக்கிறான். இந்த மூட நம்பிக்கையில் இருந்து இந்த இனம் எழ வேண்டும். கழுதைப் படத்தை வைத்து என்னைப் பார் யோகம் வரும் என எழுதி வைத்திருக்கிறான். கழுதையைப் பார்த்தால் யோகம் வரும்னா தினம், தினம் கழுதையைப்

4 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# பெரியாரை வியாபாரமாக்குவது யார்?

உலக மயமாக்கல் கொள்கை வந்த பிறகு பன்னாட்டு பகாசுர நிறுவனங்கள் காப்புரிமை எனும் பெயரில் 'அறிவு சார் சொத்துரிமை' கோரி பல பொருள்களை தங்கள் வசமாக்கிக் கொள்கின்றன. தமிழ்நாட்டின் வேப்பிலையும், இந்தியாவின் பாசுமதி அரிசிக்கும் கூட இப்படி சில வெளி நாட்டு நிறுவனங்கள் அறிவுசார் சொத்துரிமை கோரின. பிறகு நீதி மன்றங்களின் வழியாக அந்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

பன்னாட்டு நிறுவனங்கள் அறிவு சார் சொத்துரிமை கோருவது, தங்களின் வர்த்தக நலனுக்காகத்தான். கி.வீரமணியும் பன்னாட்டு பகாசுர நிறுவனங்களைப்போல் பெரியார் சிந்தனைகளுக்கும், அறிவுசார் சொத் துரிமை கோருகிறார். பெரியார் சொத் துக்களுக்கு மட்டுமே உரிமை கோரிய கி.வீரமணி, இப்போது பெரியார் சிந்தனைகளுக்கும் தமக்கே உரிமை கோரும் நிலைக்கு வந்துவிட்டதைப் பார்த்து, நாடே கைகொட்டி சிரிக் கிறது.

பெரியார் பேசியதும், எழுதியதும் மக்களுக்குத்தான். ஆனால், கி.வீரமணியோ, பெரியார் பேச்சும்-எழுத்தும் மக்களுக்கு சொந்தமல்ல; எங்களுடைய நிறுவனத்துக்கே சொந்தம் என்கிறார்! என்ன வெட்கக் கேடு! மக்களுக்காகவே உழைத்து - மக்களிடமே பேசி - மக்களுக்காகவே போராடி, மக்களோடு வாழ்ந்த தலைவர் பெரியார்!

"நாதசுரக் குழாய் இருந்தால் ஊதியாக வேண்டும்; தவிலாயிருந்தால் அடிபட்டுத்தானாக வேண்டும் என்பதுபோல் எனக்கு தொண்டை, குரல் உள்ள வரையில் பேசியாக வேண்டும், பிரசங்கம் செய்தாக வேண்டும்" என்றார் பெரியார்.

பகுத்தறிவாளர்கள் - நாத்தி கர்களின் உழைப்பு எப்போதுமே மக்களுக்குத் தான். ஆத்திகர்கள் மக்களைப் பற்றிக் கவலைப்படாத சுயநல நோக்கம் கொண்டவர்கள், என்கிறார் பெரியார்.

பெரியார் மொழியில் கூறுவது என்றால் கி.வீரமணி 'ஆத்திகம்' பேசு வோர் மனநிலைக்கு வந்து விட்டார். மக்களிடம் கொண்டு போக வேண்டிய பெரியாரியலை நிறுவனத்துக்குள் முடக்கப் பார்க்கிறார்.

பெரியாரை உலகமயமாக்குகிறோம் என்று கி.வீரமணி பேசி வந்ததன் உண்மையான பொருள், இப்போது தான் நமக்கும் புரிகிறது. உலகமயத்தின் திணிப்புகளில் ஒன்றான காப்புரிமைக் குள் பெரியாரைக் கொண்டுபோவதைத் தான் அவர் இப்படிக் கூறி வந்திருக் கிறார் போலும்!

பெரியாரின் அறிவுச் சிந்தனைகள் - அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக் கும் உரிமைகளாக வேண்டுமே தவிர, ஆயுள் செயலாளர்களின் அதிகார நிறுவனத் துக்குள் முடக்கிவிடக் கூடாது. அடி மட்டத்து மனிதனின் உரிமைகளுக் காகப் பேசிய பெரியாரின் கருத்துகளை அறிவுசார் உடைமைகளாக்கி, மக்களிடமிருந்து அன்னியப்படுத்தும் மகத்தான பெரியாரியல் துரோகம் இது!

பொதுவுடைமைக்கே - பொது வுரிமையை முன் நிபந்தனையாக்கினார் பெரியார். பொதுவுடைமையையும் மறந்து, பொது உரிமையையும் கை விட்டு, தனியுடைமையிலேயே மூழ்கிப் போனவர்கள். பெரியாரையும், அந்த சிமிழுக்குள் அடைக்க முயற்சிக் கிறார்கள்.

- ***பெரியாரின் எழுத்தும் பேச்சும் எங்களின் மூச்சு; அதுவே எங்கள் உரிமை களுக்கான வீச்சு;***
- ***அறிவை உடைமையாக் கியது ஆரியம்! அந்த உடைமையைத் தகர்த்து மக்கள் உரிமைக்கு கொடி உயர்த்தியது பெரியாரியம்!***

***பெரியாரின் சிந்தனைகள் – நிறுவனத்தின் உடைமைகள் அல்ல; அல்லவே அல்ல.***

***அவை அடிமைப்பட்ட எமது இனத்துக்கான உரிமைகள்!***

**நன்கொடை**

கழகத் தோழர் சைதை ராசுஇல்ல மணவிழாவில் கழக ஏட்டுக்கு ரூ.500 நன்கொடை வழங்கப்பட்டது. நன்றி யுடன்பெற்றுக் கொண்டோம். (ஆர்)

முதல் பக்கத் தொடர்ச்சி

**ஒன்றை மட்டும் உறுதியாகக் கூறுகிறோம். எத்தனை தடைகள் அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் வந்தாலும், பெரியார் திராவிடர் கழகத்தின் இப் பெரும் பணியைத் தடுத்து நிறுத்த முடியாது; முடியவே முடியாது.**

**தடைகளைத் தகர்த்து, பெரியார் திராவிடர் கழகம் தடம் தோள் உயர்த்தும்; சட்டங்களின் பொந்துகளுக்குள் மறைந்து கொண்டு பெரியார் சிந்தனைகளை முடக்கத் துடிப்போரின் முகத்திரையை கிழித்துக் காட்டும்; அடக்கு முறைகள் எதுவரினும் அரிமா வாக எழுந்து நின்று, 'குடிஅரசு' தொகுதிகளை மக்கள் கரங்களில் கொண்டு போய் சேர்க்கும்!**

**திட்டமிட்டபடி செப்டம்பர் 17 இல் 'குடிஅரசு' தொகுதிகள் – தமிழின உணர்வாளர்களின் கரங்களில் போர் வாளாக மிளிரும்!**

*பார்ப்பன அதிகாரக் கட்டுகளை தகர்க்தெறிந்த 'ரிவோல்ட்', 'குடிஅரசு' மக்களிடம் வந்ததுபோல், மீண்டும் 80 ஆண்டுகளுக்குப் பிறகும் அதே தடைகளை சந்தித்து - மிரட்டல்களைத் தகர்த்து வெளிவரப் போகிறது. இதுவும்கூட ஒரு பெருமை தான்.*

*அன்று 'ரிவோல்ட்' எழுதிய வரி களையே பதிலாக முன்வைக்கிறோம்.*

"The inner voice points to our duty. We dare not hesitate any longer. We unfurl the flog and we will not lower it until our hands are smitten into the dust. We will not compromise. We will be heard."

**"எங்களது இதயம் எங்கள் கடமையைச் சுட்டிக்காட்டுகிறது. இனியும் நாங்கள் தயங்கி நிற்க துணிய மாட்டோம். நாங்கள் எங்கள் கொடியை உயர்த்திவிட்டோம். அந்தக் கரங்களை கீழே இறக்க மாட்டோம். எங்கள் கரங்கள் முறியடிக்கப்பட்டு, புழுதிக்குள் புதையுண்டாலொழிய எங்கள் கரங்கள் உயர்ந்தே நிற்கும். இனி சமரசம் என்ற பேச்சே இல்லை. எங்களின் நியாயங்களுக்கு செவிகள் காது கொடுத்தே தீரும்."**

**– 'ரிவோல்ட்' (3.11.1929)**

## சட்டப்பூர்வ நடவடிக்கை எடுப்பாராம், கி. வீரமணி

*"பெரியார் ஏடுகளில் எழுதிய எழுத்துகள், பேச்சுகள், பேட்டிகள், வெளியீடுகள் அத்தனையும், பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்துக்கு மட்டுமே சொந்தமான அறிவுசார் உடைமைகளும் - சொத்துகளாகும்" என்று குறிப்பிட்டுள்ளார். பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தின் ஆயுள் செயலாளரான கி.வீரமணி, "இவைகளை அச்சில் வெளியிட்டு விளம்பரமும், வருவாயும் தேட தனிப்பட்ட சிலரும், சில இயக்கங்களும், பதிப்பகங்களும் முயலுவதாகத் தெரிய வருகிறது. அப்படிச் செய்வது சட்டவிரோதம்" என்று கூறியுள்ள கி.வீரமணி, "மீறி அச்சிட்டு நூலாகவோ, மற்ற ஒலி நாடாகவோ, குறுந்தகடுகளாகவோ வெளிவந்தால் அவர்கள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும்" என்று மிரட்டியிருக்கிறார்.*

*பெரியார் கருத்துகளைப் பரப்ப தடை போடும் கி.வீரமணியின் அறிக்கை, பெரியார் தொடங்கிய 'விடுதலை' நாளேட்டிலேயே 2008 ஆகஸ்டு 10 ஆம் தேதி முதல் பக்கத்தில் வெளி வந்திருக்கிறது. சட்டப்படி தவறா சரியா என்பதுகூட, ஒருபுறம் இருக்கட்டும், நியாயப்படி, நாம் செய்வது சரிதான் என்பதில், பெரியார் திராவிடர் கழகம் உறுதியாக நிற்கிறது.*

*பெரியாரின் புரட்சிகர 'குடிஅரசை' மக்களிடம் கொண்டு சேர்ப்பது - சட்டப்படி குற்றம் என்றால், அந்தக் குற்றத்தை மீண்டும் மீண்டும் இழைக்க - பெரியார் திராவிடர் கழகம் தயார்! தயார்!!*

*கொள்கை துரோகம் - என்ற குற்றக் கூண்டில் நிற்கப் போவது யார் என்பதை காலம் தீர்ப்பளிக்கும்!*

## என் வாரிசு யார்?

*கேள்வி* : *உங்களுடைய அரசியல் வாரிசு யார்?*

*பதில்* : *எனக்கு அரசியல் வாரிசு என்று யாரும் கிடையாது; என்னுடைய கொள்கைகளும், கருத்துகளும் தான் வாரிசு; வாரிசு என்பது தானாகவே ஏற்படவேண்டும்.*

**– பெரியார், 'மாலைமுரசு' 16.9.1973**

## இது பிரச்சார இயக்கம்

*எங்களுக்குக் கட்சி கிடையாது; நாங்கள் எந்தக் கட்சியையும் சார்ந்தவர்கள் அல்ல. எங்கள் இயக்கம் பிரச்சார இயக்கம். மக்களுக்கு பகுத்தறிவு ஊட்ட வேண்டும். மக்களிடம் இருக்கும் முட்டாள்தனம், மூட நம்பிக்கையான கருத்துகளை மாற்ற வேண்டும் என்று பிரச்சாரம் செய்து வருபவர்களேயாவோம்.*

**– பெரியார் 'விடுதலை' 11.1.1968**

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

பார்க்கிற சலவைத் தொழிலாளி, ஏன்டா எங்கள் அழுக்கை வெளுத்து கஞ்சி குடிக்கனும். அவன் கோட்டீஸ்வரனாக வேண்டியது தானே. இந்தக் கேள்வி எழவில்லை, இது குறித்து சிந்திக்க வில்லை. பகுத்தறிவு என்பது சிந்திக்க வேண்டும் என்பதுதான். சிந்தித்தால், எதற்கு? ஏன்? எப்படி? என்ற கேள்விகள் வரும் அந்த கேள்விகள் தான் பகுத்தறிவு. இதை எம் மக்களுக்கு நாங்கள் சொல்லித்தராமல் யார் சொல்லித் தருவது? ஏன் சுனாமி வந்ததே அதில் ராமனே, அல்லாவே, ஏசுவே என்று எவனும் கத்தாமலா இருந்தான். கோயிலும் தானே சேர்ந்து போனது.

இந்த மடமைகளைக் கடந்து வாருங் கள். சாதி, மதம், மூடநம்பிக்கைகளை தகர்த்தெறியுங்கள். எங்களுக்கு என்ன இராமனை அல்லது இந்துமதத்தை வையனும். இந்த மதம் தான் என்னை தாழ்ந்த சாதி மகன், இழி மகன், வேசி மகன் என்று சொல்லியது. அதனால் தான் இந்த மத்தை கண்டிக்கிறோம். தந்தை பெரியார் அவர்கள் பெருத்த வேதனையோடு சொன்னது என்றைக்கு தமிழன் இந்திய தேசியம் பேசினானோ அன்றைக்கு போனதடா அவன் இன மானமும், தன்மானமும் என்று சொன்னார்.


பெரியார் தள்ளாத வயதில்கூட அவர் முதுகு குனிந்தபோதுகூட எங்களையெல் லாம் நிமிர வைத்த தலைவருடா, மண்ணுக்குள் விழ வேண்டிய வயதில்கூட இந்த மண்ணுக்காக விழுந்தவர் தான் எங்கள் அய்யா. மூத்திச் சட்டியை சுமந்து தெருத்தெருவாகப் போய் எங்கள் மீது உள்ள சூத்திரப் பட்டத்தை துடைக்கப் போராடிய மாபெரும் தலைவர்தான்டா எங்கள் பெரியார். கண்ணாடிக்கு மேலே ஒரு பெரிய கண்ணாடியை வைத்த குனிந்து குனிந்து எங்கள் பிள்ளைகளின் எதிர் காலத்தைத் தேடிய ஒப்பற்ற தலைவர் தான்டா எங்கள் பெரியார். ராசாவே பெரியாரைப் பற்றி பேச, உனக்கு என்ன யோக்கியதை இருக்கு. எங்கள் கேள்வி களுக்கு சனநாயக முறைப்படி பதில் சொல்.

**தொகுப்பு : சொ. அன்பு**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 16th August 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 ஆகஸ்டு 21, 2008 புரட்சி 7 முழக்கம் 34 விலை : ரூ.2.50


## பெரியார் சிந்தனைகள் – அறிவுசார் சொத்துடைமையா?

## தோழர்கள் நல்லக்கண்ணு – தொல். திருமாவளவன் எதிர்ப்பு

# பெரியார் நூல்களை நாட்டுடைமையாக்குக!




'கடவுள்' திரைப்பட இயக்குனரும், பெரியார் கொள்கையாளருமான இயக்குர் வேலு. பிரபாகரன், இயக்கி, தயாரித்த பெரியார் இறுதிப் போர் முழக்கம் - ஒலி, ஒளி குறுந்தகடு வெளியீட்டு விழா, ஆகஸ்டு 14 ஆம் தேதி மாலை சென்னை சர்.பிட்டி தியாகராயர் அரங்கில் எழுச்சியுடன் நடந்தது. நிகழ்ச்சிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லக்கண்ணு தலைமை தாங்கி, ஒலி-ஒளி நாடாவை வெளியிட, கழகத் தலைவர் கொளத்தூர் மணி பெற்றுக் கொண்டார். திராவிட இயக்கத் தமிழர் பேரவையை பொறுப்பாளர் அன்பு. தென்னரசு, இயக்குனர் பிரபாகரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில துணை பொதுச் செயலாளர் கி.மகேந்திரன், 'தமிழ் முழக்கம்' சாகுல் அமீது, கவிஞர் சினேகன், தொல். திருமாவளவன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். முன்னதாக ஒலி-ஒளி நாடா, கூட்டத்தினருக்கு திரையிடப்பட்டது. இயக்குனர் வேலு. பிரபாகரன், பெரியாரைப் போல் வேடமணிந்து, பெரியார் குரலில், பெரியார் உரை நிகழ்த்துவது போல், பெரியாரின் உரையை வார்த்தைகள் மாறாமல் அப்படியே பேசினார். பெரியார் பேசிய இறுதிக் கூட்டமான தியாகராயர் நகர் கூட்டத்துக்கு, முன், குடந்தை நகரிலே ஆற்றிய உரை அது. சூத்திர இழிவு ஒழிப்புப் போருக்கு தள்ளாத வயதிலும் அறைகூவல் விடுக்கும் அந்த போர் முரசு உரை - பார்வையாளர்களை உணர்ச்சி மய மாக்கியது. இயக்குனர் பிரபாகரனின் இந்த புதிய கலை வடிவ கொள்கை பரப்பும் முறையை பலரும் பாராட்டிப் பேசினார்.

நிகழ்ச்சியில், சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் ஆயுள் செயலாளர் என்ற முறையில் கி.வீரமணி, பெரியாரின் 'குடிஅரசு' பத்திரிகை கட்டுரைகளை, சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் தவிர, வேறு யார் வெளியிட்டாலும், சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளியிட்ட அறிவிப்பை, நிகழ்ச்சியில் பேசிய பலரும் கண்டித்தனர். மக்கள் தலைவராக திகழ்ந்த பெரியாரை, அறிவுசார் சொத்துடைமைக்குள் முடக்கி, பெரியார் நூல்களைப் பரப்புவதையே தடை செய்ய முயலும் கி.வீரமணியின் அறிவிப்பு - பெரியாரியல்வாதிகளிடமும், இனஉணர்வுத் தமிழர்களிடமும் கடும் கொதிப்பை உருவாக்கியிருப்பதை நிகழ்ச்சியில் உணர முடிந்தது.

'விடுதலை'யில் வீரமணி வெளியிட்ட அறிக்கையை அவர் பெயர் குறிப்பிடாமல், படித்துக் காட்டிய இயக்குனர் வேலு பிரபாகரன், இது தொடர்பாக இரண்டு கருத்துகளை முன் வைத்தார். இந்த அறிவிப்பில், ஒலி நாடா, நூல்களுக்குத்தான் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை, எனது வெளியீட்டுக்குப் பொருந்தாது. காரணம் இது ஒலி-ஒளி குறுந்தகடு என்று பலத்த சிரிப்பு கரவொலிக்கிடையே தெரிவித்தார். பெரியார் கருத்துகளுக்கு அறிவுசார் சொத்துடைமை கோருவதுபோல் ஆத்திகர்கள் எவரும் கடவுள்களுக்கோ, பக்திப் பிரச்சாரத்துக்கோ அறிவுசார் சொத்துரிமை கோருவது இல்லை. அப்படி கோரியிருந்தால், பக்தி பிரச்சாரமே, மக்களை சென்று அடைந்திருக்காது. எனவேதான் ஆத்திகர்கள் தங்கள் பிரச்சாரத்தில் மிகவும் கவலையுடன் இருப்பதால், கடவுள்களையோ, மதப் பிரச்சாரத்தையோ, அறிவுசார் சொத்துடைமைக்குள் கொண்டு போவதில்லை" என்றார்.

தமிழ் முழக்கம் வெளியிட்டாளர் சாகுல் அமீது பேசுகையில், பெரியாரின் நூல்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று பலத்த கரவொலிக்கிடையே வலியுறுத்தினார்.

தலைமையுரையாற்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஆர். நல்லக்கண்ணு பேசுகையில், "பெரியார் கருத்துக்கள் எல்லோருக்கும் போய் சேர வேண்டும்; பெரியார் கருத்துகளைப் பரப்புவதில் அறிவுசார் சொத்துடைமைகளைக் கூறி, தடுக்கக் கூடாது;

4 ஆம் பக்கம்

### கழகத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் தோழர்களே, தயாராவீர்!

*பெரியார் சிந்தனை நிறுவனங்களின் உடைமை அல்ல;*
*அடக்கப்பட்ட எமது இனத்துக்கான உரிமை!*

## பெரியாரின் நூல்களை நாட்டுடமையாக்கக் கோரி ஆர்ப்பாட்டம்!

பெரியார் சிந்தனைகள் - சுயமரியாதை பிரச்சார நிறுவனத்துக்கு மட்டுமே உரியது என்றும் -

அதை நூலாகவோ, ஒலி நாடாவாகவோ பரப்பினால், சட்டப்படி குற்றம் என்றும் அறிவித்து -

பெரியார் கொள்கையை முடக்கும் கி.வீரமணியைக் கண்டித்தும் -

பெரியார் நூல்களை நாட்டுடைமையாக்கிட தமிழக அரசை வலியுறுத்தியும் -

**25.8.2008 அன்று மாவட்ட தலைநகர்களிலும், வாய்ப்புள்ள பகுதிகளிலும் கழகத் தோழர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

பெரியார் திராவிடர் கழகத்தின் பெரியாரியலைப் பரப்பும் முயற்சிகளை முடக்க நினைக்கும் சதியை முறியடித்து–

பெரியாரியலை மக்களிடம் கொண்டு போகும் போராட்டத்தை முன்னெடுப்போம்!

**கழகத் தோழர்களே! ஆர்ப்பாட்டப் பணிகளை விரைந்து தொடங்குவீர்!**

**– தலைமை நிலையம், பெரியார் திராவிடர் கழகம்.**

# பெரியார் திடலுக்குள் – பெரியாரை முடக்கும் சதியை முறியடிப்போம்!

# பெரியார் நூல்களை – தமிழக அரசே – அரசுடைமையாக்கு!

## பெரியார் திராவிடர் கழகம் ஆர்ப்பாட்டம்

தமிழக வரலாற்றில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய பெரியார் நடத்திய 'குடி அரசு' வார ஏட்டில் 1925 முதல் 1938 வரை பெரியாரின் பேச்சு - எழுத்துகளைத் தொகுத்து, 27 தொகுதிகளாக பெரியார் பிறந்த நாளான செப்.17 இல் வெளியிட திட்டமிட்டுள்ளது பெரியார் திராவிடர் கழகம்.

இது சட்ட விரோதம்; நடவடிக்கை எடுப்போம் என்கிறார், தி.க. தலைவர் கி.வீரமணி.

- 1983 ஆம் ஆண்டிலேயே 50-க்கும் மேற்பட்ட பெரியாரில்வாதிகள் கடுமையாக உழைத்து, 'குடிஅரசு' ஏட்டில் பெரியார் எழுதியவற்றை கைப்பட எழுதி தொகுத்து, பல்லாயிரம் பக்கங்களை கி.வீரமணி யிடம் நேரில் கொடுத்த பிறகும் 25 ஆண்டுகளாக வெளியிடாமல் முடக்கியது ஏன்?
- இவ்வளவு காலம் கழித்து, பெரியார் திராவிடர் கழகம் பெருமுயற்சி எடுத்து அதை வெளியிடும்போது முடக்கத் துடிப்பது தான் பெரியார் காட்டிய வழியா?
- தனது சொந்த சொத்துக்களைக்கூட மக்களுக்கு உரிமையாக்கி, அறக்கட்டளை நிறுவிய தலைவர் பெரியார். அவரது சிந்தனைகளை மக்களிடம் செல்ல விடாமல் அவரது அறக்கட்டளை பெயராலே தடுப்பது பெரியாருக்கு செய்யும் துரோகம் அல்லவா? பெரியார் காலத்திலேயே தன்னுடைய நூல்களை எல்லோரும் அச்சிட்டுப் பரப்பிட பெரியார் அனுமதி வழங்கிய வரலாறுகளை மறுக்க முடியுமா? பெரியாரிய நூல்களும், பேச்சுகளும், அறிவுசார் சொத்துடைமை என்று உரிமை கோருவது பெரியாரை வர்த்தகப் பொருள் ஆக்குவது அல்லவா? பன்னாட்டு நிறுவனங்கள் - வர்த்தகக் கொள்ளைக்கு வேப்பிலைக்கும், பாசுமதி அரிசிக்கும் அறிவுசார் சொத்துரிமை கோரியதுபோல், ஆயுள் செயலாளர் கி.வீரமணியும் கோருவது பெரியாருக்கு அவமானமல்லவா? பெரியார் என்ற புரட்சிக்காரரைப் பன்னாட்டு சந்தையின் விற்பனைப் பொருளாக மாற்றலாமா?
- தனது பெயரில் வாழ்வியல் சிந்தனைகளை எழுதி, பல்லாயிரக்கணக்கில் அச்சிட்டுப் பரப்பும் கி.வீரமணி, பெரியார் 'குடிஅரசு' எழுத்துகளை வெளியிடாமல் முடக்கியது நியாயம் தானா?

பெரியார் சிந்தனைகள் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்கு உயிரூட்டிய உரிமைகள்; அடித்தள மக்களுக்கு அடையாளம் தந்த அற்புத சிந்தனைகள்!

ஒவ்வொரு நாளும் மக்களை சந்தித்து, மக்கள் மொழியில் பேசி, மக்களுக்காக சாகும் வரை போராடிய தலைவரை - மக்கள் மன்றத்திலிருந்து பிரித்து அறக்கட்டளைக்குள் முடக்கலாமா?

தமிழ்நாட்டின் மூத்த தலைவர்களின் நூல்கள் எல்லாம் அரசுடைமை யாக்கப்பட்டாலும், பெரியார் நூல்கள் அரசுடைமை ஆகாதது ஏன்?

பெரியார் கொள்கைகளை முடக்கும்
சதியை முறியடிப் போம்!
பெரியார் நூல்களை அரசுடைமையாக்க
குரல் கொடுப் போம்!
பெரியாரியலை மக்களிடம் சேர்க்க
இணைந்து நிற்போம்!
தமிழர்களே ஆதரவு தாரீர்!

> தமிழ் மக்களுக்குத் தேவையான சில கருத்துகளைச் சொல்லிப் பதிந்தாக வேண்டும். இன்று ஏற்றுக் கொள்ளா விட்டாலும் நாளை ஒரு நாள் ஏற்றுக் கொள்ளும் நிலை வரும். இக் கருத்துகளை சொல்லும் நிலையில் நான் தான் இருக்கிறேன். சொல்ல வேண்டிய கருத்துகளை நானே எழுதி, நானே அச்சுக்கோத்து, நானே அச்சிட்டு, நானே படித்துக் கொள்ளும் நிலைக்குப் போனாலும் குடிஅரசை வெளியிட்டு, என் கருத்துக்களை வரும் தலைமுறைக்கு விட்டுச் செல்ல வேண்டியது எனது கடமை (குடிஅரசு 10.06.1929) – தந்தை பெரியார்

**குறிப்பு: ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் இதை துண்டறிக்கையாக அச்சிட்டு வழங்கலாம்**

### குடிஅரசு பெரியாரின் எழுத்தும் – பேச்சும் 1925 – 1938

### முன் வெளியீட்டுத் திட்டம்

தமிழர்களின் நீண்டகால விருப்பம் இப்போது செயல் வடிவத்தில்

வரலாறு படைத்திட்ட – தமிழர் வரலாற்றில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்திய புரட்சிகர பச்சை அட்டை 'குடிஅரசு' ஏட்டில் பெரியார் எழுதிய கட்டுரைகள் - தலையங்கங்கள் - அறிக்கைகள் - பேச்சுக்களை முழுமையாகத் திரட்டி, கால வரிசைப்படி தொகுத்து தமிழ் கூறும் நல்லுலகத்தின் முன் பெரியார் திராவிடர் கழகம் பெருமையுடன் ஒப்படைக்கிறது!

1925 முதல் 1938 முடிய சுயமரியாதை இயக்கக் காலம் முழுவதும் தொகுக்கப்பட்டு வெளியிடப் படுகிறது.

ஏற்கனவே கழகத்தால் வெளியிடப்பட்ட மூன்று தொகுதிகளும், பல புதிய சேர்க்கை களோடு, இத் தொகுதிகளோடு இணைத்து பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 ஆம் தேதி வெளியிடப் படுகிறது.

- மொத்தம் 27 தொகுதிகள்!
- ஒவ்வொரு தொகுதியும் சுமார் 400 பக்கங்கள்!
- உயர்தர நேச்சுரல் ஷேட் புக் பிரிண்ட் தான்!
- நூலின் அடக்கவிலைக்கே பெற்றிட அரிய வாய்ப்பு!
- ரூ.5400 விலையுள்ள இத்தொகுதிகள் முன் பதிவுத் திட்டத்தின் கீழ்
- ரூ.3500-க்கே உங்களுக்குக் கிடைக்கும்.
- ரூ.3500 முன் பதிவு செய்து கொள்ள வேண்டிய கடைசி நாள் ஆகஸ்ட் 31 (31.08.2008)

**மற்றொரு மகிழ்ச்சியான அறிவிப்பு!**

1928 முதல் 1930 வரை பெரியார் நடத்திய 'ரிவோல்ட்' ஆங்கில வார ஏட்டின் முக்கிய கட்டுரைத் தொகுப்பு நூலும் (சுமார் 800 பக்கங்கள் - தோழர்கள் எஸ்.வி. இராஜதுரை - வ.கீதா தொகுத்தது), செப்.17 இல் வெளி வருகிறது. ரூ.400 விலையுள்ள இந்த நூலுக்கு முன் பதிவுக் கட்டணம் ரூ.250 மட்டுமே.

**குடிஅரசு முன் பதிவு செய்வோருக்கு கட்டணமின்றி 'ரிவோல்ட்' ஆங்கில கட்டுரைத் தொகுப்பு இலவச பரிசாக வழங்கப்படும்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**தா.செ.மணி**, பெரியார் படிப்பகம், மேட்டூர் அணை-1, சேலம் மாவட்டம்-636 401.
வரைவோலையாகவோ (D.D.), பணவிடையாகவோ (எம்.ஓ.) அனுப்பலாம்.
**'T.S. MANI'** என்ற பெயரில் வரைவோலை எடுக்க வேண்டும்.
மேட்டூர் அணையில் மாற்றத்தக்க வங்கி வரைவோலைகளாக இருத்தல் வேண்டும்.
காசோலை (Cheque) ஏற்க இயலாது.

**– பெரியார் திராவிடர் கழகம்**

**பெரியாரின் எழுத்தும் பேச்சும் எங்களின் மூச்சு; அதுவே எங்கள் உரிமைகளுக்கான வீச்சு!**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 2451 2857

**விடுதலை இராசேந்திரன் இணையதள முகவரி**
**viduthalaikr@gmail.com**

# மூடநம்பிக்கை தூள்தூளானது அந்தியூரில் – நாத்திகர் பேரணி





20..7.2008 ஞாயிறு மாலை 4 மணியளவில் அந்தியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நாத்திகர் விழா ஊர்வலம், பெரியார் திராவிடர் கழக ஆட்சிக்குழு உறுப்பினர் வெ.ஆறுச்சாமி தலைமையில், வழக்கறிஞர் பன்னீர் செல்வம், சேலம் மாவட்டத் தலைவர் மார்ட்டின், கோவை மாநகரச் செய லாளர் கோபால், பெரியார் ப.க. செய லாளர் க.த. மதியழகன் ஆகியோர் முன்னிலையில் துவங்கியது. மேளதாள முழக்கத்துடன் துவங்கிய ஊர்வலத்தில் தோழர்கள் காசிபாளையம் பாலு, செயக்குமார் ஆகியோர் ஒரு காரினை அலகு குத்தியும், கூதாம்பி அர்ச்சுனன், பல்லடம் ஆறுமுகம் ஆகியோர் இன்னொரு காரையும் அலகு குத்தி இழுத்து வந்தனர். இராசமாணிக்கம் அலகு குத்தி அந்தரத்தில் பறவைக் காவடி போல தொங்கிய நிலையில் வந்தார். திருப்பூர் கார்த்தி ஆணிப் படுக்கையின் மீது படுத்து வந்தார். ஏராளமான பொது மக்கள் சாலையின் இரு புறமும் கூட்டம் கூட்டமாக நின்று வேடிக்கை பார்த்தனர். அத்துடன் ஏராளமனா பெண்கள், குழந்தைகள், தோழர்கள் ச்சட்டி எடுத்து வந்தனர். தீச்சட்டியை ஒரு கையில் வைத்துக் கொண்டு இன்னொரு கையில் மீன் மற்றும் கோழிக்கறியை சாப்பிட்டுக் கொண்டும், சிகரெட் பிடித்துக் கொண்டும் வந்தனர். கடவுள் சக்தி என்று எதுவும் கிடையாது. அனைத்துமே மனித சக்தியால் முடியும் என்பதை நிரூபிக்கும் வண்ணமாக வந்தனர். தோழர்கள் புதுரோடு முருகன், கிளாகுளம் செல்வம், அந்தியூர் அன்புராசு ஆகியோர் வாயில் வேல் அலகு குத்தி வந்தனர். ஊர்வலம் அந்தியூர் தவிட்டுப்பாளையம் பகுதியை வந்தடைந்தபோது அங்கு புதிதாக அமைக்கப்பட்டிருந்த கழகக் கொடிக் கம்பத்தில் கழகப் பொதுச்செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் பலத்த முழக்கங்களுக்கிடையே கொடியை ஏற்ற வைத்தார்.



ஊர்வலம் பேருந்து நிலையம் அருகே வந்தபோது அங்கு அமைக்கப்பட்டிருந்த கழகக் கொடிக் கம்பத்தில் கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் வெ.ஆறுச்சாமி கழகக் கொடியினை ஏற்றி வைத்தார். ஊர்வலம் பர்கூர் சாலை வழியாகச் சென்று கூட்டம் நடைபெறும் தேரடித் திடலை அடைந்தது. மேடையின் முன்பு அமைக்கப்பட்டிருந்த ராட்டன் தூரியில் இராசமாணிக்கம், செயக்குமார் ஆகியோர் அந்தரத்தில் அலகு குத்தி தொங்கிய நிலையில் சுற்றினர். அந்தியூர் மக்கள் அனைவரும் திரண்டு நின்று அதனை வேடிக்கைப் பார்த்தனர்.

பின்னர், பொதுக்கூட்டம் துவங்கியது. முன்னதாக சமர்ப்பாக்குமரன், கோவிந்தராசு ஆகியோர் கழகப் பாடல் களை பாடினர். பொதுக் கூட்டத்திற்கு அந்தியூர் நகர அமைப்பாளர் மு.வெங்கடேசு தலைமை வகித்தார். ம.தி.மு.க. நகரச் செயலாளர் கொ. இராமன், பெரியார் ப.க. தலைவர் இரா. கிருட்டிணமூர்த்தி, பெரியார் திராவிடர் கழக தலைவர் வெங்கடாசலம், நகரச் செயலாளர் அன்புராசு, பெரியார் ப.க. வழக்கறிஞர் செ.கிருட்டிணகுமார் ஆகி யோர் முன்னிலை வகித்தனர். அந்தியூர் பெரியார் ப.க. செயலாளர் கிருட்டிண மூர்த்தி, வழக்கறிஞர் கிருட்டிணகுமார், கா.சு.வேலுச்சாமி, மாவட்ட தலைவர் நாத்திகசோதி, மாவட்ட செயலாளர் இராம.இளங்கோவன் ஆகியோர் உரை யாற்றினர். கழகப் பொதுச்செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் உரை யாற்றியதைத் தொடர்ந்து, கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். அருகலுள்ள ஓரிச்சேரிப் பகுதியைச் சார்ந்த தோழர்கள் 15 பேர் புதிதாக கழகத்தலைவர், கழகப் பொதுச்செயலாளர் ஆகியோர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இந்நிகழ்ச்சியில் கழகத் தோழர்கள் அந்தியூர் அன்புராசு, சந்திரன், முனியப்பன், ஆனந்த், ஈரோடு குமரகுருபரன், லெமூரியன், முருகானந்தம், சுப்ரமணியன், சிவா, முருகேசன், கோபித்தோழர்கள் செயராமன், இரகுநாதன், குணசேகரன், நாகப்பன், நாகப்பன் துணைவியார், செயராமன், செயராமன் துணைவியார், தமிழ்ச்செல்வன், கொளப்பலூர் சுப்ரமணியன், முருகன் (எ) பிரபாகரன், பழனிச்சாமி, காமராசன், செல்வராசு, சின்னப்பன், கவுந்தபாடி மதியழகன், மேவாணித்தோழர்கள் சுந்தரம், வீரக்குமார், குமாரப்பாளையம் தோழர்கள், பவானி ஈசுவரமூர்த்தி, பழனிச்சாமி, விசயமங்கலம் - விசு, குருவரெட்டியூர் விசயன், திலீபன், வேல்முருகன், இராமன், கைலாசம், மாதராச, சுவாமிநான். கூடக்கரை அருளானந்தம், சிவராஜ், கிளாகுளம் செந்தில்குமார், செல்வன், கோபால், சின்ராசு, புதுரோடு இராசேந்திரன், சிதம்பரம், ஈசுவரன், மேட்டூர் தோழர்கள், கொளத்தூர் இளஞ்செழியன் மற்றும் திருப்பூர் மாவட்ட தலைவர் துரைசாமி, முகில்ராசு, அகிலன், கெம்பநாயக்கன்பாளையம் மூர்த்தி மற்றும் ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


குறிப்பாக இந்த நிகழ்ச்சிக்கு அந்தியூர் ம.தி.மு.க. நகர செயலாளர் இராமு, இரா.கிருட்டிணமூர்த்தி, கோவிந்தராசு, தங்கதுரை, பெருமாள், மாரிமுத்து, மாதேஸ் ஆகியோர் கடுமையாக உழைத்தனர். இவர்களின் மகத்தான ஆதரவுதான் இந்நிகழ்ச்சிக்கு பெரிதும் உதவியாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**செய்தி: இராம. இளங்கோவன்**

# கேரளாவிற்கு மணல் கடத்தலைக் கண்டித்து பொள்ளாச்சியில் கழகம் ஆர்ப்பாட்டம் : தோழர்கள் கைது

தமிழ்நாட்டு ஆறுகளிலிருந்து நாள்தோறும் லட்சக் கணக்கான டன் மணல் அள்ளப்பட்டு, சட்டத்திற்குப் புறம்பாகவும், விதிமுறைகளுக்கு எதிராகவும் அண்டை மாநிலமான கேரளாவிற்கு கடத்தப்பட்டு வருகிறது. எல்லைப் பகுதி சோதனைச் சாவடிகள் வழியாகவே அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகளின் துணையோடு இந்த மணல் கடத்தல் தொடர்கிறது. தொடரும் இந்த மணல் கொள்ளை மற்றும் கடத்தலை தடுத்து நிறுத்தக் கோரி ஆனைமலை ஒன்றிய பெரியார் திராவிடர் கழகம் சார்பில் எல்லைப் பகுதியான வளந்தாயமரத்தில் ஆக. 6 ஆம் தேதி காலை 10 மணியளவில் கண்டன ஆர்ப்பாட் டம் அறிவிக்கப்பட்டது.

கனிம வளங்களை கொள்ளையடிப்போர் மீதும், கடத்துவோர் மீதும் குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. ஆனால் மணல் கடத்தலை தடுக்கக் கோரிய கழகத்தின் கோரிக்கைக்கு எதிராக 1861 ஆம் ஆண்டு இந்திய காவல் சட்டப் பிரிவு 30(2)-ன் கீழ் ஆர்ப்பாட்டம் நடத்த காவல் துறை தடைவிதித்தது. ஆனால் திட்ட மிட்டபடி கடந்த 6.8.2008 அன்று காலை 11 மணிக்கு வளந்தாயமரம் சோதனைச் சாவடி அருகே தடையை மீறி கழகத் தோழர் கள் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப் பாட்டத்திற்கு தலைமையேற்ற கழக ஒன்றியத் தலைவர் பழ. ஆதி, வட்டசெயலாளர் காசு. நாகராசன், ஒன்றிய துணைச் செயலாளர் சம்பத், கா.க.புதூர் கிளை செயலாளர் சின்னு மற்றும் தோழர்கள் உதயகிரி, மு. மணி, த.மணி, சுரேசு, ஆனைமலை கதிர் ஆகிய ஒன்பது தோழர்கள் கைது செய்யப்பட்டனர். நூற்றுக் கணக்கான லாரிகளில் நாள் தோறும் நடை பெறும் மணல் கடத்தலால் போக்குவரத்து இடையூறு, சாலை விபத்துகள், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு என நாள்தோறும் அல்லல்படும் எல்லைப்பகுதி மக்கள் கழகம் நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, காவல் துறையின் கெடுபிடிகளை கடந்து வந்து



ஆதரவு கொடுத்தனர். மேலும் அடுத்தடுத்து கழகம் நடத்துகிற போராட்டங்களில் பங்கேற்கவும் தயாராக இருப்பதாக இப்பகுதி விவசாயிகளும், பொதுமக்களும், கட்டுமானத் துறை சார்ந்த தொழிலாளர்களும் அறிவித்துள்ளனர். மணல் கடத்தலுக்கு எதிராக தொடர் போராட்டங்களை முன்னெடுப்பதென பொள்ளாச்சி நகர ஒன்றிய கழகத் தோழர்கள் தீர்மானம் செய்துள்ளனர்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# நாட்டுடைமையானால் மிரட்டல்கள் வராது!

முதல் பக்கத் தொடர்ச்சி

அறிவுச் சொத்துரிமை என்ற கருத்து தனியாருக்குத் தான் பயன்படுமே தவிர, மக்களுக்கு பயன்படாது. மதம், நம்பிக்கையைச் சார்ந்தே நிற்கிறது. மதத்தை மறுப்பவர்கள், அறிவைச் சார்ந்து நிற்கிறார்கள். தமிழ்நாட்டில் பெரியார் அறிவுப் பிரச்சாரத்தை நடத்தினார். அந்தப் பிரச்சாரம் இப்போது அதிகமாகத் தேவைப்படுகிறது. மதவாத சக்திகள் இப்போது வெளிப்படையாக வெளியே வருகின்றன. ராமன் பெயரைக் கூறி சேது சமுத்திரத் திட்டத்தை எதிர்க்கிறார்கள். இதை எல்லாம் முறியடித்து, மக்களிடம் விழிப்புணர்வு பிரச்சாரத்தை செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

தோழர் மகேந்திரன், பிரபாகரன் தயாரித்த குறும்படத்தைப் பாராட்டிப் பேசினார். இப்படத்தைப் பார்த்த போது, பெரியாரே நேரில் வந்து பேசியது போன்ற உணர்வு ஏற்பட்டது. மிகச் சிறப்பாக, கலை நயத்தோடு, இந்த குறும்படத்தை இயக்குனர் பிரபாகரன் தயாரித்துள்ளார்" என்று பாராட்டினார்.

தொல். திருமாவளவன் தனது உரையில், பெரியார் நூல்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று 'தமிழ் முழக்கம்' சாகுல் அமீது முன்மொழிந்ததை விடுதலை சிறுத்தைகள் வழிமொழிகிறது என்று பலத்த கரவொலிக்கிடையே அறிவித்தார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:

தசரதனுக்கு பிறந்தவன் தான் இராமன் என இவ்வளவு காலம் எண்ணிக் கொண்டிருந்தோம். தந்தை பெரியார் பேச்சைக் கேட்டப் பிறகு தான் தசரதன் சும்மா பேனர் தான். அவர் பேப்பர் தான் வைத்திருக்கிறார். அப்பா என்ற பெயரை. ஆனால் இராமனுக்கு அப்பா யாரோ, இவ்வளவு காலம் எனக்கும் மிகப் பெரிய அய்யம் இருந்தது. அய்யர், அய்யங்கார்கள், பிராமணர்கள் ஒரு சத்திரியனை எப்படி தூக்கிப் பிடிக்கிறார்கள் என்ற கேள்விக்கு எனக்கு இன்றைக்குத் தான் விடை கிடைத்தது. இராமன் சத்திரியன் அல்ல. அவன் ஒரு பிராமணன் என்கின்ற செய்தியைப் பெரியார் போட்டு உடைக்கிறார்.

திரைப்படத் துறையில் திரும்பும் இடமெல்லாம் வணிக மயம் தான். எதைப் பயன்படுத்தி எப்படி காசு சம்பாதிக்கலாம் என்பதுதான் திரையுலகத்தின் முதன்மையான செய்தி. அந்த உலகத்தில் நின்றுக் கொண்டு இந்த தமிழ்ச் சமூகத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணுவது என்பது மிகப் பெரிய சிறப்பு. வேலு. பிரபாகரன் தொட்ட ஒவ்வொரு செய்தியும் தமிழ் நாட்டில் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொன்னால் அது திரையுலகத்தில் வேலு பிரபாகரன் முயற்சி என்பது யாரும் மறுத்துவிட முடியாது.

தந்தை பெரியார் அன்றைக்கு பதவி, சுகம் என்ற வாழ்க்கை நோக்கி நகராமல், சமூகத்தில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று தன்னுடைய வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்து இருக்கிறார், ஒப்படைத்து இருக்கிறார்.

அந்த வயதில் இழிவைப் போக்குவதற்கு ஒரு மாநாடு, யாரெல்லாம் இழிவை சுமக்கிறார்கள் என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்ல ஒரு மாநாடு, மாநாடு நடப்பதற்கு முன்னால் ஒரு சுற்றுப் பயணம், மாநாடு முடிந்த பின்னால் அதை விளக்குவதற்கு ஒரு சுற்றுப் பயணம்.

தலைவர்களில் மூன்று வகை உண்டு. தோன்றுகிறவர்கள், தோற்றுவிக்கப்படுபவர்கள், தோற்றமளிப்பவர்கள். எப்போதாவது யுகத்திற்கு ஒரு தலைவர் தோன்றுவதுண்டு. அப்படி தோன்றிய தலைவர் தான் தந்தை பெரியார்.

ஒரு கொள்கையை வரையறுத்துக் கொண்டு இந்தக் கொள்கைக்காக உயிர் மூச்சு உள்ள வரை பாடுபட வேண்டும் என்ற உள்ள உறுதி இருக்கிறதே, நெஞ்சுரம் இருக்கிறதே அது எல்லோருக்கும் வராது. 95 வயதிலேகூட விரக்தியே வராத ஒரு தலைவர் பாடுபட்டிருக்கிறார் என்பது நமக்கெல்லாம் ஒரு படிப்பினை.

அண்ணன் சாகுல் அமீது இங்கு பேசுகிறபோது, "தமிழக அரசு தந்தை பெரியாரின் எழுத்துக்களை பேச்சுக்களை நாட்டுடமையாக்க வேண்டும்" என்ற வேண்டுகோளை முன் மொழிந்தார். நான் விடுதலை சிறுத்தைகளின் சார்பில் அதை வழிமொழிய கடமைப் பட்டிருக்கிறேன். (கைதட்டல்)

நாட்டுடைமை ஆக்கப்பட்டுவிட்டால் அறிக்கைகள் எல்லாம் வராது. (கைதட்டல்) நாட்டுடமை ஆக்கப்பட வேண்டும். தலைவரின் சிந்தனைகள் மக்களுக்குரியவை. விடுதலைச் சிறுத்தைகளும் அதை பதிப்பிக்கலாம். பரப்புகிற பணி பெரியார் திராவிடர் கழகம் தான் செய்ய வேண்டும் என்பதல்ல, பெரியார் பெயரிலே இயக்கம் வைத்திருப்பவர்கள் தான் அந்தக் கடமையை செய்ய வேண்டும் என்பதல்ல, பெரியார் திராவிடர் கழகம் ஒரு 5000 புத்தங்களை அச்சிடுகிறதென்றால், விடுதலை சிறுத்தைகள் ஒரு 5000 புத்தகங்களை அச்சிட்டால் 10000-மாக மக்களிடத்திலே போய் சேரும். (கைதட்டல்)

கவிஞர் சினேகன் பேசுகையில், "பெரியார் சிந்தனைகள் நாட்டு மக்களின் சொத்து. தனி யார் சொத்து அல்ல" என்றார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, "சட்டத்தை எரித்த பெரியார் கொள்கை வழி வந்த எங்களை சட்டத்தைக் காட்டி, தடுக்க முடியாது" என்றார். (உரை தனியே வெளியிடப்பட்டுள்ளது. வீரமணியின் இந்த அறிவிப்பு - உண்மைப் பெரியாரியலாளர்களை மிகவும் ஆத்திரப்படுத்தியிருப்பதை உணர முடிந்தது. ✦

**அறிவை உடைமையாக்கியது ஆரியம்! அந்த உடைமையைத் தகர்க்க வந்ததே பெரியாரியம்!**

# 'ஆயுள் செயலாளர்' அம்பலமாகிறார்!

பெரியார் திராவிடர் கழகம் 27 'குடிஅரசு' தொகுதிகளை வெளியிடுவதை முடக்கும் நோக்கத்தில் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் ஆயுள் செயலாளர் கி.வீரமணி, 'சட்டப்படி நடவடிக்கை எடுப்போம்' என்று விடுத்த மிரட்டல் அறிக்கைக்கு கடும் எதிர்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன.

'குமுதம் ரிப்போர்ட்டர்' வார ஏட்டில் (ஆக.21) "பெரியார் யாருக்கு சொந்தம்?" என்ற தலைப்பிலும், "வீரமணி தான் ஒரே வாரிசா" என்ற தலைப்பிலும் இரு கட்டுரைகள் வெளிவந்துள்ளன. எம். பாண்டியராஜன் எழுதியுள்ள 'பெரியார் யாருக்கு சொந்தம்' என்ற கட்டுரை தமிழக அரசு, பெரியார் நூல்களை அரசுடைமை ஆக்காதது ஏன் என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. மிரட்டல் அறிவிப்பை வெளியிட்ட ஆயுள் செயலாளர் கி.வீரமணியிடம், இந்த ஏட்டின் செய்தியாளர் கருத்துக் கேட்கச் சென்றபோது, கி.வீரமணி, ஆத்திரத்துடன், செய்தியாளரை அவமதித்துள்ள செய்தியையும், 'குமுதம் ரிப்போர்ட்டர்' பதிவு செய்துள்ளது. இது குறித்து அப் பத்திரிக்கை குறிப்பிட்டுள்ளதாவது:

"விடுதலையில் வெளியான அறிவிப்பு குறித்து எழுந்துள்ள விமர்சனங்களுக்கு விடை தேடி பெரியார் திடலுக்குச் சென்றோம். திராவிடர் கழகப் பொதுச்செயலாளரான கலி. பூங்குன்றனை சந்தித்துப் பேசினோம். அவரோ, 'இந்த அறிவிப்பை வெளியிட்ட ஆசிரியர் எதிரில் இருக்கிறார். அவரையே சந்தித்துக் கேளுங்கள்' என்றார். நாம் திராவிடர் கழகத் தலைவர் வீரமணியை நேரடியாகச் சந்தித்தோம். நமது கேள்விகளை முன் வைப்பதற்குள்ளாகவே, 'பத்திரிகையில் கொடுத்த அறிவிப்பிலேயே எல்லாம் இருக்கிறது. நான் யாரையுமே அப்பாயின்மெண்ட் கொடுத்து விட்டுத் தான் சந்திப்பது வழக்கம். இந்த அறிவிப்பைப் பொறுத்த வரையில் நான் எதையும் சொல்ல முடியாது. சட்டப்படியாகவே எல்லாம் நடக்கும். நீங்கள் கிளம்பலாம். வேறு எதுவும் பேச முடியாது' என்றதோடு வழியனுப்பி வைத்தார்.

அங்கிருந்து கிளம்ப எத்தனிக்கையில் நமக்குத் தோன்றியது பெரியாரின் வாசகம் ஒன்று. 'இதைச் செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ? இந்தப் பணியை யாரும் செய்ய முன் வராததால், நான் மேற்போட்டுக் கொண்டு செய்கிறேன்.'

இதை பெரியார் தி.க. தொண்டர்களும் நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள் போல."

- என்று 'குமுதம் ரிப்போர்ட்டர்' எழுதியுள்ளது.

'பெரியார் நூல்களை வெளியிடுவதில் சர்ச்சை' என்ற தலைப்பில் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு (ஆக.18) செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது. செய்தியின் உள்ளடக்கத்தில் பல உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கிறது அக்கட்டுரை. பாபு ஜெயக்குமார் எழுதிய அந்த செய்திக் கட்டுரையில் 1996 ஆம் ஆண்டு திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறி விடுதலை இராசேந்திரன் போன்றவர்கள் பெரியார் திராவிடர் கழகம் தொடங்கிய போதே பெரியாரின் 'குடிஅரசு' தொகுப்புகளை கி.வீரமணி ஏன் வெளியிடவில்லை என்ற கேள்வியை முன் வைத்தனர். பெரியார் கொள்கையாளர்கள் திருச்சி பெரியார் மாளிகையில் 'குடிஅரசு' பத்திரிகையில் பெரியாரின் பேச்சு எழுத்துகளைத் தொகுத்து எழுதி, கி.வீரமணியிடம் நேரில் அளித்து, 25 ஆண்டுகள் உருண்டோடியும், கி.வீரமணி அவைகளை வெளியிடவில்லை. இந்த நிலையில் ஏற்கனவே 2003, 2005 ஆம் ஆண்டுகளில் பெரியார் திராவிடர் கழகம், 3 குடிஅரசு தொகுதிகளை ஏற்கனவே வெளியிட்டுள்ளது என்ற செய்திகளை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பதிவு செய்துள்ளது. சென்னையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் ஆர். நல்லக்கண்ணு, விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன், பெரியாரின் எழுத்துகளுக்கு அறிவுசார் சொத்துடைமை கோருவதை குறை கூறியதையும், இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு சுட்டிக் காட்டியுள்ளது.


'டெக்கான் குரோனிக்கல்' ஆங்கில நாளேடு (ஆக.18)ம் இது குறித்து செய்தி வெளியிட்டுள்ளது. அதன் செய்தியாளர் கே. கார்த்திகேயன் எழுதியுள்ள செய்திக் கட்டுரையில், பெரியார் எழுத்துகளுக்கு கி.வீரமணி அறிவுசார் சொத்து கோருவது பெரியாரை வியாபாரப் பொருளாக்குவதாகும் என்று பொதுச்செயலாளர் கழக சார்பில் முன் வைக்கப்பட்ட கருத்தை வெளியிட்டிருக்கிறது. 'வின்' தொலைக் காட்சியில் ஒவ்வொரு நாளும் செய்தி விமர்சனங்களை வழங்கி வரும் டி.எஸ்.எஸ். மணி, ஆக. 18 ஆம் தேதி அன்று இதுபற்றி விரிவான விமர்சனங்களை முன் வைத்தார்.

**தோழர்களே! 'குடிஅரசு' முன்பதிவு திட்டப் பணிகளை தீவிரப்படுத்துவீர்!**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 21st August 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | www.puratchiperiyarmuzhakkam.com | திருவள்ளுவர் ஆண்டு 2039 | ஆகஸ்டு 28, 2008 | புரட்சி 7 | முழக்கம் 35 | விலை : ரூ.2.50


## ‘குடிஅரசை’ தடுக்கும் – வீரமணிக்கு கண்டனம்: பெரியார் நூல்களை நாட்டுடைமையாக்குக!

# கழகம் நடத்திய ஆர்ப்பாட்டங்கள்!





*பெரியாரை – பெரியார் திடலுக்குள் முடக்க நினைக்கும் வீரமணியைக் கண்டித்தும், பெரியார் நூல்களை நாட்டுடைமையாக்க தமிழக அரசை வலியுறுத்தியும், தமிழ்நாடு முழுதும் பெரியார் திராவிடர் கழக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் ஆகஸ்டு 25 திங்கள் கிழமையன்று எழுச்சியுடன் நடைபெற்றன. ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு கட்சிகள், அமைப்புகளைச் சார்ந்தவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். செய்தி விவரம்:*

### சென்னை

25.8.2008 திங்கள் மாலை 4 மணி அளவில் சென்னை மெமோரியல் அரங்கம் அருகில் கழகத் துணைத் தலைவர் ஆனூர் கோ. செகதீசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் சு. குமாரதேவன், ‘சமூகநீதித் தமிழ்த் தேசம்’ இதழ் ஆசிரியர் தியாகு, மக்கள் கலை இலக்கிய கழகத் தோழர் வீராசாமி, மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை கட்சித் தோழர் வாலாசாவல்லவன், பெண்ணியப் போராளி ஓவியா ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் அன்பு தனசேகர், தபசி குமரன், இரா. உமாபதி, சேத்துப்பட்டு இராசேந்திரன், சீ. மணிவண்ணன், கரு. அண்ணாமலை, பொன்னேரி பன்னீர்செல்வம், அ. அருள்தாசு மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

பெரியார் நூல்களும், சொத்துக்களும் எனக்கே சொந்தம் என்று சொல்லும் வீரமணியை மக்கள் மத்தியில் அடையாளப்படுத்தும் நோக்கில் செ. குமரன், வீரமணி வேடம் போட்டு ஒரு கையில் பெரியார் நூல்களும், மற்றொரு கையில் ரூபாய் நோட்டு மூட்டைகளை பிடித்துக் கொண்டு இருந்தது பொது மக்களை வெகுவாக கவர்ந்தது. கோபி அவர்கள் பெரியார் வேடம் அணிந்து வந்தார். 5.30 மணி வரை ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடந்தது.

(தோழர்கள் தியாகு, வாலாசா வல்லவன் கண்டன உரை அடுத்த இதழில்)

### நெமிலி

வேலூர் மாவட்டம் நெமிலியில் பேருந்து நிலையம் அருகில் காலை 11 மணியளவில் கழகத் தோழர் பகலவன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. கழகப் பொறுப்பாளர்கள் திலீபன், முருகேசன், கன்னியப்பன், முனியாண்டி, மக்கள் கலை இலக்கிய கழகத் தோழர் மோகன் உள்ளிட்ட தோழர்கள் பலரும் பங்கேற்றனர்.

### சேலம்

25.8.2008 திங்கள்கிழமை சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு காலை 11 மணியளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் அ. சக்திவேல் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் எம். இராசகோபாலன், மாவட்ட செயலாளர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, அரங்க செல்லதுரை, மாநில துணை செயலாளர், அரசியல் குழு விடுதலை சிறுத்தைகள், பாட்டாளி மக்கள் கட்சியின் மாநில இளைஞரணி தலைவர் அருள், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் மாநகர பொறுப்புக் குழுத் தலைவர் எஸ். முருகேசன், குடியுரிமை பாதுகாப்பு நடுவத்தின் பொதுச் செயலாளர் அரிபாபு, மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை கட்சியைச் சார்ந்த ஆனையப்பன், மனித உரிமை அமைப்பைச் சார்ந்த பூமொழி, புதியன பண்பாட்டுக் கழகம் செந்தில், தமிழர் தேசிய இயக்கம் சிவப்பிரியன் மற்றும் கழக முன்னணி தோழர்களும், பெரியாரின் நூல்களை நாட்டுமையாக்கவும், பெரியாரின் ‘குடிஅரசு’ ஏடுகளை பெரியார் திராவிடர் கழகத்தின் பெரும் முயற்சியால் வெளியிட இருக்கின்ற இந்த சூழ்நிலையில் கி.வீரமணி நூல் வெளியிட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று மிரட்டுவதும் பிற்போக்குத்தனமானது என்றும், அறிவுசார் சொத்துரிமை கூறுவது கண்டனத்துக்குரியது என்றும் பேசினர். மேலும் பெரியார் மக்களுக்கான

4 ஆம் பக்கம்







# பெரியாரின் சமூகப் புரட்சி முடிந்துவிட்டதா?

“ஒரு சமுதாய இயக்கம் இப்படி **அளவுக்கு மீறி** கருணாநிதியை ஆதரிக்கிறது என்ற குற்றச்சாட்டுக்கு உங்கள் பதில் என்ன?” என்று ‘ஆனந்த விகடன்’ செய்தியாளர் - கி.வீரமணியிடம் கேட்கிறார். இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய சொற்றொடர் ‘அளவுக்கு மீறி’ என்பதாகும். ஆனால் அதற்குரிய அழுத்தம் பற்றி கி.வீரமணி கவலைப்படவே இல்லை. ‘அளவுக்கு மீறி’ என்ற வார்த்தையை அப்படியே அனாயசமாக ஒதுக்கித் தள்ளிவிட்டு, ‘கலைஞருக்கான ஆதரவு’ என்று, தனக்காக கேள்வியை திருத்திக் கொண்டு இப்படி பதில் கூறுகிறார், “கலைஞரை ஆதரிப்பது ஒரு குற்றமாகச் சொல்லப்படுமானால் அந்தக் குற்றத்தைப் பெருமையுடன் தொடர்ந்து செய்வேன்” என்கிறார், கி.வீரமணி.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல் கட்சி கூட, தங்கள் கூட்டணி கட்சிகளை ஆதரிப்பதா, விலக்குவதா என்பதை செயற்குழுவைக் கூட்டி தான் முடிவு செய்கிறது. ஆனால், பெரியார் கொள்கை களுக்காக அந்தக் கொள்கைகளை நம்பி வந்துள்ள தொண்டர்களைப் பற்றி எல்லாம் கி.வீரமணி கவலைப்படவே இல்லை. கொள்கை அடிப்படையில் ஆதரவும், எதிர்ப்பும் இருக்கும் என்று வழமையான வசனத்தையும் காற்றில் பறக்கவிட்டு, தனது விருப்பு வெறுப்புகளை முன் வைத்து, ‘ஆதரவு’ எனும் நிரப்பப்படாத காசோலையை கையெழுத் திட்டு கலைஞருக்கு தரத் தயாராகவே இருக்கிறார்.

‘சமூகநீதி காத்த வீராங்கனை’ ஜெயலலிதா கி.வீரமணிக்கு, பெரியார் விருது வழங்கும்போது, எனது ஆயுள் உள்ள வரை உங்களுக்கு ஆதரவாக இருப்பேன் என்று உறுதி பிரகடனத்தை வாசித்தவரும், இதே வீரமணி தான்!, இது கலைஞருக்கு தெரியாதா என்ன?

“பெரியார் வாழ்நாளில் நிறைவேற்ற நினைத்த பல்வேறு சமுகப் புரட்சிகளையும் செய்து காட்டியவர் கலைஞர்” என்கிறார் வீரமணி. ஆக, வீரமணியின் கருத்தின்படி இனி பெரியார், இயக்கத்துக்கே தேவை இல்லை.

சூத்திரர் இழிவு நீங்கிவிட்டது;

பார்ப்பனர்கள், பூணூலை அறுத்தெறிந்து விட்டனர்;

சாதியமைப்பு தகர்ந்துவிட்டது;

மூடநம்பிக்கைகள் எல்லாம் ஒழிந்து, மக்கள் முழு பகுத்தறிவாளர்களாகிவிட்டனர்;

குலத் தொழில்கள் முற்றாக மறைந்து விட்டன;

பெண்கள் சம உரிமை பெற்று விட்டார்கள்;

தீண்டாமை என்பது கனவாகிவிட்டது; சேரிகள் மறைந்து விட்டன;

தீண்டாமைக் கொடுமைகள் முடிவுக்கு வந்துவிட்டன;

இரட்டை தம்ளர்களோ, தனிச் சுடுகாடுகளோ கிடையாது;

இந்திய தேசியப் பார்ப்பனப் பிடியிலிருந்து - தமிழர்கள் விடுதலை பெற்று - தாய்நாட்டில் உலவிக் கொண்டிருக்கிறார்கள்;

இனி நிறைவேற்றப்பட வேண்டிய பெரியார் கொள்கை வேறு என்ன இருக்கிறது?

வீரமணியாரின் பார்வையில் இனி எதுவுமே இல்லை; சமுகப் புரட்சியே நடந்து முடிந்துவிட்டது. இதை அவரது கட்சியிலுள்ள ‘கட்டுப்பாடு மிக்க’ பெரியார் தொண்டர்கள் ஒவ்வொருவரும் ‘கட்டுப்பாட்டுடன்’ நம்ப வேண்டும்; இல்லாவிடில் ‘துரோகிகள்’ பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்!

23.6.08 அன்று சேலத்தில் நடந்த **கு.பாரதி தேவி- பா. செந்தில் குமார் வாழ்க்கை துணைஏற்பு விழா**வில் கழக ஏட்டுக்கு அளித்த நன்கொடை ரூ1000/- நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

# தொகுப்பாக வெளிவருவதைக் கண்டு மிரளுவது ஏன்?

**கேள்வி :** பெரியாரின் கருத்துகளும், கொள்கை களும் பரவ வேண்டும் என்பதுதான் நோக்கம் என்றால், மற்றவர்களும், அதை வெளியிடுவதைத் தடுக்க வேண்டிய அவசியம் என்ன?

**கி. வீரமணி :** பெரியாரின் எழுத்துக்களைப் பதிப்பிக்கிறோம் என்ற போர்வையில், அவரது எழுத்துக்களைச் சிலர் மாற்றிவிடக்கூடிய ஆபத்து இருக்கிறது. தவிர மொத்தமாகப் பதிப்பிக்கும்போது, கொள்கைக் குழப்பங்கள் ஏற்படும். அதனால் தான் இந்த அறிவிப்பு.

– ‘ஆனந்த விகடன்’
(கி.வீரமணி பேட்டி) 27.8.2008

ஆக, பெரியார் கருத்துகளை மாற்றி, சிதைத்து விடக்கூடாது என்பதால், பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் மட்டுமே, இதை வெளியிடும் உரிமைக் கோருவதாக கி.வீரமணி கூறுகிறார். இதன் மூலம், அரசு பெரியார் நூல்களை நாட்டுடைமை யாக்குவதற்கு, தனது மறைமுக எதிர்ப்பையும் வெளிப்படுத்தியிருக்கிறார். காரணம், அரசு நாட்டுடைமையாக்கிவிட்டால், பெரியார் நூல்களை வெளியிடும் உரிமை, எல்லோருக்கும் கிடைத்து விடுமே! இந்த நிலையில் பெரியாருடைய நூல்களை நாட்டுமையாக்குவதை எதிர்க்கிறோம் என்று வெளிப்படையாகக் கூற வேண்டியது தானே! அந்தக் கேள்வியை எழுப்பும் போது, ‘அது அரசாங்கம் எடுக்க வேண்டிய முடிவு’ என்கிறார். அரசாங்கம் அப்படி ஒரு முடிவை எடுத்தால், அப்போது, பெரியார் கொள்கைகளை பலரும் வெளியிட அனுமதிக்கக் கூடாது; பெரியாரின் கருத்துகளை திருத்தி விடுவார்கள் என்று இவர் அப்போதும் சுட்டிக் காட்டுவாரா?

அண்ணாவின் நூல்கள் கூட நாட்டுடைமை யாக்கப்பட்டுள்ளன. அப்படியானால், அண்ணாவின் கருத்துகளைத் திருத்தி நூல்கள் வந்து கொண் டிருக்கிறதா? அல்லது அண்ணாவின் கருத்துகளை திருத்தி விடுவார்கள் என்று கூறி, அண்ணாவின் நூல்களை நாட்டுடைமையாக்காமல் போய் விட்டனவா? இரண்டுமே நடக்கவில்லை என்பதே உண்மை. அண்ணாவின் ஆரிய மாயை, தீ பரவட்டும், நிலையும் நினைப்பும் என்று பல புரட்சிகரமான நூல்கள் பல்வேறு பதிப்பகங்களால் வெளியிடப் பட்டு பரப்பப்பட்டு வருகின்றன.

அப்படி கருத்துத் திரிபுகள், வந்தால், அதை சுட்டிக்காட்டி திருத்துவதே பெரியார் இயக்கங் களின் கடமைகளில் ஒன்றாகும். வால்மீகி ராமா யணத்தின் ஆபாசங்களை, தந்தை பெரியார் தோலுரிக்கத் தொடங்கிய பிறகு, அந்த ஆபாசங் களை நீக்கிவிட்டு, அதன் பிறகு, இராமாயண பதிப்புகள் வெளிவரத் தொடங்கியபோது, பெரி யாரே அதை சுட்டிக்காட்டி அம்பலப்படுத்தி வந்தார்.

கி.வீரமணியின் வாதப்படி, தலைவர்களின் நூல்கள் அந்தந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் தான் வெளியிட முடியும். இதிலாவது, வீரமணிக்கு நேர்மையிருந்தால், ‘நாட்டுடையாக்குவதே கூடாது’ என்ற கருத்தை முன் வைத்திருக்க வேண்டாமா? எப்போதாவது முன் வைத்திருக்கிறாரா? மாறாக, கலைஞர் வேறு பலரின் நூல்களை நாட்டுடைமை யாக்கும் அறிவிப்புகளை வெளியிட்ட போதெல்லாம் இவர் பாராட்டி வரவேற்றவர் தானே?

எந்தக் கருத்தையும், ஒளிவு மறைவின்றி, வெளிப் படையாக எடுத்துச் சொல்வதுதான் பெரியார் அணுகுமுறை; உள்ளத்துக்குள் ஒரு கருத்தை ஒளித்து வைத்துக் கொண்டு, வெளிப்படுத்திவிடக் கூடாது என்று மறைக்கும் ‘பார்ப்பனிய சூழ்ச்சிகள்’, பெரியாரிடம் இருந்ததே கிடையாது. அதனால் தான், அவர் பெரியார். ஆனால் வீரமணியின் சிந்தனைக்குள் ‘பார்ப்பனியம்’ பதுங்கி நிற்கிறது. திரை மறைவு பேச்சுகள், சூழ்ச்சித் திட்டங்கள், வஞ்சக வலைகள் என்ற திசையில், அவர் பயணிப்பதால், அவரிடம் நேர்மையான, உறுதியான பதில்கள் வெளிப்படாமல் போய்விடுகின்றன. ‘பெரியாரின் எழுத்துகளை வேறு எவரும் பதிப்பித்துக் கருத்துகளை மாற்றி விடுவார்கள்’ என்று ஒரு பக்கம் கூறிக் கொண்டு, ‘ஆனால் தேச உடைமையாக்குவது அரசின் முடிவு’ என்று, பதுங்கிக் கொள்வது ஏன் பெரியாரின் நூல்களை நாட்டுடைமையாக்குவதை எதிர்க்கிறோம் என்று நாணயமாக அறிவிக்க மறுப்பது ஏன்? ‘அறிவு நாணயம்’ பற்றி அடுத்தவர்களுக்கு ‘அறிவுரை’ வழங்கும் கி.வீரமணியின், அறிவு நாணயம் இதுதானா? பெரியார் நூல்களை நாட்டுடைமை யாக்கக்கூடாது என்று அறிவித்தால் - மக்கள் மன்றத்தில் அம்பலமாகிவிடுவோம் என்பதால் தானே, இந்த கபட நாடகம்!

இதில் மறைந்திருக்கும் உண்மை என்ன? தமிழக அரசிடம், “தேசவுடைமையாக்கக் கூடாது என்று, ரகசியமாகக் கூறி, காரியத்தை சாதித்துக் கொள்வேன்; ஆனால் அதை வெளிப்படுத்த மாட்டேன்” அப்படிக் கூறிவிட்டால் மக்கள் மன்றத்தில் தனது முகத்திரை கிழிந்துவிடும் என்பது தானே? இப்படிப்பட்ட குதுமதியாளர்கள், ஒளிவுமறைவற்ற, சமரசமற்ற வெளிப்படையான, பெரியாரியல் சிந்தனைகளை நேர்மையாகப் பரப்புவார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும் என்ற கேள்வியை தமிழின உணர்வாளர்கள் சிந்தனைக்கு வைக்கிறோம்.

கி.வீரமணி அதே பேட்டியில் தெரிவித்த மற்றொரு கருத்தையும் முக்கியமாக சுட்டிக் காட்ட வேண்டும். “பெரியாரின் கருத்துகளை மொத்தமாகப் பதிப்பிக்கும்போது கொள்கைக் குழப்பங்கள் ஏற்பட்டு விடும். அதனால் தான் இந்த அறிவிப்பு” என்று கூறியுள்ளார்.

1925 ஆம் ஆண்டிலிருந்து 1938 ஆம் ஆண்டு வரை பெரியார் ‘குடிஅரசில்’ எழுதியவற்றையும், அவரது பேச்சுக்களையும், காலவரிசைப்படி தொகுத்து வெளியிடும் முயற்சியைத்தான் ‘மொத்தமாகப் பதிப்பிக்கும் ஆபத்து’ என்கிறார் கி.வீரமணி. பெரியாரின் எழுத்துக்களை அப்படியே உள்ளது உள்ளபடியே வெளியிடாது மாற்றி விடுவார்களே என்று வாதிம் அதே வீரமணி தான், பெரியாரின் எழுத்துக்களை கால வரிசைப்படி தொகுத்து மொத்தமாக வெளியிடு வதால் ‘கொள்கைக் குழப்பம்’ ஏற்பட்டு விடும் என்று கூறுவது, அவரது முரண்பாட்டையே காட்டுகிறது.

ஆக, பெரியாரின் கருத்துகளை கால வரிசைப்படி தொகுத்தாலே அது கொள்கைக் குழப்பமாகிவிடும் என்று கூறுவதன் மூலம், பெரியாருக்கே குழப்பவாதி என்ற முத்திரை குத்த விரும்புகிறாரா என்பது நமக்குப் புரியவில்லை. காலவரிசைப்படி, பெரியாரின் கருத்துகளைத் தொகுப்பதன் அடிப்படையான நோக்கமே - ஒவ்வொரு சமூக, அரசியல், சூழல்களில் பெரியார் எடுத்த நிலைப்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கும், தெரிந்து கொள்வதற்கும் தான். எத்தகைய அக-புறச் சூழல்களில் பெரியார் எத்தகைய பிரச்சினைக்கு முதன்மை தந்து, இயக்கத்தை வழி நடத்தினார் என்ற உண்மைகளை கால வரிசைப்படி வெளியிடுவதன் வழியாக நாட்டுக்கு விளக்குவதைக் கண்டு - கி. வீரமணிகள் ஏன் பயப்படுகிறார்கள்?

பயப்படுவதற்கு காரணம் என்ன தெரியுமா? வீரமணியின் கொள்கைக் குழப்பங்களை அம்பலப்படுத்திவிடும். இதுதான் உண்மை. அதனால் தான், “கடவுள், மதம், பெண்ணுரிமை, சாதி, தீண்டாமை” ஆகிய தலைப்புகளின் கீழ் பெரியார் சிந்தனைகளை தங்கள் அமைப்பு தொகுத்து வெளியிடுவதாக - கி. வீரமணி, இதே பேட்டியில் கூறியுள்ளார். ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலும், தி.மு.க. ஆட்சி காலத்திலும் கி. வீரமணி, எந்தெந்தக் கருத்துகளை முன் வைத்தார்; அறிக்கைகளை வெளியிட்டார்; என்று கால வரிசைப்படி இவரது கருத்துகளைத்தொகுக்க ஆரம்பித்தால், இவரது முகத்திரை சுக்கு நூறாக கிழிந்து போய்விடும். அந்த அச்சமும், நடுக்கமும் தான் பெரியாரின் கருத்துகளை கால வரிசைப்படி தொகுத்துவிடக் கூடாது என்ற பதைபதைப்பிலும், பதட்டத்திலும், இவரைக் கொண்டு போய் நிறுத்தி வைத்துள்ளது.

காலவரிசைப்படி ‘குடிஅரசு’ தொகுப்புகள் வரும்போது -

- பெரியாரின் ஊசலாட்டமற்ற கொள்கை உறுதி புலனாகும்.
- தான் ஆதரித்தவர்களையேகூட - கண்மூடித் தனமாக ஆதரிக்காமல், குறைகளை துணிவோடு சுட்டிக்காட்டினார், என்ற உண்மைகள் வெளிச்சத்துக்கு வரும்.
- பெரியாரின் எதிர்ப்பும், ஆதரவும், நிபந்தனை களுக்கு உட்பட்டே இருந்திருக்கிறது என்பது - புரிய ஆரம்பித்துவிடும்.
- அதிகார அமைப்புகளையும், இந்திய தேசியத்தை யும், பெரியார் உறுதியோடு எதிர்த்தது வெளிச்ச மாகும்.

4 ஆம் பக்கம்

# இதயத்தில் இடம் பிடிக்க இதோ சில முழக்கங்கள்!

சென்னையில் திராவிடர் கழகம் மாநாடு ஒன்றை நடத்தப் போவதாகவும், அதற்கு எல்லோரும் திரண்டு வரவேண்டும் என்றும், அக்கழகத்தின் தலைமையும், விடுதலை எழுத்தாளர்களும், அக் கழகத்தினருக்கு உணர்ச்சியுடன் அழைப்பு விடுத்து வருகிறார்கள். வரக்கூடிய தொண்டர்கள் கீழ்க்கண்ட முழக்கங்களை வீரத்துடன் முழங்கி வரலாம் என்பது எமது பணிவான ஆலோசனை. விருப்பமுள்ள உறுதி யான கழகக் கட்டுப்பாட்டாளர்கள் இதை பயன் படுத்தலாம். அப்படிப் பயன்படுத்தினால் - தமிழர் தலைவர் இதயத்திலே நீங்காத இடம் கிடைக்கும் என்பதை மட்டும் சொல்லி வைக்கிறோம். விருப்ப மில்லாதவர்கள், வேண்டுமானால் ஒதுக்கித் தள்ளி விடலாம். அது அவர்களின் உரிமை; முழங்கலாமா?

*காப்போம்; காப்போம்;*
*பெரியார் கொள்கைகளை*
*கட்டுப்பாட்டுடன் காப்போம்!*
*கட்டுக்குள் அடக்கிக் காப்போம் –*
*பெரியார் திடலுக்குள் அடக்கிக் காப்போம்!*

*எச்சரிக்கை; எச்சரிக்கை*
*துரோகிகளே எச்சரிக்கை;*
*‘குடிஅரசை’ பரப்பும்*
*துரோகிகளே எச்சரிக்கை!*
*பெரியார் – ‘குடிஅரசை’*
*பரப்பும் துரோகிகளே எச்சரிக்கை!*

*இந்தப் படை போதுமா?*
*இன்னும் கொஞ்சம்*
*வேண்டுமா? ‘குடிஅரசை’*
*முடக்கிப் போட*
*இந்தப் படை போதுமா,*
*இன்னும் கொஞ்சம் வேண்டுமா?*

*பொறுப்போம்; மீறினால்*
*தடுத்திடுவோம் ‘குடிஅரசை’*
*விடமாட்டோம்; விடமாட்டோம்;*
*பெரியாரின் எழுத்துக்களை*
*ஆண்டுவாரியாக தொகுக்க*
*விடமாட்டோம்; விடமாட்டோம்;*
*எங்கள் தலைவர் விடமாட்டார்!*

*இந்த இயக்கம் எங்கள் இயக்கம்;*
*எங்கள் கொள்கை*
*வாழ்வியல் கொள்கை!*
*இங்கே ஏதடா, பெரியார் கொள்கை;*
*தனியுடைமை; தனியுடைமை;*
*பெரியார் நூல்கள் – எங்கள்*
*தனியுடைமை; பரப்ப முயன்றால்*
*பாயும் சட்டம்!*

*முறியடிப்போம்; முறியடிப்போம்;*
*பெரியார் நூல்கள்*
*நாட்டுடைமையாவதை*
*முறியடிப்போம்; முறியடிப்போம்!*
*சுயமரியாதை நிறுவனம் வாழ்க!*
*ஆயுள் செயலாளர்*
*அய்யா வீரமணி வாழ்க! வாழ்க!*

*எங்கள் சொந்தம்; எங்கள் சொந்தம்;*
*பெரியார் சொத்துக்கள் எங்கள் சொந்தம்!*
*பெரியார் நூல்களும் எமக்கே சொந்தம்!*
*உலக மயமாக்குவோம்; உலகமயமாக்குவோம்;*
*பெரியார் நூல்களுக்கு*
*காப்புரிமை பெற்று*
*பெரியாரை உலகமயமாக்குவோம்!*

*பெரியாரின் குடிஅரசைப் பரப்பும்*
*பெரியார் தி.க. ஒழிக!*
*பெரியார் நூல்களை மக்களிடம் சேர்க்கும்*
*பெரியார் தி.க.வை வீழ்த்துவோம்!*
*அய்யா வீரமணியின் அடிச்சுவட்டில்*
*அய்யா பெரியாரை முடக்கிடுவோம்!*

*உறுதியேற்போம்; உறுதியேற்போம்;*
*கட்டுப்பாடு காக்க உறுதியேற்போம்!*
*குடிஅரசை முடக்கிப் போட்டு*
*கட்டுப்பாடு காக்க உறுதியேற்போம்;*

‘விடுதலை’யில் வெளிவந்து கொண்டிருக்கும் கட்டுரையாளர்களின் சிந்தனை வழியில் உருவாக்கிய முழக்கங்களைத்தான் பணிவுடன் சமர்ப்பித்துள் ளோம். துரோகிப் பட்டியலில் இடம் பிடிக்க விரும் பாத எவரும் - இதை பயன்படுத்தி, உலகத் தலைவரின் இதயத்தில் இடம் பிடிக்க முன்வருவார்களாக!

**– கோடங்குடி மாரிமுத்து**

## கி. வீரமணியின் வாழ்வியல் சிந்தனை: மனம் குமுறுகிறார், ஒரு பெரியார் தொண்டர்!

*(உள்ளக்குமுறலுடன் ஒரு நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த பெரியார் பெருந்தொண்டர் எழுதிய கடிதம்)*

மனித சமுதாயம் தோன்றிய காலத்திலேயிருந்தே வாழ்வியல் முறையில் மாற்றங்களை சந்தித்து வருகிறது - அறிவு வளர்ச்சிக்கேற்ப இலக்கியங்கள் உருவாக்கப்பட்டு, வாழ்வியல் முறை நெறிபடுத்தப்படுகின்றன. தமிழிலக்கியங்களில் முக்கியமாக திருக்குறளில் வாழ்வியல் நெறி முறைகள் வகுக்கப்பட்டுள்ளன - என்றாலும் சமுதாயத்தில், ஏற்றத் தாழ்வுகளும், பாகுபாடுகளும் நிறைந்து காணப்படுகின்றன - சம உரிமை பெற்று வாழும் சமுதாயத்தில் மட்டுமே தூய வாழ்வில் நெறிகள் விதைக்கப்படும்போது சமுதாயம் விழிப்புணர்ச்சி பெற்று வளர்ச்சி பெறும் அனைவருக்கும் பாகுபாடின்றி அதன் வளர்ச்சிப் பயன் கிட்டும்.

இந்தியச் சமுதாயம் குறிப்பாக தமிழ்ச் சமுதாயம், சூழ்ச்சி, வஞ்சகம் ஆகியவற்றால் தாக்குண்டு, ஊனப்பட்டு கிடக்கின்றது. ஆரியர்களின் ஆக்டோபஸ் பிடியிலிருந்து விடுபட முடியாமல் திராவிட இனம் அடிமைப்பட்டு கிடக்கிறது. இந்த வன்கொடுமையை கண்ட பெரியார் வெகுண்டெழுந்து இந்த மக்களை சூத்திரர்களாக சாகவிட மாட்டேன் என சூளுரைத்து பெரும் புரட்சியை ஏற்படுத்தினார். இதனையே தனது வாழ்க்கையின் லட்சியம் என ஆக்கிக்கொண்டார். பெரியார் மறைந்து 34 ஆண்டுகள் ஓடிவிட்டன. பெரியார் தொண்டர்கள் மேலும் கடுமையாக பணியாற்ற வேண்டிய காலகட்டம் இது. இப்போது நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? பெரியாரின் புரட்சி சிந்தனைகள் வெகுவாக மறைக்கப்பட்டு வருகின்றன. இளைஞர்கள் திசை திருப்பிவிடப்படுகின்றனர். புரட்சி சிந்தனைகள் சிதைக்கப்படுகின்றன. இளைஞர்கள் நுகர்வோர் கலாச்சார போதையில் மயங்கி கிடக்கின்றனர்.

பெரியாருக்கு வாரிசுகளாக்கப்பட்டவர்கள் பெரியாரின் கொள்கைகளை மென்மைப்படுத்தும் வழி முறைகளை செய்து கொண்டிருக்கிறார்கள். இளைஞர்களிடத்தில் புரட்சியை தூண்ட வேண்டியவர்கள், வாழ்வியல் வேதாந்தத்தை போதிக்க புறப்பட்டு விட்டார்கள். அந்த வேலையைத் தானே மடத்து சந்நிதானங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வேலையை இவர்கள் ஏன் தத்தெடுத்துக் கொள்ள வேண்டும்?

பெரியாரின் வாரிசுகளாக்கப்பட்டவர்கள் வெளியிடும் ‘வாழ்வியல்’ புத்தகங்களை இப்போது மடத்து தம்பிரான்கள், பக்தர்களுக்கு கொடுத்து ஆசி வழங்கி கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பெரியார் பெயரில் புதிதாக ஒரு மடம் கட்டப்பட்டு, புதிய தம்பிரான்கள் உருவாகிறார்கள்! தமிழ்ச் சமுதாயம் இவர்களை மன்னிக்குமா?

*(குறிப்பு: ‘வீரமணியின் வாழ்வியல் சிந்தனை’ நூல்களை மொத்தமாக வாங்கி, மதுரை மடாதிபதி, தமது மடத்தின் முத்திரையைப் பதித்து, தன்னிடம் ஆசி கேட்டு வரும், சைவர்களுக்கு வழங்கி வருவதையே இந்த பெரியார் தொண்டர் குறிப்பிடுகிறார்.)*

## மறந்தவரும் – மறக்காதவர்களும்

“டெஸ்மா சட்டம் மூலமாக, பல்லாயிரக் கணக்கான அரசு ஊழியர்களை ஜெயலலிதா பழி வாங்கியதையும் கம்யூனிஸ்ட்டுகள் மறந்திருக்க மாட்டார்கள்.”

**– ஆனந்த விகடன் பேட்டியில் கி.வீரமணி.**

ஆமாம்! கம்யூனிஸ்ட்டுகள் நிச்சயம் மறந்திருக்க மாட்டார்கள் தான்! ஆனால், அந்த டெஸ்மா சட்டத்தால் தமிழக அரசு ஊழியர்களை ஜெயலலிதா வேட்டையாடிய போது, ஜெயலலிதாவின் துணிவின் வீரத்தையும் பாராட்டி, பக்கம் பக்கமாக பாராட்டு அறிக்கைகள் விட்டதை, கி. வீரமணி தான் மறந்து விட்டார்! என்ன செய்வது?

## அப்பா – மகன்

### ‘மானமிகு’ மனுதர்மம்

**மகன் :** வேதங்கள் “பிராமணர்களுக்கு” மட்டுமே உரிமை என்றும், அதை ‘சூத்திரர்’ பயன்படுத்தினால், நாக்கை வெட்டி, காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் என்றும் ‘மனுதர்மம்’ தானே கூறுகிறது, அப்பா?

**அப்பா :** ஆமாம், மகனே. அதில் என்ன சந்தேகம்.

**மகன் :** அதே போல், பெரியாரின் நூல்கள் – தங்களுக்கு மட்டுமே சொந்தம், அதை மற்றவர்கள் வெளியிடுவது சட்டப்படி குற்றம் என்று, வீரமணி கூறுகிறாரே; இது வீரமணியின் ‘மனு தர்மா’, அப்பா?

**அப்பா :** இது ‘மானமிகு’ மனுதர்மம் மகனே!

### கேள்வியும் பதிலும்

**கேள்வி:** பெரியார் நூல்களை நாட்டுடைமை யாக்க வேண்டும் என்று குரல் கொடுப்பவர்கள், நாட்டுடைமையாகா நிலையில் அவைகளை வெளியிடுவது சட்ட விரோதம் என்று ஒப்புக் கொள்வதாகத் தானே பொருள் என்று ‘விடுதலை’யில் கலி. பூங்குன்றன் எழுதியுள்ளாரே!

**பதில் :** நாட்டுடைமையாக்கினால் தான் - பெரியார் நூல்களை வெளியிட முடியும் என்பது பெரியார் திராவிடர் கழகத்தின் கருத்தல்ல; நாட்டுடைமை யாகாமலே வெளியிட உரிமை உண்டு. அதனால் தான், ஏற்கனவே ‘குடிஅரசு’ ஏட்டின் மூன்று தொகுதிகளையும், பெரியார் நூல்களையும், பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டு பரப்பி வருகிறது. இப்போது வீரமணி, ‘அறிவுசார் சொத்துடைமை’ கோரத் தொடங்கிவிட்டதால், அந்த முறை கேடான உரிமைகளை அவர் கோரக் கூடாது என்பதற்காகவும், பெரியார் நூல்களை வெளியிட விரும்பும் பலரும், இதன் காரணமாக தயங்கி ஒதுங்கி விடக் கூடாது என்பதற்கும் தான், கழகம், இந்தக் கோரிக்கையை முன் வைக்கிறது. பெரியாருடைய நூல்களை எவருக்கும், எந்த இழப்பீடும் தராமலேயே அரசு நாட்டுடைமை யாக்க முடியும். பெரியார் பெருந் தொண்டர் திருவாரூர் தங்கராசு அவர்களுக்கு அரசு பெரியார் விருது வழங்கும் நிகழ்ச்சியில் பேசிய - அன்றைய முதல்வர் கலைஞரும், பெரியார் நூல்களை நாட்டுடைமை யாக்குவதில் பிரச்சினையில்லை; அந்த உரிமை யாரிடம் இருக்கிறது என்பதே பிரச்சினை என்று கூறியதையும் நினைவுபடுத்துகிறோம்.

**வரப்பெற்றோம்**

### ‘சுயமரியாதை இயக்க வீராங்கனைகள்’

சுயமரியாதை இயக்க வீராங்கனைகள் 20 பேர் சுயமரியாதை மாநாடுகளில் ஆற்றிய உரைகள் - கட்டுரைகளை ‘குடிஅரசு’, ‘புதுவை முரசு’, ‘புரட்சி’ ஏடுகளிலிருந்து தொகுத்து முனைவர் வளர்மதி, சுயமரியாதை இயக்க வீராங்கனைகள் எனும் தலைப்பில் நூலாக தொகுத்துள்ளார். நூலின் இரண்டாம் பதிப்பை ‘கருப்புப் பிரதிகள்’ வெளியிட்டுள்ளது. குஞ்சிதம் குருசாமி, நீலாவதி இராமசுப்பிரமணியம், சிவகாசி சிதம்பரனார், அன்னபூரணி அம்மாள், ஆண்டாள் அம்மாள், கே.ஏ. ஜானகி, நானாவதி, இந்திராணி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் புரட்சிகரமான பேச்சும், எழுத்துகளும் இடம் பெற்றுள்ள இந்நூலுக்கு, முனைவர் மு. வளர்மதி எழுதியுள்ள விரிவான முன்னுரை, சுயமரியாதை இயக்க வீராங்கனைகள் பற்றிய ஏராளமான தகவல்களைத் தெரிவிக்கிறது. 1930, 31, 32 ஆம் ஆண்டுகளில், அதாவது சுயமரியாதை இயக்கம் தொடங்கிய முதல் 10 ஆண்டுகளில் - அந்த இயக்கம் உருவாக்கிய தாக்கத்தை இதில் காண முடிகிறது. பெரியாரியல்வாதிகள் அனைவரும் படிக்க வேண்டிய நூல்:

‘சுயமரியாதை இயக்க வீராங்கனைகள்’ - வெளியீடு: கருப்பு பிரதிகள், பி-74, பப்புமஸ்தான் தர்கா, இலாயிட்ஸ் சாலை, சென்னை - 5. பேசி : 9444272500. விலை : ரூ.55

REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# ‘வின்’ தொலைக்காட்சியில் நடந்த விவாதம்

பெரியார் நூல்களுக்கு - அறிவுசார் சொத்துடமை கோரி, கி.வீரமணி வெளியிட்டுள்ள அறிவிப்பு தொடர்பாக ‘வின்’ தொலைக்காட்சி ஏற்பாடு செய்திருந்த விவாதத்தில் எழுத்தாளர்கள் ஞாநி, சூரிய தீபன், ஓவியா, ஆகியோர் பங்கு கொண்டு, பெரியார் நூல்கள் நாட்டுடைமை யாக்கப்படவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திப் பேசினர். சி.ஆர்.பாஸ்கரன் நிகழ்ச்சியை வழி நடத்தினார். ஞாநி கூறுகையில், கல்கியின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டதால், அவர் எழுதிய ‘பொன்னியின் செல்வன்’ நாவல், புத்தக கண்காட்சியில் அனைத்து அரங்குகளிலும் விற்பனை யாகிறது. அதேபோல் பெரியார் நூல்களும் அனைத்து புத்தக விற்பனை நிலையங்களிலும் கிடைக்கக்கூடிய நிலை உருவாக வேண்டும். பெரியாரின் நூல்களை பரவலாகக் கொண்டு செல்ல முடியவில்லை. இந்த நிலையில், அதைக் கொண்டு செல்ல முன்வரும் பெரியார் திராவிடர் கழகத்தினரை ஏன் தடுக்க வேண்டும்? பெரியார் கொள்கைகளைப் பரப்பும் முயற்சியில் பல்வேறு இயக்கங்களும், பங்கேற்க முன் வந்தால், பெரியார் கொள்கைகளை இன்னும் வேகமாகப் பரப்ப முடியும்; அதைத் தடுப்பது சரியல்ல என்றார்.

திராவிடர் கழகத் துணைப் பொதுச் செயலாளராக உள்ள துரை. சந்திரசேகர், தொலைபேசி வழியாக நிகழ்ச்சியில் பேசுகையில், பெரியார் தனது எழுத்துகளுக்கு, பதிவு உரிமை பெற்றுள்ளார் என்றும், பெரியார் கருத்துகளை திருத்தி வெளியிட்டு விடக் கூடாது என்ற நோக்கத்தில் தான், தமது கழகம், மற்றவர்கள் வெளியிடுவதை எதிர்க்கிறது என்றும் கூறினார்.

அதற்கு சி.ஆர். பாஸ்கரன், “நூல்களை வெளியிடும் பெரியார் திராவிடர் கழகமும், பெரியார் அமைப்பு தானே; அவர்களே பெரியார் கொள்கைகளைத் திருத்தி வெளியிடுவார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?” என்று கேட்டார். பதிலளித்த துரை. சந்திரசேகர், “பெரியார் திராவிடர் கழகம் வெளியிடுவதை நாங்கள் எதிர்க்கவில்லை; மற்றவர்கள் வெளியிடுவதைத்தான் கூறுகிறோம்” என்று கூறினார். (துரை. சந்திரசேகர் தெரிவித்த கருத்து, அவரது கட்சித் தலைமையின் கருத்தா என்பது நமக்குத் தெரியாது) அப்படி ஏதேனும் பெரியார் கருத்து திருத்தி வெளியிடப்பட்டால், அதை சுட்டிக்காட்டி திருத்த வேண்டுமே தவிர, அதற்காக, எவருமே வெளியிடக் கூடாது என்று கூறுவது சரியல்ல என்று ஞாநி குறிப்பிட்டார்.

ஓவியா கூறுகையில், பெரியார் கருத்துகளை எவ்வளவோ பேர் திரித்து, பெரியாரை கொச்சைப்படுத்திய போதெல்லாம், இவர்கள் நீண்ட மவுனம் சாதித்தது ஏன் என்று கேட்டார். பெரியார் கருத்தை திரித்து பிரச்சாரம் செய்த போது மவுனம் சாதித்தவர்கள், இப்போது பெரியார் திராவிடர் கழகம், ‘குடிஅரசை’ வெளியிடும்போது, அதே போல் மவுனமாவது சாதித்திருக்கலாம். ஆனால் இப்போது மவுனத்தைக் கலைத்துவிட்டு, தடுக்க முன் வருகிறார்கள் என்றார்.

சூரிய தீபன் பேசுகையில், “பாரதியின் பாடல்கள் மார்வாடியிடம் அடகு வைக்கப்பட்டிருந்தது; அதை திரைப்பட அதிபர் ஏ.வி. மெய்யப்ப செட்டியார் மீட்டு, பாரதியின் பாடல்களை இசைத் தட்டுகளாக வெளியிட்டார். பிறகு வல்லிக்கண்ணன் போன்ற தமிழறிஞர்கள் முயற்சியால் நாடு முழுதும் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டு, அன்றைய முதல்வர் ஓமந்தூர் ராமசாமி அவர்களிடம் அளித்து, நாட்டுடைமையாக்க வலியுறுத்தினர். அப்போதுதான் பாரதி பாடல்கள் நாட்டுடைமையாக்கப் பட்டது. அதன் காரணமாகத்தான், இன்று அனைத்து பதிப்பகங்களும் பாரதி கவிதை நூல்களை வெளியிட்டு வருகின்றன” என்றார்.

பெரியாருடைய கருத்துகளை தவறாக திரித்து விடுவார்கள் என்று இப்போது கூறுகிற வீரமணி போன்றவர்கள்தான், பெரியார் கொள்கைக்கு நேர் எதிரான ஜெயலலிதாவோடு பெரியாரையும் இணைத்து படங்களை வெளியிட்டு, பெரியாரின் கொள்கை எதிரிகளோடு கைகோர்த்து நின்றார்கள் என்று சுட்டிக்காட்டினார்.

தொலைபேசி வழியாக பேசிய பெரியார் திராவிடர் கழகத் தோழர் சிற்பி ராசன் வீரமணி நடத்தும், நிறுவனங்கள், வர்த்தக மயமாகி விட்டன என்று கூறியதோடு, ஒரு கட்டத்தில் பெரியாரே, கல்வி நிறுவனங்களைத் தொடங்கக் கூடாது என்று முடிவெடுத்து - அரசிடம், கல்லூரி தொடங்குவதற்கான இடத்தையும், பணத்தையும் வழங்கினார். இப்படி முதல்வராக இருந்த பக்தவத்சலத்திடம், பெரியார் வழங்கிய இடம் நிதியால் உருவானதுதான். இப்போது திருச்சியிலுள்ள பெரியார் ஈ.வெ.ரா. அரசு கல்லூரி என்று குறிப்பிட்டார்.

விவாதத்தில் பங்கேற்ற அனைவருமே - பெரியார் திராவிடர் கழகத்தின் முயற்சியை ஆதரித்தும், பெரியார் நூல்களை நாட்டுடைமை யாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது. ✦

# ‘குறுந்தகடு’ எப்போது வந்தது?

*‘குடிஅரசு’ இதழ்களும்கூட, குறுந்தகடுகளாக வெளியிடப்பட்டுள்ளன. அப்படி வெளியிடப்பட்டவைகளை நூல்களாகத் தொகுத்து சிலர் வியாபாரம் செய்யப் பார்ப்பது அறிவு நாணயமான செயலா? - என்று ‘விடுதலை’யில் தி.க. பொதுச் செயலாளர் கலி. பூங்குன்றன் கேள்வி எழுப்பியுள்ளார்.*

பெரியார் திராவிடர் கழகம், 2003 ஆம் ஆண்டு ‘குடிஅரசு’ முதல் தொகுப்பை வெளியிட்ட பிறகு தான், மக்கள் மன்றத்தில் அம்பலமாகி விடுவோம் என்ற பதைபதைப்பில் - திராவிடர் கழகம் ‘குடிஅரசு’ குறுந் தகடுகளைக்கூட வெளியிட முன் வந்தது, இது, கலி.பூங்குன்றனுக்கு தெரியுமா? தெரியாதா?

அப்படி - குறுந்தகட்டை வெளியிட்டு, அடுத்து சில நாட்களிலேயே குறுந்தகட்டில் சில தவறுகள் நடந்துள்ளதால், அதை வாங்கியவர்கள், உடனே திருப்பித் தருமாறு, ‘விடுதலை’ யில் அறிவிப்பு வெளியிடப்பட்டதே; அது ‘விடுதலை’யின் ‘பொறுப்பு - ஆசிரியராக’ இருக்கும் கலி.பூங்குன்றனுக்கு தெரியாமல் போய் விட்டதா?

அப்படி - திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்று அறிவித்த பிறகு, இதுவரை, அந்தக் குறுந்தகடுகள், மீண்டும் விற்பனைக்கு கொண்டுவரப் பட்ட அறிவிப்பு ஏதும் ‘விடுதலை’யில் வெளிவரவில்லை என்பதும் அவருக்கு தெரியுமா? தெரியாதா?

விற்பனைக்கு வந்த ‘குடிஅரசு’ குறுந்தகடுகளை திரும்ப ஒப்படைக்கச் சொன்ன ஒரே பிரச்சார இயக்கம் - வீரமணியின் இயக்கமாகத்தான் இருக்க முடியும். உலகத்திலே தனித்தன்மை வாய்ந்த இயக்கம் இது ஒன்று தான் - என்று இதே கட்டுரையில் கலி. பூங்குன்றன் எழுதியதற்கான காரணம் இதுதான் போலிருக்கிறது.

‘குடிஅரசு’ குறுந்தகடுகளை திரும்ப ஒப்படைக்காதவர்கள், ‘கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய துரோகிகள்; கழகம் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கும்’ என்றுகூட இவர்கள் அறிவித்திருந்தாலும், வியப்பதற்கு இல்லை.

ஆதாரங்களையும், ஆவணங்களையும் கோப்பு கோப்புகளாக அடுக்கி வைத்துக் கொண்டு, அவ்வப்போது ‘தூசி தட்டி’ எடுத்து, சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல் வீரமணியை ‘ஜாக்கி’ வைத்து தூக்க முயற்சிக்கும், கலி. பூங்குன்றனாரின் ஆதாரக் கோப்புகளில் - இவைகள் வராமல் போய்விட்டதோ!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் அவருடைய ‘குடிஅரசு’ இதழை பெரியார் திராவிடர் கழகம் வெளியிடும் முயற்சிகளுக்கு நாங்களும், எங்கள் அமைப்பும் உறுதுணையாக இருப்போம் என்று உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்திற்கு கழகத்தின் செயற்குழு உறுப்பினர் தோழர் டேவிட் நன்றி கூறினார்.

## திருப்பூர்

திருப்பூரில் மாநகராட்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கழக செயற்குழு உறுப்பினர் அங்ககுமார் தலைமை தாங்கினார். ஆதித் தமிழ்ப் பேரவையின் இளைஞரணி செயலாளர் நீலவேந்தன், பெரியார் திராவிடர் கழக மாவட்டத் தலைவர் துரைசாமி, தென்மொழி துரையரசனார், அகிலன், முகில் ராசு, சரவணமூர்த்தி, பல்லடம், விஜயன் உட்பட பலர் கண்டன உரை நிகழ்த்தினர். இந்த ஆர்ப்பாட்ட நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

## தர்மபுரி

பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் 25.8.08 அன்று பகல் 12 மணிக்கு தருமபுரி ராஜகோபால் பூங்கா அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் முனி. ஆறுமுகம் தலைமை தாங்கினார். மாவட்ட அமைப்பாளர் வேடியப்பன் கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் கணேசன், நஞ்சப்பன், அ. அம்பிகா, மிசா சின்னசாமி, மதிவாணன், சின்னசாமி, மாது, பரமசிவம், கிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கோவை

பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் 25.8.08 மாலை 4 மணியளவில் கோவை செஞ்சிலுவை சங்கம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு பெரியார் திராவிடர் கழக பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமை தாங்கினார். இரா. அதியமான் (நிறுவன தலைவர், ஆதித் தமிழர் பேரவை), அனுபவ் ரவி (மாநகர செயலாளர், பாட்டாளி மக்கள் கட்சி), சுசி. கலையரசன் (மாவட்ட செயலாளர், விடுதலை சிறுத்தைகள்), வெ. ஆறுச்சாமி (செயற்குழு உறுப்பினர், பெரியார் தி.க.), ரவிக்குமார் (ஆதித் தமிழர் விடுதலை முன்னணி), ஆதித் தமிழர் மாணவர் பேரவை செயலாளர் வெண்மணி, புரட்சிகர மாணவர் முன்னணி முகிலன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (லிபரேசன்) தாமோதரன் ஆகியோர் கண்ட உரை நிகழ்த்தினர்.

மாநகர தலைவர் ம.ரே.ராசக்குமார், மேட்டுப்பாளையம் பா. இராமசந்திரன், அலுவலக பொறுப்பாளர் சா. கதிரவன், மாநகர அமைப்பாளர் இ.மு. சாஜித், தமிழ்நாடு மாணவர் கழகம் அமைப்பாளர் ந. பன்னீர்செல்வம் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர்.

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

- பெரியார் எந்த காலத்திலும், தனித் தமிழ்நாடு கேட்டதே இல்லை என்று வீரமணிகள் விஷ பிரச்சாரம் செய்ய முடியாது.
- கால வரிசைப்படி தொகுப்பு வெளியிடுவதை எதிர்க்கும் பின்னணி இது தான்.


கி.வீரமணி எப்போதும், கலைஞரிலிருந்து - மாயாவதி - சோனியா காந்தி வரை பாராட்டுகளை யும், ஆலோசனைகளையும் வண்டி வண்டியாக முன் வைத்து அறிக்கைகள் எழுதிக் குவிப்பதை தமிழ் கூறும் நல் உலகம் நன்றாகவே அறியும். ஆனால், ஒரே ஒரு பிரச்சினையில் மட்டும், இவர் ஆலோசனையைத் தாமாக முன் வந்து வைக்க தயாராகவே இல்லை. பெரியார் நூல்களை “அரசுடைமையாக்க வேண்டும் என்பதில் உங்களது கருத்து என்ன?” என்று ‘ஆனந்த விகடன்’ செய்தியாளர் கேட்ட கேள்விக்கு - கி. வீரமணி தந்துள்ள பதில், “அரசாங்கம் கேட்டால் அப்போது சொல்கிறோம்” என்பதாகும். அரசாங்கம் கேட்ட பிறகு, தனது ‘விலை மதிப்பு மிக்க’ ஆலோசனையை வழங்குவதற்காக, கி. வீரமணி அவர்கள் ஒதுக்கி வைத்திருக்கும் ஒரே பிரச்சினை, பெரியாரின் நூல்களை தேசவுடைமையாக்குதல் பற்றியது தான்.

“நாங்கள் திறந்த புத்தகம், எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும் வெளிப்படையாகவே செய்வோம்” என்று கி.வீரமணி அடிக்கடி உச்சரிக்கும் வசனத்துக்கு அர்த்தம் “கேட்டால் தான் சொல்வோம்” என்பது தானோ? ✦

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 28th August 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 ஆகஸ்டு 28, 2008 புரட்சி 7 முழக்கம் 35 விலை : ரூ.2.50


### பெரியார் பகுத்தறிவு வார ஏட்டைத் தொடங்கிய அதே ஆகஸ்ட் 26 ல்...

# மேட்டூரில் 'குடிஅரசு' 27 தொகுதிகளை கழகம் வெளியிட்டது!

## 'ரிவோல்ட்' ஆங்கில ஏட்டின் கட்டுரைத் தொகுப்புகளும் வெளியிடப்பட்டன!

### கழகத் தலைவர் வெளியிட 'குடிஅரசு'க்கு ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கிய இரா. நல்லத்தம்பி பெற்றுக் கொண்டார்







27 குடிஅரசு தொகுதிகளையும் - 'ரிவோல்ட்' ஆங்கில வார ஏட்டில் வெளி வந்த முக்கிய கட்டுரைத் தொகுப்புகளையும் - பெரியார் திராவிடர் கழக சார்பில் கடந்த ஆகஸ்ட் 26 ஆம் தேதி மேட்டூர் அணையில் வெளியிடப்பட்டது.

பெரியார் பேச்சு எழுத்துகளை தொகுத்து வெளியிடும் முயற்சிகளில் கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் பெரியார் திராவிடர் கழகம் ஈடுபட்டு வருகிறது. ஏற்கனவே 3 தொகுதி களை வெளியிட்டு முடிந்த நிலையில், இப்போது மேலும் ஏராளமான, விடுபட்டுப் போன பெரியார் எழுத்து சிந்தனைகளைத் தேடிப் பிடித்து அவைகளைத் தொகுத்து 27 தொகுதிகளாக வெளியிட்டுள்ளது.

பெரியாரின் 'குடிஅரசு'க்கு அரசு நெருக் கடி வந்த போது, 'புரட்சி', 'பகுத்தறிவு' ஏடுகளையும் பெரியார் நடத்தினார். அப்படி 'பகுத்தறிவு' வார ஏட்டை பெரியார் தொடங்கிய நாள் 26.8.1934 ஆகும். எனவே வரலாற்றுக் குறிப்புள்ள நாளான ஆகஸ்டு 26 ஆம் தேதியிலேயே 'குடிஅரசு' - 'ரிவோல்ட்' உள்ளிட்ட 28 தொகுதிகளை யும் (1925 முதல் 1938 வரை) கழகம் வெளியிட முடிவு செய்தது. வெளியீட்டு விழா, மேட்டூரில் ஆகஸ்டு 26 அன்று பகல் 11 மணியளவில் நடைபெற்றது.

'குடிஅரசு', 'ரிவோல்ட்' தொகுப்புகளை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளி யிட, மேட்டூர் கழக ஆதரவாளரான தோழர் இரா. நல்லத்தம்பி பெற்றுக் கொண்டார். மேட்டூர் தோழர் இரா. நல்லத்தம்பி 'குடி அரசு' வெளியீட்டுக்காக ஆர்வத்துடன் ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை அளித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளியீட்டு விழாவில், கழகத்தின் பொதுச் செயலாளர்கள் கோவை இராம கிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், சேலம் மாவட்டக் கழகத் தலைவர் மார்ட் டின், மாவட்ட செயலாளர் சக்திவேலு, அமைப்பாளர் முல்லைவேந்தன், சென்னை மாவட்டக் கழகத் தலைவர் தபசி. குமரன், திண்டுக்கல் தாமரைக் கண்ணன், திருப்பூர் இராவணன், குடிஅரசு தொகுப்பு பணி களின் ஒருங்கிணைப்பாளர் ப.தமிழ்க்குரிசில் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர்

வெளியிடப்பட்ட 'குடிஅரசு', 'ரிவோல்ட்' தொகுப்புகள் விற்பனைக்கு - முகவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுவிட்டது.

*(விழாவில் கழகத் தலைவர், பொதுச்செயலாளர்கள் உரை அடுத்த இதழில் வெளிவரும்.)*

# பெரியாரின் சமூகப் புரட்சி முடிந்துவிட்டதா?

"ஒரு சமுதாய இயக்கம் இப்படி **அளவுக்கு மீறி** கருணாநிதியை ஆதரிக்கிறது என்ற குற்றச்சாட்டுக்கு உங்கள் பதில் என்ன?" என்று 'ஆனந்த விகடன்' செய்தியாளர் – கி.வீரமணியிடம் கேட்கிறார். இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய சொற்றொடர் 'அளவுக்கு மீறி' என்பதாகும். ஆனால் அதற்குரிய அழுத்தம் பற்றி கி.வீரமணி கவலைப்படவே இல்லை. 'அளவுக்கு மீறி' என்ற வார்த்தையை அப்படியே அனாயசமாக ஒதுக்கித் தள்ளிவிட்டு, 'கலைஞருக்கான ஆதரவு' என்று, தனக்காக கேள்வியை திருத்திக் கொண்டு இப்படி பதில் கூறுகிறார், "கலைஞரை ஆதரிப்பது ஒரு குற்றமாகச் சொல்லப்படுமானால் அந்தக் குற்றத்தைப் பெருமையுடன் தொடர்ந்து செய்வேன்" என்கிறார், கி.வீரமணி.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல் கட்சி கூட, தங்கள் கூட்டணி கட்சிகளை ஆதரிப்பதா, விலக்குவதா என்பதை செயற்குழுவைக் கூட்டி தான் முடிவு செய்கிறது. ஆனால், பெரியார் கொள்கை களுக்காக அந்தக் கொள்கைகளை நம்பி வந்துள்ள தொண்டர்களைப் பற்றி எல்லாம் கி.வீரமணி கவலைப்படவே இல்லை. கொள்கை அடிப்படையில் ஆதரவும், எதிர்ப்பும் இருக்கும் என்று வழமையான வசனத்தையும் காற்றில் பறக்கவிட்டு, தனது விருப்பு வெறுப்புகளை முன் வைத்து, 'ஆதரவு' எனும் நிரப்பப்படாத காசோலையை கையெழுத் திட்டு கலைஞருக்கு தரத் தயாராகவே இருக்கிறார்.

'சமூகநீதி காத்த வீராங்கனை' ஜெயலலிதா கி.வீரமணிக்கு, பெரியார் விருது வழங்கும்போது, எனது ஆயுள் உள்ள வரை உங்களுக்கு ஆதரவாக இருப்பேன் என்று உறுதி பிரகடனத்தை வாசித்தவரும், இதே வீரமணி தான்!, இது கலைஞருக்கு தெரியாதா என்ன?

"பெரியார் வாழ்நாளில் நிறைவேற்ற நினைத்த பல்வேறு சமூகப் புரட்சிகளையும் செய்து காட்டியவர் கலைஞர்" என்கிறார் வீரமணி. ஆக, வீரமணியின் கருத்தின்படி இனி பெரியார், இயக்கத்துக்கே தேவை இல்லை.

சூத்திரர் இழிவு நீங்கிவிட்டது;

பார்ப்பனர்கள், பூணூலை அறுத்தெறிந்து விட்டனர்;

சாதியமைப்பு தகர்ந்துவிட்டது;

மூடநம்பிக்கைகள் எல்லாம் ஒழிந்து, மக்கள் முழு பகுத்தறிவாளர்களாகிவிட்டனர்;

குலத் தொழில்கள் முற்றாக மறைந்து விட்டன;

பெண்கள் சம உரிமை பெற்று விட்டார்கள்;

தீண்டாமை என்பது கனவாகிவிட்டது; சேரிகள் மறைந்து விட்டன;

தீண்டாமைக் கொடுமைகள் முடிவுக்கு வந்தவிட்டன;

இரட்டை தம்ளர்களோ, தனிச் சுடுகாடுகளோ கிடையாது;

இந்திய தேசியப் பார்ப்பனப் பிடியிலிருந்து – தமிழர்கள் விடுதலை பெற்று – தாய்நாட்டில் உலவிக் கொண்டிருக்கிறார்கள்;

இனி நிறைவேற்றப்பட வேண்டிய பெரியார் கொள்கை வேறு என்ன இருக்கிறது?

வீரமணியாரின் பார்வையில் இனி எதுவுமே இல்லை; சமூகப் புரட்சியே நடந்து முடிந்துவிட்டது. இதை அவரது கட்சியிலுள்ள 'கட்டுப்பாடு மிக்க' பெரியார் தொண்டர்கள் ஒவ்வொருவரும் 'கட்டுப்பாட்டுடன்' நம்ப வேண்டும்; இல்லாவிடில் 'துரோகிகள்' பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்!

23.6.08 அன்று சேலத்தில் நடந்த **கு.பாரதி தேவி– பா. செந்தில் குமார் வாழ்க்கை துணைஏற்பு விழா**வில் கழக ஏட்டுக்கு அளித்த நன்கொடை ரூ.1000/- நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

# தொகுப்பாக வெளிவருவதைக் கண்டு மிரளுவது ஏன்?

***கேள்வி :*** பெரியாரின் கருத்துகளும், கொள்கை களும் பரவ வேண்டும் என்பதுதான் நோக்கம் என்றால், மற்றவர்களும், அதை வெளியிடுவதைத் தடுக்க வேண்டிய அவசியம் என்ன?

***கி. வீரமணி :*** பெரியாரின் எழுத்துக்களைப் பதிப்பிக்கிறோம் என்ற போர்வையில், அவரது எழுத்துக்களைச் சிலர் மாற்றிவிடக்கூடிய ஆபத்து இருக்கிறது. தவிர மொத்தமாகப் பதிப்பிக்கும்போது, கொள்கைக் குழப்பங்கள் ஏற்படும். அதனால் தான் இந்த அறிவிப்பு.

***– 'ஆனந்த விகடன்'***
***(கி.வீரமணி பேட்டி) 27.8.2008***

ஆக, பெரியார் கருத்துகளை மாற்றி, சிதைத்து விடக்கூடாது என்பதால், பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் மட்டுமே, இதை வெளியிடும் உரிமைக் கோருவதாக கி.வீரமணி கூறுகிறார். இதன் மூலம், அரசு பெரியார் நூல்களை நாட்டுடைமை யாக்குவதற்கு, தனது மறைமுக எதிர்ப்பையும் வெளிப்படுத்தியிருக்கிறார். காரணம், அரசு நாட்டுடைமையாக்கிவிட்டால், பெரியார் நூல்களை வெளியிடும் உரிமை, எல்லோருக்கும் கிடைத்து விடுமே! இந்த நிலையில் பெரியாருடைய நூல்களை நாட்டுமையாக்குவதை எதிர்க்கிறோம் என்று வெளிப்படையாகக் கூற வேண்டியது தானே! அந்தக் கேள்வியை எழுப்பும் போது, 'அது அரசாங்கம் எடுக்க வேண்டிய முடிவு' என்கிறார். அரசாங்கம் அப்படி ஒரு முடிவை எடுத்தால், அப்போது, பெரியார் கொள்கைகளை பலரும் வெளியிட அனுமதிக்கக் கூடாது; பெரியாரின் கருத்துகளை திருத்தி விடுவார்கள் என்று இவர் அப்போதும் சுட்டிக் காட்டுவாரா?

அண்ணாவின் நூல்கள் கூட நாட்டுடைமை யாக்கப்பட்டுள்ளன. அப்படியானால், அண்ணாவின் கருத்துகளைத் திருத்தி நூல்கள் வந்து கொண் டிருக்கிறதா? அல்லது அண்ணாவின் கருத்துகளை திருத்தி விடுவார்கள் என்று கூறி, அண்ணாவின் நூல்களை நாட்டுடைமையாக்காமல் போய் விட்டனவா? இரண்டுமே நடக்கவில்லை என்பதே உண்மை. அண்ணாவின் ஆரிய மாயை, தீ பரவட்டும், நிலையும் நினைப்பும் என்று பல புரட்சிகரமான நூல்கள் பல்வேறு பதிப்பகங்களால் வெளியிடப் பட்டு பரப்பப்பட்டு வருகின்றன.

அப்படி கருத்துத் திரிபுகள், வந்தால், அதை சுட்டிக்காட்டி திருத்துவதே பெரியார் இயக்கங் களின் கடமைகளில் ஒன்றாகும். வால்மீகி ராமா யணத்தின் ஆபாசங்களை, தந்தை பெரியார் தோலுரிக்கத் தொடங்கிய பிறகு, அந்த ஆபாசங் களை நீக்கிவிட்டு, அதன் பிறகு, இராமாயண பதிப்புகள் வெளிவரத் தொடங்கியபோது, பெரி யாரே அதை சுட்டிக்காட்டி அம்பலப்படுத்தி வந்தார்.

கி.வீரமணியின் வாதப்படி, தலைவர்களின் நூல்கள் அந்தந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் தான் வெளியிட முடியும். இதிலாவது, வீரமணிக்கு நேர்மையிருந்தால், 'நாட்டுடையாக்குவதே கூடாது' என்ற கருத்தை முன் வைத்திருக்க வேண்டாமா? எப்போதாவது முன் வைத்திருக்கிறாரா? மாறாக, கலைஞர் வேறு பலரின் நூல்களை நாட்டுடைமை யாக்கும் அறிவிப்புகளை வெளியிட்ட போதெல்லாம் இவர் பாராட்டி வரவேற்றவர் தானே?

எந்தக் கருத்தையும், ஒளிவு மறைவின்றி, வெளிப் படையாக எடுத்துச் சொல்வதுதான் பெரியார் அணுகுமுறை; உள்ளத்துக்குள் ஒரு கருத்தை ஒளித்து வைத்துக் கொண்டு, வெளிப்படுத்திவிடக் கூடாது என்று மறைக்கும் 'பார்ப்பனிய சூழ்ச்சிகள்', பெரியாரிடம் இருந்ததே கிடையாது. அதனால் தான், அவர் பெரியார். ஆனால் வீரமணியின் சிந்தனைக்குள் 'பார்ப்பனியம்' பதுங்கி நிற்கிறது. திரை மறைவு பேச்சுகள், சூழ்ச்சித் திட்டங்கள், வஞ்சக வலைகள் என்ற திசையில், அவர் பயணிப்பதால், அவரிடம் நேர்மையான, உறுதியான பதில்கள் வெளிப்படாமல் போய்விடுகின்றன. 'பெரியாரின் எழுத்துகளை வேறு எவரும் பதிப்பித்துக் கருத்துகளை மாற்றி விடுவார்கள்' என்று ஒரு பக்கம் கூறிக் கொண்டு, 'ஆனால் தேச உடைமையாக்குவது அரசின் முடிவு' என்று, பதுங்கிக் கொள்வது ஏன் பெரியாரின் நூல்களை நாட்டுடைமையாக்குவதை எதிர்க்கிறோம் என்று நாணயமாக அறிவிக்க மறுப்பது ஏன்? 'அறிவு நாணயம்' பற்றி அடுத்தவர்களுக்கு 'அறிவுரை' வழங்கும் கி.வீரமணியின், அறிவு நாணயம் இதுதானா? பெரியார் நூல்களை நாட்டுடைமை யாக்கக்கூடாது என்று அறிவித்தால் - மக்கள் மன்றத்தில் அம்பலமாகிவிடுவோம் என்பதால் தானே, இந்த கபட நாடகம்!

இதில் மறைந்திருக்கும் உண்மை என்ன? தமிழக அரசிடம், "தேசவுடைமையாக்கக் கூடாது என்று, ரகசியமாகக் கூறி, காரியத்தை சாதித்துக் கொள்வேன்; ஆனால் அதை வெளிப்படுத்த மாட்டேன்" அப்படிக் கூறிவிட்டால் மக்கள் மன்றத்தில் தனது முகத்திரை கிழிந்துவிடும் என்பது தானே? இப்படிப்பட்ட சூதுமதியாளர்கள், ஒளிவுமறைவற்ற, சமரசமற்ற வெளிப்படையான, பெரியாரியல் சிந்தனைகளை நேர்மையாகப் பரப்புவார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும் என்ற கேள்வியை தமிழின உணர்வாளர்கள் சிந்தனைக்கு வைக்கிறோம்.

கி.வீரமணி அதே பேட்டியில் தெரிவித்த மற்றொரு கருத்தையும் முக்கியமாக சுட்டிக் காட்ட வேண்டும். "பெரியாரின் கருத்துகளை மொத்தமாகப் பதிப்பிக்கும்போது கொள்கைக் குழப்பங்கள் ஏற்பட்டு விடும். அதனால் தான் இந்த அறிவிப்பு" என்று கூறியுள்ளார்.

1925 ஆம் ஆண்டிலிருந்து 1938 ஆம் ஆண்டு வரை பெரியார் 'குடிஅரசில்' எழுதியவற்றையும், அவரது பேச்சுக்களையும், காலவரிசைப்படி தொகுத்து வெளியிடும் முயற்சியைத்தான் 'மொத்தமாகப் பதிப்பிக்கும் ஆபத்து' என்கிறார் கி.வீரமணி. பெரியாரின் எழுத்துக்களை அப்படியே உள்ளது உள்ளபடியே வெளியிடாது மாற்றி விடுவார்களே என்று வாதிம் அதே வீரமணி தான், பெரியாரின் எழுத்துக்களை கால வரிசைப்படி தொகுத்து மொத்தமாக வெளியிடு வதால் 'கொள்கைக் குழப்பம்' ஏற்பட்டு விடும் என்று கூறுவது, அவரது முரண்பாட்டையே காட்டுகிறது.

ஆக, பெரியாரின் கருத்துகளை கால வரிசைப்படி தொகுத்தாலே அது கொள்கைக் குழப்பமாகிவிடும் என்று கூறுவதன் மூலம், பெரியாருக்கே குழப்பவாதி என்ற முத்திரை குத்த விரும்புகிறாரா என்பது நமக்குப் புரியவில்லை. காலவரிசைப்படி, பெரியாரின் கருத்துகளைத் தொகுப்பதன் அடிப்படையான நோக்கமே - ஒவ்வொரு சமூக, அரசியல், சூழல்களில் பெரியார் எடுத்த நிலைப்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கும், தெரிந்து கொள்வதற்கும் தான். எத்தகைய அக-புறச் சூழல்களில் பெரியார் எத்தகைய பிரச்சினைக்கு முதன்மை தந்து, இயக்கத்தை வழி நடத்தினார் என்ற உண்மைகளை கால வரிசைப்படி வெளியிடுவதன் வழியாக நாட்டுக்கு விளக்குவதைக் கண்டு - கி. வீரமணிகள் ஏன் பயப்படுகிறார்கள்?

பயப்படுவதற்கு காரணம் என்ன தெரியுமா? வீரமணியின் கொள்கைக் குழப்பங்களை அம்பலப்படுத்திவிடும். இதுதான் உண்மை. அதனால் தான், "கடவுள், மதம், பெண்ணுரிமை, சாதி, தீண்டாமை" ஆகிய தலைப்புகளின் கீழ் பெரியார் சிந்தனைகளை தங்கள் அமைப்பு தொகுத்து வெளியிடுவதாக - கி. வீரமணி, இதே பேட்டியில் கூறியுள்ளார். ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலும், தி.மு.க. ஆட்சி காலத்திலும் கி. வீரமணி, எந்தெந்தக் கருத்துகளை முன் வைத்தார்; அறிக்கைகளை வெளியிட்டார்; என்று கால வரிசைப்படி இவரது கருத்துகளைத்தொகுக்க ஆரம்பித்தால், இவரது முகத்திரை சுக்கு நூறாக கிழிந்து போய்விடும். அந்த அச்சமும், நடுக்கமும் தான் பெரியாரின் கருத்துகளை கால வரிசைப்படி தொகுத்துவிடக் கூடாது என்ற பதைபதைப்பிலும், பதட்டத்திலும், இவரைக் கொண்டு போய் நிறுத்தி வைத்துள்ளது.

காலவரிசைப்படி 'குடிஅரசு' தொகுப்புகள் வரும்போது -

- பெரியாரின் ஊசலாட்டமற்ற கொள்கை உறுதி புலனாகும்.
- தான் ஆதரித்தவர்களையேகூட - கண்மூடித் தனமாக ஆதரிக்காமல், குறைகளை துணிவோடு சுட்டிக்காட்டினார், என்ற உண்மைகள் வெளிச்சத்துக்கு வரும்.
- பெரியாரின் எதிர்ப்பும், ஆதரவும், நிபந்தனை களுக்கு உட்பட்டே இருந்திருக்கிறது என்பது - புரிய ஆரம்பித்துவிடும்.
- அதிகார அமைப்புகளையும், இந்திய தேசியத்தை யும், பெரியார் உறுதியோடு எதிர்த்தது வெளிச்ச மாகும்.

**4 ஆம் பக்கம்**

# இதயத்தில் இடம் பிடிக்க இதோ சில முழக்கங்கள்!

சென்னையில் திராவிடர் கழகம் மாநாடு ஒன்றை நடத்தப் போவதாகவும், அதற்கு எல்லோரும் திரண்டு வரவேண்டும் என்றும், அக்கழகத்தின் தலைமையும், விடுதலை எழுத்தாளர்களும், அக் கழகத்தினருக்கு உணர்ச்சியுடன் அழைப்பு விடுத்து வருகிறார்கள். வரக்கூடிய தொண்டர்கள் கீழ்க்கண்ட முழக்கங்களை வீரத்துடன் முழங்கி வரலாம் என்பது எமது பணிவான ஆலோசனை. விருப்பமுள்ள உறுதி யான கழகக் கட்டுப்பாட்டாளர்கள் இதை பயன் படுத்தலாம். அப்படிப் பயன்படுத்தினால் - தமிழர் தலைவர் இதயத்திலே நீங்காத இடம் கிடைக்கும் என்பதை மட்டும் சொல்லி வைக்கிறோம். விருப்ப மில்லாதவர்கள், வேண்டுமானால் ஒதுக்கித் தள்ளி விடலாம். அது அவர்களின் உரிமை; முழங்கலாமா?

*காப்போம்; காப்போம்;*
*பெரியார் கொள்கைகளை*
*கட்டுப்பாட்டுடன் காப்போம்!*
*கட்டுக்குள் அடக்கிக் காப்போம் –*
*பெரியார் திடலுக்குள் அடக்கிக் காப்போம்!*

*எச்சரிக்கை; எச்சரிக்கை*
*துரோகிகளே எச்சரிக்கை;*
*'குடிஅரசை' பரப்பும்*
*துரோகிகளே எச்சரிக்கை!*
*பெரியார் – 'குடிஅரசை'*
*பரப்பும் துரோகிகளே எச்சரிக்கை!*

*இந்தப் படை போதுமா?*
*இன்னும் கொஞ்சம்*
*வேண்டுமா? 'குடிஅரசை'*
*முடக்கிப் போட*
*இந்தப் படை போதுமா,*
*இன்னும் கொஞ்சம் வேண்டுமா?*

*பொறுப்போம்; மீறினால்*
*தடுத்திடுவோம் 'குடிஅரசை'*
*விடமாட்டோம்; விடமாட்டோம்;*
*பெரியாரின் எழுத்துக்களை*
*ஆண்டுவாரியாக தொகுக்க*
*விடமாட்டோம்; விடமாட்டோம்;*
*எங்கள் தலைவர் விடமாட்டார்!*

*இந்த இயக்கம் எங்கள் இயக்கம்;*
*எங்கள் கொள்கை*
*வாழ்வியல் கொள்கை!*
*இங்கே ஏதடா, பெரியார் கொள்கை;*
*தனியுடைமை; தனியுடைமை;*
*பெரியார் நூல்கள் – எங்கள்*
*தனியுடைமை; பரப்ப முயன்றால்*
*பாயும் சட்டம்!*

*முறியடிப்போம்; முறியடிப்போம்;*
*பெரியார் நூல்கள்*
*நாட்டுடைமையாவதை*
*முறியடிப்போம்; முறியடிப்போம்!*
*சுயமரியாதை நிறுவனம் வாழ்க!*
*ஆயுள் செயலாளர்*
*அய்யா வீரமணி வாழ்க! வாழ்க!*

*எங்கள் சொந்தம்; எங்கள் சொந்தம்;*
*பெரியார் சொத்துக்கள் எங்கள் சொந்தம்!*
*பெரியார் நூல்களும் எமக்கே சொந்தம்!*
*உலக மயமாக்குவோம்; உலகமயமாக்குவோம்;*
*பெரியார் நூல்களுக்கு*
*காப்புரிமை பெற்று*
*பெரியாரை உலகமயமாக்குவோம்!*

*பெரியாரின் குடிஅரசைப் பரப்பும்*
*பெரியார் தி.க. ஒழிக!*
*பெரியார் நூல்களை மக்களிடம் சேர்க்கும்*
*பெரியார் தி.க.வை வீழ்த்துவோம்!*
*அய்யா வீரமணியின் அடிச்சுவட்டில்*
*அய்யா பெரியாரை முடக்கிடுவோம்!*

*உறுதியேற்போம்; உறுதியேற்போம்;*
*கட்டுப்பாடு காக்க உறுதியேற்போம்!*
*குடிஅரசை முடக்கிப் போட்டு*
*கட்டுப்பாடு காக்க உறுதியேற்போம்;*

'விடுதலை'யில் வெளிவந்து கொண்டிருக்கும் கட்டுரையாளர்களின் சிந்தனை வழியில் உருவாக்கிய முழக்கங்களைத்தான் பணிவுடன் சமர்ப்பித்துள் ளோம். துரோகிப் பட்டியலில் இடம் பிடிக்க விரும் பாத எவரும் - இதை பயன்படுத்தி, உலகத் தலைவரின் இதயத்தில் இடம் பிடிக்க முன்வருவார்களாக!

**– கோடங்குடி மாரிமுத்து**

## கி. வீரமணியின் வாழ்வியல் சிந்தனை: மனம் குமுறுகிறார், ஒரு பெரியார் தொண்டர்!

*(உள்ளக்குமுறலுடன் ஒரு நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த பெரியார் பெருந்தொண்டர் எழுதிய கடிதம்)*

மனித சமுதாயம் தோன்றிய காலத்திலேயிருந்தே வாழ்வியல் முறையில் மாற்றங்களை சந்தித்து வருகிறது - அறிவு வளர்ச்சிக்கேற்ப இலக்கியங்கள் உருவாக்கப்பட்டு, வாழ்வியல் முறை நெறிபடுத்தப்படுகின்றன. தமிழிலக்கியங்களில் முக்கியமாக திருக்குறளில் வாழ்வியல் நெறி முறைகள் வகுக்கப்பட்டுள்ளன - என்றாலும் சமுதாயத்தில், ஏற்றத் தாழ்வுகளும், பாகுபாடுகளும் நிறைந்து காணப்படுகின்றன - சம உரிமை பெற்று வாழும் சமுதாயத்தில் மட்டுமே தூய வாழ்வில் நெறிகள் விதைக்கப்படும்போது சமுதாயம் விழிப்புணர்ச்சி பெற்று வளர்ச்சி பெறும் அனைவருக்கும் பாகுபாடின்றி அதன் வளர்ச்சிப் பயன் கிட்டும்.

இந்தியச் சமுதாயம் குறிப்பாக தமிழ்ச் சமுதாயம், சூழ்ச்சி, வஞ்சகம் ஆகியவற்றால் தாக்குண்டு, ஊனப்பட்டு கிடக்கின்றது. ஆரியர்களின் ஆக்டோபஸ் பிடியிலிருந்து விடுபட முடியாமல் திராவிட இனம் அடிமைப்பட்டு கிடக்கிறது. இந்த வன்கொடுமையை கண்ட பெரியார் வெகுண்டெழுந்து இந்த மக்களை சூத்திரர்களாக சாகவிட மாட்டேன் என சூளுரைத்து பெரும் புரட்சியை ஏற்படுத்தினார். இதனையே தனது வாழ்க்கையின் லட்சியம் என ஆக்கிக்கொண்டார். பெரியார் மறைந்து 34 ஆண்டுகள் ஓடிவிட்டன. பெரியார் தொண்டர்கள் மேலும் கடுமையாக பணியாற்ற வேண்டிய காலகட்டம் இது. இப்போது நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? பெரியாரின் புரட்சி சிந்தனைகள் வெகுவாக மறைக்கப்பட்டு வருகின்றன. இளைஞர்கள் திசை திருப்பிவிடப்படுகின்றனர். புரட்சி சிந்தனைகள் சிதைக்கப்படுகின்றன. இளைஞர்கள் நுகர்வோர் கலாச்சார போதையில் மயங்கி கிடக்கின்றனர்.

பெரியாருக்கு வாரிசுகளாக்கப்பட்டவர்கள் பெரியாரின் கொள்கைகளை மென்மைப்படுத்தும் வழி முறைகளை செய்து கொண்டிருக்கிறார்கள். இளைஞர்களிடத்தில் புரட்சியை தூண்ட வேண்டியவர்கள், வாழ்வியல் வேதாந்தத்தை போதிக்க புறப்பட்டு விட்டார்கள். அந்த வேலையைத் தானே மடத்து சந்நிதானங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வேலையை இவர்கள் ஏன் தத்தெடுத்துக் கொள்ள வேண்டும்?

பெரியாரின் வாரிசுகளாக்கப்பட்டவர்கள் வெளியிடும் 'வாழ்வியல்' புத்தகங்களை இப்போது மடத்து தம்பிரான்கள், பக்தர்களுக்கு கொடுத்து ஆசி வழங்கி கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பெரியார் பெயரில் புதிதாக ஒரு மடம் கட்டப்பட்டு, புதிய தம்பிரான்கள் உருவாகிறார்கள்! தமிழ்ச் சமுதாயம் இவர்களை மன்னிக்குமா?

*(குறிப்பு: 'வீரமணியின் வாழ்வியல் சிந்தனை' நூல்களை மொத்தமாக வாங்கி, மதுரை மடாதிபதி, தமது மடத்தின் முத்திரையைப் பதித்து, தன்னிடம் ஆசி கேட்டு வரும், சைவர்களுக்கு வழங்கி வருவதையே இந்த பெரியார் தொண்டர் குறிப்பிடுகிறார்.)*

## மறந்தவரும் – மறக்காதவர்களும்

"டெஸ்மா சட்டம் மூலமாக, பல்லாயிரக் கணக்கான அரசு ஊழியர்களை ஜெயலலிதா பழி வாங்கியதையும் கம்யூனிஸ்ட்டுகள் மறந்திருக்க மாட்டார்கள்."

**– ஆனந்த விகடன் பேட்டியில் கி.வீரமணி.**

ஆமாம்! கம்யூனிஸ்ட்டுகள் நிச்சயம் மறந்திருக்க மாட்டார்கள் தான்! ஆனால், அந்த டெஸ்மா சட்டத்தால் தமிழக அரசு ஊழியர்களை ஜெயலலிதா வேட்டையாடிய போது, ஜெயலலிதாவின் துணிவின் வீரத்தையும் பாராட்டி, பக்கம் பக்கமாக பாராட்டு அறிக்கைகள் விட்டதை, கி. வீரமணி தான் மறந்து விட்டார்! என்ன செய்வது?

## அப்பா – மகன்

### 'மானமிகு' மனுதர்மம்

**மகன் :** வேதங்கள் "பிராமணர்களுக்கு" மட்டுமே உரிமை என்றும், அதை 'சூத்திரர்' பயன்படுத்தினால், நாக்கை வெட்டி, காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் என்றும் 'மனுதர்மம்' தானே கூறுகிறது, அப்பா?

**அப்பா :** ஆமாம், மகனே. அதில் என்ன சந்தேகம்.

**மகன் :** அதே போல், பெரியாரின் நூல்கள் – தங்களுக்கு மட்டுமே சொந்தம், அதை மற்றவர்கள் வெளியிடுவது சட்டப்படி குற்றம் என்று, வீரமணி கூறுகிறாரே; இது வீரமணியின் 'மனு தர்மா', அப்பா?

**அப்பா :** இது 'மானமிகு' மனுதர்மம் மகனே!

### கேள்வியும் பதிலும்

**கேள்வி:** பெரியார் நூல்களை நாட்டுடைமை யாக்க வேண்டும் என்று குரல் கொடுப்பவர்கள், நாட்டுடைமையாகா நிலையில் அவைகளை வெளியிடுவது சட்ட விரோதம் என்று ஒப்புக் கொள்வதாகத் தானே பொருள் என்று 'விடுதலை'யில் கலி. பூங்குன்றன் எழுதியுள்ளாரே!

**பதில் :** நாட்டுடைமையாக்கினால் தான் - பெரியார் நூல்களை வெளியிட முடியும் என்பது பெரியார் திராவிடர் கழகத்தின் கருத்தல்ல; நாட்டுடைமை யாகாமலே வெளியிட உரிமை உண்டு. அதனால் தான், ஏற்கனவே 'குடிஅரசு' ஏட்டின் மூன்று தொகுதிகளையும், பெரியார் நூல்களையும், பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டு பரப்பி வருகிறது. இப்போது வீரமணி, 'அறிவுசார் சொத்துடைமை' கோரத் தொடங்கிவிட்டதால், அந்த முறை கேடான உரிமைகளை அவர் கோரக் கூடாது என்பதற்காகவும், பெரியார் நூல்களை வெளியிட விரும்பும் பலரும், இதன் காரணமாக தயங்கி ஒதுங்கி விடக் கூடாது என்பதற்கும் தான், கழகம், இந்தக் கோரிக்கையை முன் வைக்கிறது. பெரியாருடைய நூல்களை எவருக்கும், எந்த இழப்பீடும் தராமலேயே அரசு நாட்டுடைமை யாக்க முடியும். பெரியார் பெரும் தொண்டர் திருவாரூர் தங்கராசு அவர்களுக்கு அரசு பெரியார் விருது வழங்கும் நிகழ்ச்சியில் பேசிய - அன்றைய முதல்வர் கலைஞரும், பெரியார் நூல்களை நாட்டுடைமை யாக்குவதில் பிரச்சினையில்லை; அந்த உரிமை யாரிடம் இருக்கிறது என்பதே பிரச்சினை என்று கூறியதையும் நினைவுபடுத்துகிறோம்.

வரப்பெற்றோம்

### 'சுயமரியாதை இயக்க வீராங்கனைகள்'

சுயமரியாதை இயக்க வீராங்கனைகள் 20 பேர் சுயமரியாதை மாநாடுகளில் ஆற்றிய உரைகள் - கட்டுரைகளை 'குடிஅரசு', 'புதுவை முரசு', 'புரட்சி' ஏடுகளிலிருந்து தொகுத்து முனைவர் வளர்மதி, சுயமரியாதை இயக்க வீராங்கனைகள் எனும் தலைப்பில் நூலாக தொகுத்துள்ளார். நூலின் இரண்டாம் பதிப்பை 'கருப்புப் பிரதிகள்' வெளியிட்டுள்ளது. குஞ்சிதம் குருசாமி, நீலாவதி இராமசுப்பிரமணியம், சிவகாசி சிதம்பரனார், அன்னபூரணி அம்மாள், ஆண்டாள் அம்மாள், கே.ஏ. ஜானகி, நானாவதி, இந்திராணி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் புரட்சிகரமான பேச்சும், எழுத்துகளும் இடம் பெற்றுள்ள இந்நூலுக்கு, முனைவர் மு. வளர்மதி எழுதியுள்ள விரிவான முன்னுரை, சுயமரியாதை இயக்க வீராங்கனைகள் பற்றிய ஏராளமான தகவல்களைத் தெரிவிக்கிறது. 1930, 31, 32 ஆம் ஆண்டுகளில், அதாவது சுயமரியாதை இயக்கம் தொடங்கிய முதல் 10 ஆண்டுகளில் - அந்த இயக்கம் உருவாக்கிய தாக்கத்தை இதில் காண முடிகிறது. பெரியாரியல்வாதிகள் அனைவரும் படிக்க வேண்டிய நூல்:

'சுயமரியாதை இயக்க வீராங்கனைகள்' - வெளியீடு: கருப்பு பிரதிகள், பி-74, பப்புமஸ்தான் தர்கா, இலாயிட்ஸ் சாலை, சென்னை - 5. பேசி : 9444272500. விலை : ரூ.55

# ‘வின்’ தொலைக்காட்சியில் நடந்த விவாதம்

பெரியார் நூல்களுக்கு - அறிவுசார் சொத்துடமை கோரி, கி.வீரமணி வெளியிட்டுள்ள அறிவிப்பு தொடர்பாக ‘வின்’ தொலைக்காட்சி ஏற்பாடு செய்திருந்த விவாதத்தில் எழுத்தாளர்கள் ஞாநி, சூரிய தீபன், ஓவியா, ஆகியோர் பங்கு கொண்டு, பெரியார் நூல்கள் நாட்டுடைமை யாக்கப்படவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திப் பேசினர். சி.ஆர்.பாஸ்கரன் நிகழ்ச்சியை வழி நடத்தினார். ஞாநி கூறுகையில், கல்கியின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டதால், அவர் எழுதிய ‘பொன்னியின் செல்வன்’ நாவல், புத்தக கண்காட்சியில் அனைத்து அரங்குகளிலும் விற்பனை யாகிறது. அதேபோல் பெரியார் நூல்களும் அனைத்து புத்தக விற்பனை நிலையங்களிலும் கிடைக்கக்கூடிய நிலை உருவாக வேண்டும். பெரியாரின் நூல்களை பரவலாகக் கொண்டு செல்ல முடியவில்லை. இந்த நிலையில், அதைக் கொண்டு செல்ல முன்வரும் பெரியார் திராவிடர் கழகத்தினரை ஏன் தடுக்க வேண்டும்? பெரியார் கொள்கைகளைப் பரப்பும் முயற்சியில் பல்வேறு இயக்கங்களும், பங்கேற்க முன் வந்தால், பெரியார் கொள்கைகளை இன்னும் வேகமாகப் பரப்ப முடியும்; அதைத் தடுப்பது சரியல்ல என்றார்.

திராவிடர் கழகத் துணைப் பொதுச் செயலாளராக உள்ள துரை. சந்திரசேகர், தொலைபேசி வழியாக நிகழ்ச்சியில் பேசுகையில், பெரியார் தனது எழுத்துகளுக்கு, பதிவு உரிமை பெற்றுள்ளார் என்றும், பெரியார் கருத்துகளை திருத்தி வெளியிட்டு விடக் கூடாது என்ற நோக்கத்தில் தான், தமது கழகம், மற்றவர்கள் வெளியிடுவதை எதிர்க்கிறது என்றும் கூறினார்.

அதற்கு சி.ஆர். பாஸ்கரன், “நூல்களை வெளியிடும் பெரியார் திராவிடர் கழகமும், பெரியார் அமைப்பு தானே; அவர்களே பெரியார் கொள்கைகளைத் திருத்தி வெளியிடுவார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?” என்று கேட்டார். பதிலளித்த துரை. சந்திரசேகர், “பெரியார் திராவிடர் கழகம் வெளியிடுவதை நாங்கள் எதிர்க்கவில்லை; மற்றவர்கள் வெளியிடுவதைத்தான் கூறுகிறோம்” என்று கூறினார். (துரை. சந்திரசேகர் தெரிவித்த கருத்து, அவரது கட்சித் தலைமையின் கருத்தா என்பது நமக்குத் தெரியாது) அப்படி ஏதேனும் பெரியார் கருத்து திருத்தி வெளியிடப்பட்டால், அதை சுட்டிக்காட்டி திருத்த வேண்டுமே தவிர, அதற்காக, எவருமே வெளியிடக் கூடாது என்று கூறுவது சரியல்ல என்று ஞாநி குறிப்பிட்டார்.

ஓவியா கூறுகையில், பெரியார் கருத்துகளை எவ்வளவோ பேர் திரித்து, பெரியாரை கொச்சைப்படுத்திய போதெல்லாம், இவர்கள் நீண்ட மவுனம் சாதித்தது ஏன் என்று கேட்டார். பெரியார் கருத்தை திரித்து பிரச்சாரம் செய்த போது மவுனம் சாதித்தவர்கள், இப்போது பெரியார் திராவிடர் கழகம், ‘குடிஅரசை’ வெளியிடும்போது, அதே போல் மவுனமாவது சாதித்திருக்கலாம். ஆனால் இப்போது மவுனத்தைக் கலைத்துவிட்டு, தடுக்க முன் வருகிறார்கள் என்றார்.

சூரிய தீபன் பேசுகையில், “பாரதியின் பாடல்கள் மார்வாடியிடம் அடகு வைக்கப்பட்டிருந்தது; அதை திரைப்பட அதிபர் ஏ.வி. மெய்யப்ப செட்டியார் மீட்டு, பாரதியின் பாடல்களை இசைத் தட்டுகளாக வெளியிட்டார். பிறகு வல்லிக்கண்ணன் போன்ற தமிழறிஞர்கள் முயற்சியால் நாடு முழுதும் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டு, அன்றைய முதல்வர் ஓமந்தூர் ராமசாமி அவர்களிடம் அளித்து, நாட்டுடைமையாக்க வலியுறுத்தினர். அப்போதுதான் பாரதி பாடல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டது. அதன் காரணமாகத்தான், இன்று அனைத்து பதிப்பகங்களும் பாரதி கவிதை நூல்களை வெளியிட்டு வருகின்றன” என்றார்.

பெரியாருடைய கருத்துகளை தவறாக திரித்து விடுவார்கள் என்று இப்போது கூறுகிற வீரமணி போன்றவர்கள்தான், பெரியார் கொள்கைக்கு நேர் எதிரான ஜெயலலிதாவோடு பெரியாரையும் இணைத்து படங்களை வெளியிட்டு, பெரியாரின் கொள்கை எதிரிகளோடு கைகோர்த்து நின்றார்கள் என்று சுட்டிக்காட்டினார்.

தொலைபேசி வழியாக பேசிய பெரியார் திராவிடர் கழகத் தோழர் சிற்பி ராசன் வீரமணி நடத்தும், நிறுவனங்கள், வர்த்தக மயமாகி விட்டன என்று கூறியதோடு, ஒரு கட்டத்தில் பெரியாரே, கல்வி நிறுவனங்களைத் தொடங்கக் கூடாது என்று முடிவெடுத்து - அரசிடம், கல்லூரி தொடங்குவதற்கான இடத்தையும், பணத்தையும் வழங்கினார். இப்படி முதல்வராக இருந்த பக்தவத்சலத்திடம், பெரியார் வழங்கிய இடம் நிதியால் உருவானதுதான். இப்போது திருச்சியிலுள்ள பெரியார் ஈ.வெ.ரா. அரசு கல்லூரி என்று குறிப்பிட்டார்.

விவாதத்தில் பங்கேற்ற அனைவருமே - பெரியார் திராவிடர் கழகத்தின் முயற்சியை ஆதரித்தும், பெரியார் நூல்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது. ✦

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

- பெரியார் எந்த காலத்திலும், தனித் தமிழ்நாடு கேட்டதே இல்லை என்று வீரமணிகள் விஷ பிரச்சாரம் செய்ய முடியாது.
- கால வரிசைப்படி தொகுப்பு வெளியிடுவதை எதிர்க்கும் பின்னணி இது தான்.

கி.வீரமணி எப்போதும், கலைஞரிலிருந்து - மாயாவதி - சோனியா காந்தி வரை பாராட்டுகளை யும், ஆலோசனைகளையும் வண்டி வண்டியாக முன் வைத்து அறிக்கைகள் எழுதிக் குவிப்பதை தமிழ் கூறும் நல் உலகம் நன்றாகவே அறியும். ஆனால், ஒரே ஒரு பிரச்சினையில் மட்டும், இவர் ஆலோசனையைத் தாமாக முன் வந்து வைக்க தயாராகவே இல்லை. பெரியார் நூல்களை “அரசுடைமையாக்க வேண்டும் என்பதில் உங்களது கருத்து என்ன?” என்று ‘ஆனந்த விகடன்’ செய்தியாளர் கேட்ட கேள்விக்கு - கி. வீரமணி தந்துள்ள பதில், “அரசாங்கம் கேட்டால் அப்போது சொல்கிறோம்” என்பதாகும். அரசாங்கம் கேட்ட பிறகு, தனது ‘விலை மதிப்பு மிக்க’ ஆலோசனையை வழங்குவதற்காக, கி. வீரமணி அவர்கள் ஒதுக்கி வைத்திருக்கும் ஒரே பிரச்சினை, பெரியாரின் நூல்களை தேசவுடைமையாக்குதல் பற்றியது தான்.

“நாங்கள் திறந்த புத்தகம், எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும் வெளிப்படையாகவே செய்வோம்” என்று கி.வீரமணி அடிக்கடி உச்சரிக்கும் வசனத்துக்கு அர்த்தம் “கேட்டால் தான் சொல்வோம்” என்பது தானோ? ✦

# ‘குறுந்தகடு’ எப்போது வந்தது?

***‘குடிஅரசு’ இதழ்களும்கூட, குறுந்தகடுகளாக வெளியிடப்பட்டுள்ளன. அப்படி வெளியிடப்பட்டவைகளை நூல்களாகத் தொகுத்து சிலர் வியாபாரம் செய்யப் பார்ப்பது அறிவு நாணயமான செயலா? - என்று ‘விடுதலை’யில் தி.க. பொதுச் செயலாளர் கலி. பூங்குன்றன் கேள்வி எழுப்பியுள்ளார்.***

பெரியார் திராவிடர் கழகம், 2003 ஆம் ஆண்டு ‘குடிஅரசு’ முதல் தொகுப்பை வெளியிட்ட பிறகு தான், மக்கள் மன்றத்தில் அம்பலமாகி விடுவோம் என்ற பதைபதைப்பில் - திராவிடர் கழகம் ‘குடிஅரசு’ குறுந்தகடுகளைக்கூட வெளியிட முன் வந்தது, இது, கலி.பூங்குன்றனுக்கு தெரியுமா? தெரியாதா?

அப்படி - குறுந்தகட்டை வெளியிட்டு, அடுத்து சில நாட்களிலேயே குறுந்தகட்டில் சில தவறுகள் நடந்துள்ளதால், அதை வாங்கியவர்கள், உடனே திருப்பித் தருமாறு, ‘விடுதலை’யில் அறிவிப்பு வெளியிடப்பட்டதே; அது ‘விடுதலை’யின் ‘பொறுப்பு - ஆசிரியராக’ இருக்கும் கலி.பூங்குன்றனுக்கு தெரியாமல் போய் விட்டதா?

அப்படி - திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்று அறிவித்த பிறகு, இதுவரை, அந்தக் குறுந்தகடுகள், மீண்டும் விற்பனைக்கு கொண்டுவரப்பட்ட அறிவிப்பு ஏதும் ‘விடுதலை’யில் வெளிவரவில்லை என்பதும் அவருக்கு தெரியுமா? தெரியாதா?

விற்பனைக்கு வந்த ‘குடிஅரசு’ குறுந்தகடுகளை திரும்ப ஒப்படைக்கச் சொன்ன ஒரே பிரச்சார இயக்கம் - வீரமணியின் இயக்கமாகத்தான் இருக்க முடியும். உலகத்திலே தனித்தன்மை வாய்ந்த இயக்கம் இது ஒன்று தான் - என்று இதே கட்டுரையில் கலி. பூங்குன்றன் எழுதியதற்கான காரணம் இதுதான் போலிருக்கிறது.

‘குடிஅரசு’ குறுந்தகடுகளை திரும்ப ஒப்படைக்காதவர்கள், ‘கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய துரோகிகள்; கழகம் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கும்’ என்றுகூட இவர்கள் அறிவித்திருந்தாலும், வியப்பதற்கு இல்லை.

ஆதாரங்களையும், ஆவணங்களையும் கோப்பு கோப்புகளாக அடுக்கி வைத்துக் கொண்டு, அவ்வப்போது ‘தூசி தட்டி’ எடுத்து, சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல் வீரமணியை ‘ஜாக்கி’வைத்து தூக்க முயற்சிக்கும், கலி. பூங்குன்றனாரின் ஆதாரக் கோப்புகளில் - இவைகள் வராமல் போய்விட்டதோ!

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 2451 2857

**கண்டன ஆர்ப்பாட்ட செய்திகள் அடுத்த இதழில்...**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 30th August 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.